Registered as a News Paper
பக்கம் - 24

14/10/2005

www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 34 | 14 - 20 - ஒக்டோபர் - 2005



## ஐரோப்பிய யூனியனின் பயணத்தடை...



## தளையழித்து பகைவென்ற வீரன்...






## சோபை இழந்து காணப்படும் மன்னார் மாவட்டம்

# கல்விக் கோட்பாட்டு முரண்கள்

உலக ஆசிரியர் நாள் 1990 ஆம் ஆண்டில் சர்வதேச ஆசிரியர் சம்மேளனத்தின் முயற்சியின் பயனாக உருவாக்கம் பெற்ற ஒன்றாகும். இன்று அதன் அர்த்தம் பல்வேறு கருத்துருவாக்கப் பரிமாணங்களைப் பெற்று பல்வேறு வியாக்கியானங்களையும், விளக்கங்களையும் வெளிப்படுத்தும் ஒன்றாக மாறிவிட்டது. தொழிற் சங்க ரீதியாக தமது தேவைகள் வேண்டுகைகளை வெளிப்படுத்தி போராட்டத்தில் குதிக்கும் செயற்பாடுகள் ஒருபுறம், பெற்றோர் மாணவரால் பாடசாலைகளில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படும் பண்பாட்டு ரீதியான கோலம் இன்னொருபுறம், ஆசிரியர்கள் ஆளுமைத் திறன்களை வெளிக்கொணரும் செயற்பாடு வேறொரு பக்கம் என பல்வேறு பரிமாணங்களுடன் நடந்து முடிந்துவிட்டது.



இதில் நாளாந்த நடைமுறைக்கும் கல்விக் கோட்பாடுகளுக்கும் அது சார்ந்த வேலைத்திட்டங்களுக்கும் இடையே உள்ள முரண்களின் வெளிப்பாட்டுடன் நடந்து முடிந்த ஆசிரியர் தின விழாவின் குறுக்கறுப்புப் பார்வை (Cross Section View) ஒன்றை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்காகும்.

கிளிநொச்சியைப் பொறுத்தவரை அதன் வலயப் பணிமனையின் ஏற்பாட்டில் வினைத்திறனுடன் வெளிக்கொணரப் பட்ட ஆசிரியர் விளையாட்டு, நடனம், நாடகம், இசை நிகழ்ச்சி, கவிதை, கட்டுரை, ஆசிரிய வாண்மை போட்டிகள் என்பன சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. ஆசிரியர்கள் மாணவர்களின் சிறப்பான பாத்திரமாதிரி (Role model) என்பதை வலியுறுத்தி வெளிக்கொணர்ந்த இப் போட்டிகள் சிறப்பாக அமைந்திருந்தன. எனினும் ஆசிரிய ஆளணித் தொகையுடன் ஒப்பிடும்போது பங்கு பற்றியோர் வீதம் மிகக் குறைவாக இருந்தமை ஆசிரிய ஆளணித் தொகையினரின் திறன் வெளிப்பாட்டில் தயக்கம் காட்டும்படியான தடைகள் ஏதும் இருந்ததோ என எண்ணத் தோன்றுகிறது.

இது கிளிநொச்சி மாவட்டத்திற்கு மட்டுமல்ல வடக்கு-கிழக்கு முழுவதிலும் இவ்வாறான போக்கு இருந்ததை கடந்த காலங்களில் சிறிலங்கா மனிதவள அபிவிருத்தி கல்வி கலாச்சார அமைச்சினால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றியோர் தொகை குறைவு மூலமும் உணர முடிந்தது. அது மட்டுமல்ல, அன்று இடம் பெற்ற அரங்க நிகழ்வுகளிலும், ஆடுதல், பாடுதல், கூத்தாடுதல் என்பவற்றில் தடைகளைக் கடந்து தங்கள் தங்கள் திறன்களை வெளிக்கொணர்ந்தவர்களைப் பாராட்டுதலிலும் (கைதட்டி) தயக்கம் தொனிந்ததை அவதானிக்க முடிந்தது.

ஒருவேளை ஆடுதல், பாடுதல் போன்ற மனக் கிளர்ச்சி தரும் நிகழ்வுகள் சாதாரண மனிதர்களுக்கு உரியவை. ஆசிரியத்துவம் இவற்றையெல்லாம் கடந்த மனப்பாங்குடன் இருக்கவேண்டும் என்பது போன்ற கோட்பாடுகளால் காட்டப்பட்டிருந்தார்களோ தெரியவில்லை. எனினும் பங்குபற்றிய எல்லோராலும் பாராட்டப்பட்ட வகையில் இதன் ஏற்பாடுகள் அமைந்திருந்ததை அங்கு பங்கு பற்றிய பெரும் பாலானோர் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

"பயிற்சியூடாக வலுமிக்க ஆசிரியர் அணியாக உருவாகுவோம்" என்பது இவ்வருட ஆசிரிய நாளின் தொனிப் பொருளாகும் என்றார். தமது உரையில் கிளிநொச்சி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் திரு.த.குருகுலராஜா. இவையிரண்டும் பிரிக்கப்பட முடியா இரட்டைப் பிறவிகள் எனத் தெரிவித்த அவர் கிளிநொச்சி வலயத்தின் ஆரம்பக் கல்விச் செயற்பாட்டிலும், இரண்டாம் நிலைக் கல்வியிலும் தேர்ச்சி மட்ட சுட்டிகள் ஆபத்தான நிலையைச் சுட்டி நிற்கின்றன என்றார்.

பயிற்சி மூலம் வலுமிக்க ஆசிரிய படையை உருவாக்குதல் பற்றிய கருத்துநிலை வலுமிக்கதாக அமைய ஆசிரியர்களின் அரங்காற்றுகை பயிற்சிச் செயலமர்வுகள் ஆசிரியர்கள் முதுகில் சுமைகளாக ஏற்றப்படுவதை காட்சிப்படுத்தியது. ஆசிரியர்கள் அதிகளவிலான செயலமர்வுகளை நோக்கி இழுக்கப்படுவதனால் அவர்களின் நாளாந்த கற்பித்தல் கடமைகளில் தடங்கல் ஏற்படுவதோடு, சனி, ஞாயிறு, வருடப்பிறப்பு, தீபாவளி என மானிட வாழ்வின் அனுபவிப்புக் களையும் இழந்து உடல் உளச் சோர்வுக்கு ஆளாவதையும் சுட்டி நிற்கின்றது.

எனவே பயிற்சி செயலமர்வுகள் அது நிகழ்த்தப்படும் காலங்களால் அளக்கப்படுவதை விட வினைத்திறன் மிகுந்த அதன் வெளிபாடுகளால் அளக்கப்படும் போதும் வலுமிக்க ஆசிரியர் அணியின் உருவாக்கம் வேகம் பெறும். பெரும்பாலான வெளி மாவட்டங்களில் உள்ளது போன்று ஞாயிறு ஓய்வு என்பது அல்லது வாரத்தில் ஒருநாள் ஓய்வு என்பது உளச் சோர்வினைக் குறைக்கும்.

எமது சிந்தனைகளும் கல்விச் செயற்பாடுகளும் மாற்றத்தை தூண்டுபவையாக அமைய வேண்டும் எனத் தெரிவித்த வலயக் கல்விப் பணிப்பாளர் எமது ஆரம்பக் கல்வி இரண்டாம் நிலைக் கல்வி தேர்ச்சி ஆரோக்கியமாகத் தெரியவில்லை என்றார். "ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவோம்" என்பதே எமது கல்வி வலயத்தின் மகுட வாக்கியமாக எழுதப்பட்டுள்ளது எனவும் தெரிவித்திருந்தார்.

ஆசிரியர் தின நிகழ்வின் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த யாழ் பல்கலைக்கழக நுன்கலைப் பீடத்தலைவரும் கல்வியாளருமான கலாநிதி சபா ஜெயராஜா கல்வி என்பது ஆக்கும் திறன் விருத்தி, சமூக நலன்களின் மீதான அக்கறை பற்றிய விருத்தி என்பவற்றை உள்ளடக்கியதாக அமையவேண்டுமேயன்றி வெறுமனே பரீட்சைப் பெறுபேறுகளின் சுட்டிகளின் அடிப்படையில் வரையறுக்கப்படும் ஒன்றாக அமையக்கூடாது எனவும் தெரிவித்தார்.

இதனையே எமது மண்ணின் விளையாட்டுச் சாதனை யாளரும் கல்வியியலாளருமான கலாநிதி எதிர்வீரசிங்கம் விளையாட்டு, கல்வி, பண்பாடு, சமூக நலன் அக்கறை எனத் தனித் தனித் துறைகளாக பிரித்துப் பார்க்காது எல்லாவற்றையும் ஒன்றிணைத்து கல்விச் செயற்பாட்டின் முழுமையாக (Whocagtic) நோக்க வேண்டும். என தமது செவ்வி ஒன்றில் தெரிவித்திருந்தார். ஆனால் ஆசிரியர்கள் நாடகத்தில் இவ்வாறான இணைப்பாட முயற்சிகள் கல்விக்கு இடை..றான ஒன்றாக வெளிப்படுத்தியிரு..மை கல்வி பற்றிய தவறான கருதுகோள்களை வலுப்படுத்துபவையாக அமைகின்றன. இந்த நாடகத்தை பொறுத்தவரை ஆரம்பத்தில் ஆசிரியர் வாழ்வின் நடைமுறைகளை அழகியல் வெளிப்பாடுகளுடன் ஆற்றுப்படுத்தியிருந்த போதும் பிற்பகுதிகளில் அழகியல் வெளிப்பாடுகள் குறைவடைந்திருந்தன.

ஆனால் மாணவர்களே கல்விச் செயற்பாட்டின் எஜமானர்கள், அவர்களின் நலன்கள் பேணப்படுவதே முதன்மைப்ப..த்தப்பட வேண்டும் என்பது வெளிப்படுத்தப்பட்டதுநன்றாக அமைந்திருந்தது. மாணவர்களின் நலன்கள், அவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சி என்பவற்றை கருததில் கொண்டு ஆசிரியர், அதிபர், அதிகாரிகள் என்போர் செயலாற்றும் போது சிறப்பான சமூகத்தின் தேவைகளை, தேசிய நிர்மாணத்தை எதிர்கொள்ளும் கல்விக் கட்டமைப் போன்றை உருவாக்க முடியும். இதற்கான கல்விக்கட்டமைப்பொன்றை உருவாக்கும் பொறுப்பும் கல்விச் சமூகத்திடமே இன்று கையளிக்கப் பட்டுள்ளது.

இன்று உலகமெங்குமே ஆதிக்கம் பெற்றுள்ள உலகமயமாதல் கோட்பாடும் அறிவையும், அறிவு சார் திறன்களையும் மையமாகக் கொண்ட ஒரு கட்டமைப்பின் மீதே நிறுவப் பட்டுள்ளது.

**சஞ்சிகா**

---

சிறிலங்கா ஒரு பெரும் தேர்தலை நோக்கி களத்தில் குதித்திருக்கிறது. பலர் அதில் நீச்சலடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பொது மேடைகளில் பிறரை தூற்றுதல், இகழ்தல், கேவலப்படுத்திப் பேசுதல், பரிகாசம் செய்தல், கண்டனம் செய்தல், பிறரைத்தாழ்த்திப் பேசுதல், கோரிக்கைகளை முன்வைத்தல் எனப் பட்டியலை நீட்டிக் கொண்டிக்கிறார்கள் நீச்சலடிக்கும் அரசியல் வாதிகள்.

அநியாயங்களைக் கூட அமைதியாக அணுகாமல் அடாவடித்தனமாக அணுகும்




## நீச்சலடிக்கும் அரசியல்..!

சிறிலங்கா இனவாதிகளின் மனவியல்பை எந்த உளவியல் அறிஞர்களாலும் புரிந்துகொள்ள முடியாது. அரசியல்வாதிகள் பதவிக்காக தன்மானமிழந்து தெருவெளியில் கூச்சலிட்டுக் கொள்வதோடு, பணம் சம்பாதிக்கும் திருட்டு வழிகளையும் கண்டறிவதில் தவறவில்லை. பதவி, பணம் என்பவற்றை முன்நிலைப்படுத்தி தேர்தலில் குதித்த இவர்களுக்கு தமிழனின் நிலை எப்படித் தெரியப்போகிறது?

அரசியல் இலாபம் கருதும் இவ் இனவாதிகள் நல்லவர்களை ஒரு போதும் ஆலோசகர்களாகக் கொள்வதில்லை. முட்டாள்கள் என்று சொல்லப்படுபவர்கள் அதாவது "யார் தனக்குத்தானே வக்கீலாக இருந்து கொண்டு தன் வழக்கை வாதாடுகிறானோ அவனே முட்டாள்கள்" இப்படிப்பட்டவர்களையே இனவாதிகள் ஆலோசகர்களாக நியமித்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் சில இனவாதிகள் தமக்கு எல்லாம் தெரியும் என்று கூறிக்கொண்டு ஆலோசகர்களே வேண்டாம் என்று தான் தோன்றித்தனமான முடிவுகளை எடுத்து வருகின்றனர்.

இதனால் சிறிலங்கா அரசு கட்டுப்பாடுகளற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டியாக இருந்துவருகிறது. ஆட்சியாளர்களே சட்டங்களை மீறும் போது சமுதாயத்தை எப்படி சீர்செய்வது? ஊழல்கள் நிறைந்த சமுதாயத்தை கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு பொதுத் தேர்தலில் ஊழல்கள் நடைபெறக் கூடாது என்று பறைசாற்றிச் செய்திகளைப் பரப்புவது வேடிக்கையாக இருக்கிறது.

இப்படியாக சிறிலங்கா இனவாதிகளின் செயல்திறன் செல்லும் வேளை தமிழர்கள் நாம் எம்மையும் எமது செயல்திறன்களையும் ஒருதரம் பார்க்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் சிறிலங்கா இனவாதிகளின் ஊழல் நிறைந்த சமுதாயத்திற்குள் அகப்பட்டு துடிப்பவர்கள் நாம் என்பதால் தமிழர்களாகிய எங்களால் எமது அறிவுக்கும் திறனுக்கும் ஏற்ற ஒரு உன்னதமான சமுதாயத்தை உருவாக்க முடியும். அதற்காக ஒரு தலைவனின் கீழ் அணிதிரண்டவர்களாக நாங்கள் இருக்கின்றோம். விடுதலைப்புலிகளை அரசு ஐரோப்பியப் பயணங்களில் தடைசெய்தோ அல்லது அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியோ பயங்காட்டத் துணிய வேண்டாம். நாங்கள் சுயமரியாதைக்காரர். எனவே பிறரை இழிந்து பேசும் ஆணவம் எமக்கு இல்லை. ஈ.பி.டி.பி, ஜே.வி.பி, ஜாதிகஹெலஉறுமய போன்ற கட்சிகள் இதை உணர வேண்டும்.

தமிழனுடைய அறிவுக்கும் திறனுக்கும் ஏற்ற ஒரு உன்னதமான சமுதாயத்தை எங்களால் உருவாக்கமுடியும். அதை உருவாக்குவோம். தலைவன் பாதையில் அணிதிரண்ட நாம் சிறிலங்கா இனவாதிகள் விரித்திருக்கும் சமாதான வலையில் இனியும் விழமாட்டோம். எங்கள் இனத்தை எங்கள் நாட்டை பாதுகாத்து கட்டியெழுப்புவோம் நம்புங்கள்.

**அகவிழி**

# ஐரோப்பிய யூனியனின் பயணத்தடை; மெய்யாகவே தமிழர்களுக்கு ஒரு பின்னடைவா?





புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய யூனியன் எடுத்திருக்கும் முடிவு தமக்குக் கிடைத்த ஒரு ராஜீய வெற்றியாக சிங்கள ராஜதந்திர வட்டாரங்களில் கொண்டாடப்படுகிறது. கொழும்பில் உள்ள அநேகமான சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களிலும் இது கொண்டாடப்படுகிறது. தமிழர்கள் மத்தியில் சில வட்டாரங்களில் அது ஒரு ராஜதந்திர வீழ்ச்சியாக அல்லது பின்னடைவாக சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆனால் இந்த இரண்டு மதிப்பீடுகளுமே மிகையானவை. உண்மையில் ஐரோப்பிய யூனியனின் முடிவு எனப்படுவது சிங்கள ராஜதந்திரிகள் கொண்டாடுவது போல ஒரு மகத்தான வெற்றியுமல்ல சில தமிழ் வட்டாரங்களில் கூறப்படுவது போல பாரதூரமானதுமல்ல. மெய்யான வார்த்தைகளில் கூறின் இது ஒரு செல்லக் குட்டு மட்டுமே. புலிகளுக்கு பாதகமான ஒரு முடிவை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதே சமயம் அந்த நகர்வு புலிகளை சமாதான வழிவகைகளில் இருந்து தனிமைப்படுத்துவதாகவோ அல்லது புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானத்துக்கான வலுச் சமநிலையை பாரதூரமான அளவுக்கு மாறிவிடாதபடிக்கோ பார்த்துக்கொள்ளவும் வேண்டியிருக்கிறது. எனவே புலிகளுக்கு எதிராக ஏதோ ஒரு நடவடிக்கை எடுத்ததுபோலவும் இருக்கவேண்டும். அதேசமயம் அது புலிகளுக்கு கடுமையாக நோகாமலும் இருக்க வேண்டும். இந்த அடிப்படை யிலேயே இது ஒரு செல்லக்குட்டு எனலாம்.

உண்மையில், கதிர்காமருக்குப் பின்பு கொழும்பிலும் மேற்கு நாடுகளின் தலைநகரங்களிலும் முடுக்கிவிடப்பட்டிருக்கும் ராஜதந்திர நடவடிக்கைகளை பொறுத்தவரை இது சிங்கள ராஜதந்திரிகள் எதிர்பார்ப்பதை விடவும் பெறுமதி குறைந்த ஒரு “வெற்றி”தான்.

கதிர்காமர் ஒரு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் தயாரிப்பு. ஐரோப்பிய அறிவியல் பண்பாட்டில் மிகவும் மதிக்கப்படும் ஒரு அறிவியல் மையமான ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் உருவாக்கமாகிய கதிர்காமரை மேற்கு நாடுகள் தமது பெருமைக்குரிய கறுப்பு வாரிசாகவே -ஆசிய வாரிசாகவே- கருதுகின்றன. இது முதலாவது.

இரண்டாவது, தற்சமயம் ஐரோப்பாவில் உள்ள பெரும்பாலான தலைவர்கள், ராஜதந்திரிகள், கொள்கைவகுப்பாளர்கள் போன்றோருக்கு கதிர்காமரை நேரில் தெரியும். எனவே அவர் கொல்லப்பட்டபோது அதன் தாக்கத்தை அவர்கள் தனிப்பட்ட முறையில் உணர்ந்திருக்கக் கூடும். இந்த இரண்டு காரணங்களின் பின்னணியில் கதிர்காமர் கொல்லப்பட்டதால் உருவாகிய ஒருவித அனுதாபகரமான ராஜதந்திரச் சூழலை மிகவும் சமயோசிதமாகக் கையாள்வது என்று சிறிலங்கா அரசு முடிவெடுத்திருக்கிறது. கடந்த சுமார் மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக மேற்கத்திய ராஜதந்திர அரங்கில் புலிகளின் மதிப்பு படிப்படியாக உயர்ந்து வருவதை கவலையோடும் ஆத்திரத்தோடும் பார்த்துக்கொண்டிருந்த சிங்கள ராஜதந்திரிகள் கதிர்காமர் கொல்லப்பட்டதன் பின் உருவாகிய அனுதாபகரமான சூழலை முழுஅளவு பயன்படுத்துவது என்று முடிவெடுத்திருக்கிறார்கள்.

இந்த ராஜதந்திர முயற்சிகளின் உச்சமாக திருமதி சந்திரிகாவின் அண்மைக்கால மேற்கத்திய பயணங்கள் அமைந்திருக்கின்றன. மரபு ரீதியிலான அரசுகளுக்கிடையிலான ராஜிய உறவுகளின் அடிப்படையில் இது திருமதி சந்திரிகாவுக்கும், சிங்கள ராஜதந்திரிகளுக்கும் ஒப்பீட்டளவில் இலகுவானதாகக் காணப்படுகிறது. எனவே புலிகளுக்கு எதிராக முடிவெடுக்குமாறு ஐரோப்பிய யூனியனை அவர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள்.

இது விசயத்தில் புலிகளை இப்போதும் தடைசெய்து வைத்திருக்கும் பிரிட்டன், ஐரோப்பிய யூனியனின் தலைமைப் பொறுப்பில் இருப்பது அவர்களுக்கு மேலும் வசதியாகிவிட்டது. தவிர, பிரிட்டன் அண்மையில் அங்கு நிகழ்ந்த குண்டு வெடிப்புக்களால் தீவிரவாதத்திற்கு எதிராகக் கடும் கோபத்துடன் இருக்கிறது.

இவை எல்லாவற்றுடனும் சேர்த்து மற்றொரு விசயமும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். அது எதுவெனில்... தமிழர் பகுதிகளில் ஒருவித யுத்தபீதி உருவாகிவருவது குறித்து மேற்கு நாடுகள் கவலைப்படுகின்றன. எனவே ஒரு யுத்தத்திற்கு போகாமல் புலிகளைத் தடுக்கும் நோக்கமும் அதோடு முக்கியமாக, வரும் சனாதிபதித் தேர்தலில் தமிழர்களை வாக்களிக்கத் தூண்டும் ஒரு முடிவை நோக்கி புலிகளை ஊக்குவிக்கும் நோக்கமும் இந்தத் தடைக்குள் இருக்கமுடியும்.

எனவே இந்த எல்லாக் காரணிகளும் சேர்ந்து ஐரோப்பிய யூனியனை புலிகளுக்கு சாதகமற்ற ஒரு முடிவை நோக்கி இட்டுச் சென்றிருக்கமுடியும்.

ஆனால் தான் எடுக்கப் போகும் எந்த ஒரு முடிவும் சமாதானத்தின் வலுச் சமநிலையை பாரதூரமான் அளவுக்கு பாதிக்காதிருக்கவேண்டும் என்ற கரிசனை மேற்படி தடைக்குள் பொதிந்து கிடக்கிறது.

சந்திரிகாவும் அவருடைய ராஜதந்திரிகளும் விரும்பியது புலிகள் இயக்கத்தை ஐரோப்பாவில் தடைசெய்ய வேண்டும் என்றே. ஆனால் அது நடக்கவில்லை. பதிலாக புலிகள் அந்த நாடுகளுக்குப் பயணம் செய்யமுடியாது என்ற ஒரு பயணத்தடையே விதிக்கப்பட்டுள்ளது. அதுவும் கூட தற்காலிகமானது என்றே வியாக்கியானம் செய்யப்படுகிறது. எனவே இத்தடை மூலம் சிங்கள ராஜதந்திரிகள் பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. மாறாக இந்த பயணத்தடை மூலம் தமிழர்களுக்கு எதிராக அவர்கள் பெறக்கூடிய வெற்றிகளுக்கிருக்கும் வரையறைகளே உணர்த்தப்பட்டிருக்கின்றன. அதாவது புலிகளை ராஜதந்திர ரீதியாக எதுவரை முடக்கலாம் என்பதில் உள்ள வரையறைகள் உணர்த்தப்பட்டிருக்கின்றன.

இப்படிப் பார்த்தால் இதில் தமிழர்கள் கவலைப்படுவதை விடவும் உற்றுக்கவனித்துச் சிந்திக்கவேண்டிய ஒரு செய்தி இருக்கிறது. அது என்னவெனில் ஐரோப்பிய யூனியன் புலிகளை இன்னமும் தடை செய்யவில்லை என்பதே அது. சிங்கள ராஜதந்திரிகள் அவர்கள் எதிர்பார்த்த உச்ச வெற்றியை பெற முடியவில்லை என்பதே அது. அதாவது இந்த பயணத் தடைமூலம் சிங்கள ராஜதந்திரத்திற்கு இருக்கக்கூடிய வரையறைகள் உணர்த்தப்பட்டிருக்கின்றன. இதை மறுவளமாகச் சொன்னால் சர்வதேச அளவில் புலிகளின் பேரம் பேசும் சக்தி எந்த நிலையில் உள்ளது. என்பதை இது உணர்த்தியிருக்கிறது எனலாம்.

எனவே இதன்படி கூறின் சிங்கள ராஜதந்திரிகள் இந்த தடையை யிட்டு அதிருப்திப் படவேண்டுமே தவிர வெற்றி கொண்டாட முடியாது. அது போலவே தமிழர்களும் பெரியளவில் மிரட்சியுறத்தேவையில்லை.

உண்மையில் இது விசயத்தில் அதிகம் விசனப்பட வேண்டியது மேற்கு நாடுகள்தான். ஏனெனில் இலங்கைத் தீவின் சமாதான முயற்சிகளில் அவர்களே அனுசரணையாளராகத் தொழிற்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் சமாதானத்தில் ஈடுபடும் ஒரு தரப்பை ராஜதந்திர ரீதியாக தனிமைப்படுத்தி வலுச் சமநிலையை தனக்குச் சாதகமாக மாற்றி விட வேண்டும் என்ற வேட்கையோடு மற்றொரு தரப்பு மேற்கொண்டு வரும் சகல முயற்சிகளும் ஒன்றை விளங்கிக்கொள்ள போதுமானவை. அது என்னவெனில் சமாதானத்தின் பெயரால் தமிழர்களை தோற்கடிக்கவே கொழும்பு விரும்புகிறது என்பதே. அதாவது யுத்தத்தின் போதிருந்த அதே மனோநிலைதான் சமாதானத்தின் போதும் தொடர்ந்தும் இருந்து வருகிறது என்பதே.

இது உண்மையில் சமாதானத்தின் இதயத்தையே தாக்கக்கூடிய ஒரு அம்சம். சமாதானம் எனப்படுவது பரஸ்பரம் விட்டுக்கொடுத்து, பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் நம்பிக்கைகளையும் கட்டியெழுப்புவதே. இதில் யாரும் யாரிடமும் தோற்பது கிடையாது. மாறாக இருதரப்புமாகச் சேர்ந்து வெற்றிகளைப் பங்கிடுவது தான் மெய்யான சமாதானம்.

ஆனால் இங்கேயோ ஒரு தரப்பை மற்றொரு தரப்பு தடைசெய்யுமாறு கூறுகிறது. இத் தடைமூலம் புலிகளை சமாதானம் செய்யும் நாடுகளுடன் முரண்பட வைப்பதே கொழும்பின் நீண்ட கால நோக்கம். அதாவது சமாதானம் செய்ய வருபவர்களை ஒரு கட்டத்தில் தமிழர்களுடன் முரண்படவைத்து மோதவிடுவது.

இதை இன்னும் தெளிவாகச் சொன்னால்.... ரெப்றியை அதாவது நடுவரை போட்டிக்குள் இழுத்து மோதும் ஒரு தரப்பாக மாற்றிவிடுவது.

முன்பு ஜெயவர்த்தன, இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது இதைக் கனகச்சிதமாகச் செய்தார். அவர் வைத்த பொறிக்குள் அனுபவம் மிகக் குறைந்தவரும் உரிய ஆலோசகர்களை மதியாதவருமாகிய ராஜீவ்காந்தி இலகுவாய் வீழ்ந்தார்.

இப்பொழுது சந்திரிகாவின் முறை. சிலசமயம் ரணிலோ அல்லது மகிந்தவோ வந்தாலும் அவர்களும் கூட இதைத்தான் செய்ய முயல்வார்கள். நடுவரை விளையாட்டு வீரராக மாற்றி விடுவது.

**நிலாந்தன்**

ஆனால் கொழும்பு வைத்திருக்கும் இந்த ராஜதந்திரப் பொறிக்குள் ஐரோப்பிய யூனியன் முற்று முழுதாகக் காலை வைக்கவில்லை என்றே தோன்றுகிறது. புலிகளைத் தடை செய்யாமல் பயணத்தடை மட்டும் விதித்ததன் மூலம் முன்பு இந்தியா விட்ட அதே பிழையை இம்முறை ஐரோப்பா விடத்தயாரில்லை என்பது சூசகமாக உணர்த்தப்பட்டிருக்கிறது. இது தமிழர்களுக்கு ஒப்பீட்டளவில் சாதகமான ஒரு சமிக்ஞை. பயணத்தடை என்ற ஒரு எதிர்மறை அம்சத்துக்குள் பொதிந்து கிடக்கும் சாதகமான இந்த சமிக்ஞையில் இருந்தே தமிழர்கள் தமது பலத்தை மதிப்பிடவும் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கவும் வேண்டியிருக்கிறது.

# நறுக்கென...

## ஓரங்கட்டப்படும் முக்கியஸ்தர்கள்..!



ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மூன்று முக்கியஸ்தர்கள் ஓரங்கட்டப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, மற்றும் சபாநாயகர் லொக்கு பண்டார ஆகியோரே இவர்கள்.

இதனை உறுதிப்படுத்துமாற் போன்றே ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக மாநாடுகளை திஸ்ஸ அத்த நாயக்காவினால் நடாத்தப்படுகின்றது. அத்தோடு வெகு விரைவில் இந்தப் பொறுப்பு திஸ்ஸ அத்த நாயக்காவிடமே கையளிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரம சிங்கவின் தேர்தல் விஞ்ஞா பனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் நடைமுறைச் சாத்தியப்பாடையதாக இல்லாத காரணத்தினால் தான் ஜீ.எல்.பீரிஸ் ஒதுங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க இப்போதெல்லாம் அக்கட்சி நடவடிக்கைகளில் முன்னணியிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஓரங்கட்டப்படுவதாகக் கூறப்படும் மிலிந்த மொறகொட ஐக்கிய தேசியக்கட்சிக்குள் படிப்படியாக தன்னையொரு பலம்மிக்க சக்தியாக நிலைநிறுத்திக்கொண்டு வந்தவர்.

மிலிந்த மொறகொடவைப் பொறுத்தவரையில் தேர்தல் பிரசாரங்களாக இருந்தாலும் சரிதான் சர்வதேச உறவுகள் என்றாலும் சரிதான் தனக்கென்றொரு பாணியமைத்து தன்னை ஒரு பிரத்தியேகமான ஒரு அரசியல் வாதியாகவே காட்டி வந்தார்.

அத்தோடு மிலிந்த மொறகொடவுக்கு இருந்த அமெரிக்க பந்த உறவு சர்வதேசரீதியாக ஒரு பிரபலமானவராக இருக்கும் அளவுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தின.

இதனைப் பயன்படுத்தி மிலிந்த மொறகொட ஐக்கிய தேசியக்கட்சிக்குள்ளேயே தனித்து சில விடயங்களை கையாள முனைந்தமையால் பல கசப்பான சம்பவங்கள் முன்னரும் நடைபெற்றதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதன் ஒரு அம்சமாக எஸ்.பி. திசாநாயக்காவை விடுதலை செய்வது தொடர்பாக சனாதிபதி சந்திரிகாவோடு நடாத்திய பேச்சுவார்த்தையொன்று கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெரியாமல் நடைபெற்றதாக எழுந்த சர்ச்சையையடுத்து ஐக்கிய தேசிய கட்சியோடு சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அதன் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரம சிங்கவுடன்தான் கையாளப்பட வேண்டுமென மிலிந்த மொறகொடவின் விடயம் தொடர்பாக ரணில் ஒரு தகவல் வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆக ரணிலுக்கும், மிலிந்தமொறகொடவிற்குமிடையிலான விரிசல் நீண்ட நாட்களுக்கு முன்னரே தொடங்கிவிட்டது எனலாம்.

ஆகவே கட்சிக்குள் முரண்பாடு முற்றியிருப்பதென்பது என்னவோ உண்மைதான். ரணிலுக்கும் இரண்டு முறை சனாதிபதியாக இருக்கக் கூடிய காலத்தில் எந்த குட்டித் தலைவரையும் வளர விடாது தடுக்கக் கூடும்.

ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர்கள் ரணிலை இப்படித்தானே கையாண்டார்கள்.

## நடு நிலை அவசியம்..!



அனுமதியின்றி உள்நுழைந்தமையையடுத்து கைது செய்யப்பட்ட சிறிலங்கா பொலிசார் மூவரினதும் விளக்க மறியல் தமிழீழ நீதிமன்றினால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கொலை செய்யப்பட்டமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் போராளி கோபி கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச்சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன் அவரின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

போராளி கோபி கைது செய்யப்பட்டமையானது எந்தவித ஆதாரங்களுமின்றி சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். அத்தோடு அவர் தொடர்பாக இதுவரை செய்யப்பட்ட விசாரணைகளிலும் குற்றம் நிரூபிக்கப்படவில்லை. கொலை தொடர்பாக நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு இரண்டிலும் கோபி இனங்காணப்படவில்லை.

ஆயினும் கோபியின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டிருப்பதுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பில் ஒரு தரப்பைச் சேர்ந்தவர் என்ற வகையில் கோபியின் விடயம் தொடர்பாக அரசோ, கண்காணிப்புக்குழுவோ இன்னமும் நடந்துகொள்ளவில்லை.

இது இப்படியிருக்க தமிழர் தாயகப்பிரதேசத்தில் குற்றமிழைக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்ட மூன்று சிறிலங்கா பொலிசாரின் விடயத்தில் கண்காணிப்புக்குழு அதிக சிரத்தை எடுப்பதானது தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்துகிறது.

ஏனென்றால் கண்காணிப்புக்குழுவானது வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இரண்டு திறத்தவருக்கும் நடுநிலையாக நின்று கண்காணிப்புப் பணியை செய்யவேண்டுமென்பதோடு, செயற்படவும் வேண்டும்.

ஆனால் கண்காணிப்புக்குழு சிறிலங்கா பொலிசாருக்காக அதிக சிரத்தை எடுப்பது அதன் நடுநிலை தவறிய செயற்பாடாகவே இருக்கிறது. இதனைக் கண்காணிப்புக்குழு புரிந்துகொண்டதாகவும் தெரியவில்லை.

சிறிலங்காப் பொலிசாரின் விசாரணை தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில் அவர்கள் மீதான விளக்க மறியல் நீடிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் வில்ஜகுக்வோனென் மூன்று பொலிசாரையும் புலிகள் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனத் தெரிவிப்பதானது அரச பிரதிநிதியாக அவர் செயற்பட முனைகிறாரா எனக் கேட்கத் தோன்றுகிறது.

கோபியின் செயற்பாட்டில் அரச செயற்பாட்டை கண்காணிப்புக்குழு மதித்து நடப்பதாக இருந்தால் மூன்று பொலிசாரின் விடயத்திலும் அவ்வாறுதான் நடந்துகொள்ள வேண்டும்.

## இளவலுக்கு வந்த சோதனை!



மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர்- பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் பதவிகள் தனக்கே வழங்கப்படுமென்பதை எழுத்து மூலம் உறுதிப்படுத்துமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் சனாதிபதி சந்திரிகாவின் தம்பியார் அநுராபண்டார நாயக்க கோரியுள்ளாராம்.

பண்டா பரம்பரையின் இளவலுக்கு வந்த சோதனை இப்படியாக இருக்கிறது. என்னசெய்வது நல்ல வேளை 'எமது அக்கா அதாவது சனாதிபதி சந்திரிகா ஓய்வு பெற்ற பின்னரும் என்னை கட்சியில் வைத்திருப்பீர்களா?' என உறுதிமொழி கேட்காமல் விட்டுவிட்டார்.

ஏனெனில் பண்டாவின் வாரிசுகள் மகிந்தவை தோற்கடிப்பதற்காக செய்யாத திருகுதாளம் எதுவும் இல்லை. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு மகிந்தவும் கும்பிடு போட்டும், சிரித்துக் கொண்டும் மேடையேறி வருகிறார்.

ஆனால் மகிந்தவின் கரங்களில் அதிகாரம் போய்விட்டால் மகிந்த பழைய மகிந்தவாகவே இருப்பாரா என்பது சந்தேகமே.

இது பண்டா குடும்பத்துக்கும் தெரியாமலிருக்காது எனவேதான் எதனையும் அவசரப்பட்டு போட்டுடைக்கும் வழக்கத்தைக் கொண்ட அநுரா பண்டாரநாயக்க இந்த கோரிக்கையை விட்டு இருக்கிறார் போலுள்ளது.

என்ன செய்வது அப்படியேதும் நிகழ்ந்து விட்டால் அநுரா பண்டாரநாயக்கதான் என்ன செய்வார். உல்லாசப் பயணங்களும் கௌரவமான பதவியுமல்லவா சேர்ந்து பறி போய்விடும்.

எப்படியோ அநுராவைப் பொறுத்தவரை இரண்டு மனது. அதாவது மகிந்த சனாதிபதித் தேர்தலில் தோற்க வேண்டும். அதேவேளை தப்பித் தவறி வென்றுவிட்டால் எல்லா உரிமைகளும் தனக்கு வேண்டும். இப்படித் தான் அநுராபண்டார நாயக்க சிந்திக்கிறார் போலுள்ளது.

ஆனால் அநுரா தேர்தல் விளம்பரங்களில் மகிந்த தனது பெயரைக் கூட பயன்படுத்தக் கூடாது என நிபந்தனை விதித்ததை மகிந்த மறந்து போவாரோ?

அது சரி அநுரா தேர்தல் பிரசாரங்களுக்காக தனது பெயரை பயன்படுத்தவேண்டாமென கோரிக்கை விடுத்திருக்கிறார் என்பதால் தனது பெயருக்கு மக்கள் மத்தியில் நற் பெயர் ஏதும் இருக்கிறது எனக் கருதி விட்டாரோ? என்ன செய்வது கிணற்று தவளையாக இருக்கும் வரை அநுரா இப்படித்தான் செய்வார்.

இதையெல்லாம் மக்கள் சகித்துத்தான் ஆகவேண்டும் என்பது இலங்கை அரசியலில் எழுதப்படாத விதி.

## அம்மணியின் சேவை..!



சனாதிபதி சந்திரிகா பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது நாட்டுமக்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சியை விட பத்து மடங்கு சேவை செய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

அப்படியென்ன பத்து மடங்கு சேவையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாட்டு மக்களுக்கு ஆற்றியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிடியில் பதினேழு வருடங்களாக இருந்த ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றிக் கொண்ட 1994ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையான காலப்பகுதி வரையில் தான் இந்த பத்து மடங்கு சேவையை ஆற்றியுள்ளனர்.

இந்த வகையில் நாட்டின் பொருளாதாரம் என்றுமில்லாத அளவுக்கு அதலபாதாளத்திற்கு சென்றதும் மக்கள் இலங்கைக்குள்ளேயே அதிகளவில் அகதிகளாக்கப் பட்டதும், காணாமற்போனோர் தொகை அதிகமாக்கப்பட்டதும், பல மனித புதைகுழிகள் தோன்றியதையும் கணக்குப் பார்த்தால் நாட்டு மக்களுக்கான சேவையாக இதைக் கொண்டால் சில வேளை பத்து மடங்குக்கு மேலாகவும் இருக்கக் கூடும்.

ஆனால் மக்களின் அபிவிருத்தி நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என பட்டியலிட்டால் எதில் எந்த விதமான முன்னேற்றமும் இல்லையென்றே கூற வேண்டும்.

சனாதிபதி சந்திரிகாவின் இந்தக் கூற்றின் அடிப்படையில் பார்க்கும்போது அரசியல் வாதிகள் சேவையென்று எதைக் கருதுகிறார்கள் என்பது ஒரு குழப்பமான விடயம்தான்.

ஏனெனில் அரசியல் வாதிகள் சேவையென்று குறிப்பிடுவது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளாகவும் மக்கள் அநீதிகள் என கருதுவதை அவர்கள் சேவையென்றும் பட்டியலிடுவது நாட்டில் சர்வசாதாரணமானதாகக் காணப்படுகிறது.

இந்த வகையில்தான் சனாதிபதி சந்திரிகாவின் பேச்சும் இருக்கக்கூடும். எது எப்படியோ மக்களும் இத்தகைய தலைவர்களின் இந்தச் சேவையை மதிக்கத்தானே செய்கிறார்கள்.

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட நாட்டின் எல்லாப் பகுதிக்குமான உதவிகளை தமிழ் மக்களுக்கு அதிக உதவி கிடைத்து விடும் என்ற காரணத்திற்காக அதையே தடுத்தும் காலதாமதப்படுத்தியும் சேவை புரிந்த அரசியல் தலைவர்கள் அல்லவா இவர்கள்.

சனாதிபதி சந்திரிகா பதவிவிலகிப் போகப்போகும் இந்த இறுதிக்காலங்களிலாவது நாட்டு மக்களிடம் உண்மையைச்சொல்ல முயற்சி செய்திருக்கலாம்.

ஏனென்றால் மக்கள் இதுவரை அவரிடமிருந்து பொய்யைத்தவிர வேறு எதனையும் கேட்கவில்லை.

வேழினி

**அரசியல் என்பது ஒரு சூதாட்டம். இலங்கையில் தேர்தல் வந்தால் அதன் கருப்பொருள் இனப்பிரச்சினை. தமிழீழ தமிழர்களின் பிரச்சினையினை பகடைக்காயாக வைத்து அரசியல் சூதாட்டம் இடம்பெறும். இதையே ஆட்சி பீடத்தை பிடிக்க முயல்வோர் செய்யும் வேலையாகும்.**

# "பேரினவாத குட்டையில் ஊறிய மட்டைகள்"

ச.சங்கரன்

இலங்கையின் 5ஆவது நிறைவேற்று சர்வ அதிகாரம் கொண்ட 2006 ஆம் ஆண்டுக்கான சனாதிபதித் தேர்தல் நவம்பர் 17 இல் நடைபெறவுள்ளது. இதில் தமிழர்களைப் பொறுத்தளவில் இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன? என்பது போல் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியானால் என்ன? மகிந்தராஜபக்ஷ சனாதிபதியானால் என்ன? எல்லாம் ஒரு குட்டையில் உறிய மட்டைகள் போலவே மகிந்தவும் ரணிலும் இருவரின் அடிப்படைக் கொள்கைகளில் மாற்றம் இல்லை.

ஆனால் இவர்கள் சனாதிபதியாகக் கையாளும் உத்திதான் வெவ்வேறானவையாகும். இதனை இலகுவாகச் சொல்வதானால் கொழுக்கட்டையும் மோதகமும் உள்ளுடன் ஒன்றுதான் வெளித் தோற்றம் தான் வெவ்வேறானது.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தின் கதாநாயகனாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ போரின் கதாநாயகனாகவும் தங்களை உருமாற்றிக் கொண்டு தேர்தலில் குதித்துள்ளனர்.

சிலர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியானால் சமாதானம் சமாதானம் என கனவு காண்கின்றார்கள். இது வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கின்றது.

1994 ஆம் ஆண்டு ரணில் போலதான் சந்திரிகாவும் சமாதானக் கொடிபிடித்து வெள்ளைப்புறா பறக்க விட்டு சாந்தி சமாதானம் என சமாதானத்தின் தேவதையாக ஒளி விட்டுப் பிரகாசித்தார். தேர்தலில் வென்றார். பின்னர் தன்னை தீவிர போர்ப் பிரியராக்கினார். சமாதானத்திற்கான போர் என்று கூறிக்கொண்டு தமிழர் மீது தீவிர போரை கட்டவிழ்த்துவிட்டார்.

இலங்கைத் தீவின் இராணுவ வரலாற்றில் அம்மையாரின் ஆட்சிக்காலம்தான் போர் உச்சக்கட்டத்தில் தீவிரமாக நடைபெற்ற காலமாகும். இக்காலத்தில் சமாதானப் பரிசினை எதிர்பார்த்தவர்களுக்குக் கிடைத்தது என்ன? சூரியக்கதிரும் ஜெயசிக்குறுவும்தான். இதன் மூலம் பல அப்பாவித் தமிழர்கள் புதைகுழிகளில் புதைக்கப்பட்டனர், பல இளைஞர் யுவதிகள் காணாமல் போயினர், பல பெண்கள் இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர், பல பெண்கள் விதைவைகள் ஆக்கப்பட்டனர், அத்துடன் படுகொலையும், சித்திரவதையும், பசியும், பட்டினியும், பஞ்சமும், துன்பமும், துயரமும், நோயும்தான் சமாதானம் என்ற வடிவத்தின் மூலம் தமிழருக்குக் கிடைத்தது.

தமிழர் தரப்பு சமாதானத்தைத்தான் விரும்புகின்றது. ஆனால் ரணில் சமாதானத்தை உருவாக்குவார் என்பதற்கு என்ன உத்தரவாதம். ஆறு சுற்றுப் பேச்சுக்களினால் என்ன பயன்கிடைத்தது. பேசி இணக்கம் கண்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டதா? இல்லை இதுதான் ரணிலின் திட்டம்.

அரசியல் என்பது ஒரு சூதாட்டம். இலங்கையில் தேர்தல் வந்தால் அதன் கருப்பொருள் இனப்பிரச்சினை. தமிழீழ தமிழர்களின் பிரச்சினையினை பகடைக்காயாக வைத்து அரசியல் சூதாட்டம் இடம்பெறும். இதையே ஆட்சி பீடத்தை பிடிக்க முயல்வோர் செய்யும் வேலையாகும். ரணில் இரகசியமாகப் போரை முன்னெடுப்பார். மகிந்த பரகசியமாக போரை முன்னெடுப்பார். ரணில் தனது ஆட்சிக்காலத்தில் சர்வதேச பாதுகாப்பு வலையமைப்பு என்ற ஒன்றை உருவாக்கினார். இது மிகவும் ஆபத்தானது. இது சர்வதேச இராணுவப் பொறிக்குள் புலிகளைத் தள்ளுவது ஆகும்.

மகிந்த இலங்கைத் தீவுக்குள் நின்று யுத்தப் பிரகடனம் செய்கின்றார். ரணில் உலகளாவிய ரீதியில் பன்முகப்படுத்தப்பட்ட திட்டத்தை உருவாக்குகின்றார். சமகால உலக ஒழுங்கின்படி பொருளாதார வர்த்தக உலக மயமாதல் திட்டத்திற்காகத்தான் உலகின் வல்லரசு நாடுகள் போர் பிரகடனம் செய்கின்றன.



புலிகளை அழிப்பதற்கு உதவி செய்யுங்கள். உங்களின் வர்த்தக பொருளாதார நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொள்ள இடமளிக்கின்றேன் இதுதான் ரணிலின் நாசகார சதித்திட்டம்.

போரா சமாதானமா என்பதைத் தீர்மனிப்பது ரணிலோ மகிந்தவோ இல்லை. இலங்கையின் பொருளாதார நிலை சர்வதேச அழுத்தம் என்பவற்றிற்கு அரச இயந்திரம் ஈடு கொடுக்குமா என்பதுதான் பிரச்சினையாகும்.

ரணில் நல்லவர் மகிந்த கூடாதவர் என தமிழ் மக்கள் எடைபோடக்கூடாது. ரணில் வந்தால் பேச்சுவார்த்தை இடம்பெறும் பயன் கிடைக்குமா. ஆனால் அது நடைமுறைகீகுச் சாத்தியப்படாது. மகிந்த சனாதிபதியானாலும் பேச்சுவார்த்தை இடம்பெறத்தான் செய்யும்.

அன்று சந்திரிகாவை தமிழர்கள் நம்பினார்கள் இன்று ரணிலை நம்புகின்றனர். இது ஒரு மாயை என்பதை திட்டவட்டமாகக் கூறலாம்.

சந்திரிகாவைப் போல் ரணிலும் ஏன் தமிழரை ஏமாற்ற மாட்டார். சந்திரிகா எப்படி தமிழரை ஏமாற்றினாரோ அப்படி ரணிலும் தமிழரை ஏமாற்றுவார் என்பதை மறந்து விடக்கூடாது. ரணிலை நம்பும் சிலர் சந்திரிகாவிடம் ஏமாந்தது போல் ரணிலிடம் ஏமாறப் போகின்றார்கள்.

சந்திரிகாவானாலும் சரி, மகிந்தவானாலும் சரி, ரணிலானாலும் சரி எவரையும் தமிழர்கள் நம்பமுடியாது. நம்புவதில் அர்த்தம் இல்லை.

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து பேரினவாத இனவாதக் கட்சிகள் இரண்டும் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறி எப்படி தமிழர்களை ஏமாற்றினார்கள் என்பது நீண்ட வரலாறு. சரி கடந்தவற்றை விடுத்து சமகாலத்தை சிந்திப்போமானால் எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும் 2001 இற்குப் பிற்பட்ட பிரபா-ரணில் ஒப்பந்த காலத்தை பகுப்பாய்வு செய்தால் மட்டும் புரியும். தமிழர்களை சிங்களப் பேரினவாதம் எப்படி ஏமாற்றியிருக்கின்றது என சிங்களப் பேரினவாதத்தையும் இனவாதத்தையும் படிப்பதற்கு இந்த போர் ஓய்வு நான்கு வருட காலமுமே போதுமானது ஆகும். ரணில் பிரதமராகி அரசமைத்த போது உருப்படியாக என்ன செய்தார். எப்படி எப்படி எல்லாம் ஏமாற்ற முடியுமோ அப்படி அப்படி எல்லாம் தமிழரை ஏமாற்றினார்.

ரணில் ஆட்சிபீடமேறினால் சமாதானம் என்ற போர்வையில் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் இழுத்தடிக்கப்பட்டு பலவீனப்படுத்தப்படலாம். இதனால் தமிழரின் விடுதலை நீண்டு செல்லும் கால இழுத்தடிப்பு நிகழும்.

சமாதானம் என்ற போர்வையில் அர்த்தமற்ற பேச்சுவார்த்தைகள் இடம்பெறும். இதில் எதுவித பயனும் கிடையாது. இது தற்காலிக விமோசன மேலேயே நீண்டகால அடிப்படையில் மிகவும் ஆபத்தான செயல் திட்டம் ஆகும்.

சனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் அக்கறை காட்டவோ ஆர்வம் செலுத்தவோ போவதில்லை. இதில் தமிழர்கள் பங்கெடுப்பதினால் தமிழர்களுக்கு எதுவித பயனும் கிடையாது.

பொதுவாக சிங்கள தேசத்துடன் தமிழர்தரப்பு சமாதான வழியில் சமரசமுயற்சிகளில் ஈடுபடுவதில் எதுவித அர்த்தமும் இல்லை. இதனால் தமிழருக்கு எதுவித பயனும் கிடையாது. விடுதலையும் கிடையாது. உரிமையும் கிடையாது. நிச்சயமாக ஏமாற்றம் மட்டும் பரிசாகக் கிடைக்கும்.

''அர்த்தமற்ற சமாதானத்தைவிட போர் மேலானது'' என்பது போல சமகால விடுதலைப்போராட்ட களநிலவரங்களைப் பகுப்பாய்வு செய்யும்போது போரின் மூலம்தான் எமது விடுதலையினையும் உரிமையினையும் பெறமுடியும் என்ற நிலைக்குத் தமிழ் மக்கள் வரவேண்டியுள்ளது.

தமிழர்கள் சிங்களவருடன் இணைந்து வாழ முடியாது. பிரிந்து சென்றுதான் வாழ வேண்டும் என்பது காலத்தின் தேவையாகவுள்ளது. தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் நியாயப்பாட்டை சர்வதேச அரங்கில் நியாயப்படுத்த வேண்டும். எது எப்படி இருந்தாலும் இரண்டும் இனவாதக் கட்சிகள்தான். இரண்டும் பேரினவாதக் கட்சிகள்தான். அதில் எதுவித மாற்றமும் இல்லை.

ஒப்பந்தங்கள் எழுதி கைச்சாத்திட்ட ஆவணங்களையே கிழித்து எறிந்தவர்கள் இன்று சமாதானம் என்று கூறி வாக்குறுதி அளித்து தமிழர்களிடம் வாக்குக் கேட்பது வாய்ப் பேச்சு விடிஞ்சாப் போச்சு. பொதுவாக சிறிலங்காவின் சாக்கடை அரசியலை தமிழ் மக்கள் நம்பக்கூடாது. நம்பி ஏமாறக்கூடாது.

தேர்தல் பிரசார வாக்குறுதி எல்லாம் போலியானது. வேடிக்கையானது. ரணில் விக்கிரமசிங்க தன்னை இலங்கையின் தேசியத் தலைவராக இனம் காட்ட முயல்கின்றார். ஆனால் உண்மை அதுவல்ல. இது சிறுபான்மை தமிழ் கட்சிகளின் ஆதரவைப் பெற எடுக்கும் முயற்சி ஆகும். இது ரணிலின் சந்தர்ப்பவாதப் போக்கு ஆகும.

அதுதான் சிறிலங்காவின் சந்தர்ப்பவாத அரசியலில் தலை நீட்ட விரும்பாத புலிகள் நடுநிலைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் தமிழரைப் பொறுத்த வரையில் பொது எதிரிகளே. அதனால்தான் தமிழீழத் தமிழர்கள் இத் தேர்தலில் அக்கறை செலுத்தவில்லை.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 14. 10 . 2005
மின் அஞ்சல :—weekly @ eezhanatham.com

# நோக்கம் வேறு..!

சமாதானச் செயற்பாட்டிற்கான மனித உரிமைகள் ஆலோசகர் இயன்மாட்டின் இலங்கைக்கு மேற்கொண்டிருக்கும் விஜயத்தினைப் பயன்படுத்தி மனித உரிமைகள் மீதான அரசின் கரிசனை என்ற வகையில் சில ஆலோசனைகளை இயன்மாட்டினோடு சிறிலங்கா வின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால பரிமாறியுள்ளார்.

சமாதானச் செயற்பாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் சமாதானச் செயற்பாட்டின் அமைப்புகள் அவசரமாக மனித உரிமை கள் விடயங்கள் பற்றிக் கவனமெடுக்கவேண்டும் என ஜயந்த தனபாலவினால் இயன்மாட்டினிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

மனித உரிமை விவகாரம் தொடர்பாக அரசு கொண்டிருக்கும் ஆர்வமானது மனித உரிமைகள் விடயத்தில் அரசுக்கு இருக்கும் உண்மையான ஆர்வமல்ல பதிலாக முற்றிலும் நேர்மையற்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அத்தோடு இன்று வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் பல்வேறு மனித உரிமை மீறல்களின் செயற்பாட்டிற்கு அரசின் செயற்பாடுகளே அதிகளவில் பங்கு வகிக்கின்றது.

இதனை மூடிமறைக்கவும் மனித உரிமைச் செயற்பாடு என்ற வரிசையில் சமாதானத்திற்கு எதிரான செயல்திட்டம் ஒன்றை சர்வதேச ரீதியில் கொண்டு வருவதுமே அரசின் உள்நோக்கமாக இருக்கிறது.

உண்மையில் அரசிற்கும் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மனித உரிமை மீறல்கள் பெருமளவில் கட்டுப் படுத்தப்பட்டிருந்தமையை கடந்தகாலங்களில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அரசு இராணுவத்தின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதாகக் காட்டிக் கொள்ளப்பட்ட அக்கறை இராணுவப் புலனாய்வுத்துறையின் செயற்பாட்டில் காட்டிக் கொள்ளாமையினாலேயே வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பல படுகொலைச் செயற்பாடுகள் நடைபெறுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அதாவது, அரச இராணுவப் புலனாய்வு அமைப்பானது நேரடியாகவும் அரச துணைக்குழுக்கள் மூலமாகவும் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் கொலைகள் தூண்டி விடப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அதன் விதிகளை செவ்வனே நடைமுறைப்படுத்தும் வகையில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களிலிருந்து துணை இராணுவக் குழுக்கள் வெளியேற்றப் படுமாக இருந்தால் மனித உரிமை மீறல்கள் என்று சொல்லக் கூடிய கொலைகளும் வன்முறைகளும் முடிவுக்கு வரக்கூடிய ஏதுநிலைகள் அதிகளவில் காணப்படும். அல்லது இவற்றை முடிவுக்குக் கொண்டு வரமுடியா விட்டாலும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளை செய்யும் உண்மையான குற்றவாளிகளை இனங்காணக்கூடியதாகவும் இருக்கும்.

இன்று கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் அங்கு நடைபெறும் பல்வேறு கொலைகளும் வன்முறைகளும் கொழும்பு ஊடகங்களாலும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவாலும் அரச துணைக்குழுக்கள் இயங்கும் பிரதேசமாக அடையாளப் படுத்தப்பட்ட பிரதேசங்களிலேயே அதிகளவில் நடைபெறுவதைக் காணலாம்.

இந்த வகையில் இவை உண்மையாகவும் ஆக்கபூர்வமாகவும் மனித உரிமை விவகாரங்களில் கவனம் செலுத்தப்படவேண்டு மானால் இதன் செயற்பாடு அரசதரப்பிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மனித உரிமைகள் செயலகம் ஒன்றை திறந்திருப்பதுடன் பல்வேறு மனித உரிமைச் செயற்பாட்டிற்கும் ஊக்கமளித்து வருகிறார்கள்.

கடந்த காலங்களோடு ஒப்பிடும்போது வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் மனித உரிமைச் செயற்பாடுகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளமையையும் அவதானிக்கலாம்.

ஆனால் அரசு உண்மையான மனித உரிமைகள் செயற் பாட்டிற்கு பதிலாக ஒப்பந்தங்கள் செயல்முறைகள் என்ற போர்வையில் உண்மையைப் புரளச் செய்யும் நடவடிக்கைகளிலேயே ஆர்வம் காட்டுகிறது.

இது சமாதான முயற்சிக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் சூழ்ச்சி நடவடிக்கைகளாகவே இருக்க முடியும்.

இதனை உறுதிப்படுத்துமாற் போன்றே வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வன்முறைச் செயற்பாட்டினை புரியும் அரச துணைப்படைகளுக்கு அரசு ஆதரவு வழங்கி வருகிறது.

# இலக்கு வைக்கப்படும் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள்

**அரசியல் பணிப் போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்த காலங்களில் அந்த பிரதேசங்களில் நடந்த எழுச்சி நிகழ்வுகள் அரசியல் போராட்டங்கள், ஊர்வலங்கள் என்பன புலிகளால் மக்களின் விருப்பின்றி அவர்களைக் கொண்டு செய்யப்படும் நிகழ்வுகள் எனக் காட்ட முயன்ற அரச படையினர் புலிகள் இயக்க போராளிகள் இந்த பிரதேசங்களிலிருந்து வெளியேறிய பின்னரும் மிக எழுச்சியாக நடைபெறுவதையும் மக்களே இதனை முன்னெடுப்பதையும் பொறுத்துக் கொள்ள முடியாமல் இந்த தாக்குதல்கள் மேற்கொள்கின்றனர்.**

தமிழ் தேசிய உணர்வாளர்களை குறிவைத்து நடாத்தப்படும் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை அதிபர்கள், வர்த்தகர்கள் என இந்த தாக்குதல் இலக்கிற்குள் தமிழ் தேசிய உணர்வாளர்கள் குறிவைக்கப்பட்டுள்ளார்கள்.

இராணுவக்கட்டுப் பாட்டுப் பிரதேசங்களுக்குள்ளிருந்து அரசியல் பணி போராளிகள் வெளியேறியதையடுத்து சுதந்திரமாக இயங்கத்தொடங்கியிருக்கும் ஈ.பி.டி.பி மற்றும் இராணுவ புலனாய்வு அமைப்புக்கள் என்பவற்றினாலேயே இந்த தாக்குதல்கள் மேற் கொள்ளப்படுகிறது.



அரசியல் பணிப் போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்த காலங்களில் அந்த பிரதேசங்களில் நடந்த எழுச்சி நிகழ்வுகள் அரசியல் போராட்டங்கள், ஊர்வலங்கள் என்பன புலிகளால் மக்களின் விருப்பின்றி அவர்களைக் கொண்டு செய்யப்படும் நிகழ்வுகள் எனக் காட்ட முயன்ற அரச படையினர் புலிகள் இயக்க போராளிகள் இந்தப் பிரதேசங்களிலிருந்து வெளியேறிய பின்னரும் மிக எழுச்சியாக நடைபெறுவதையும் மக்களே இதனை முன்னெடுப்பதையும் பொறுத்துக்கொள்ள முடியாமல் இந்தத் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

தொடர்ச்சியாக தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் இத் தாக்குதல்கள் மூலமாக மக்கள் மத்தியில் பயப்பீதியை ஏற்படுத்தி மக்கள் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வரவும் இதே வேளை இந்த தாக்குதல்களை புலிகள் இயக்கம் மீது சுமத்தி சர்வதேச ரீதியாக புலிகள் இயக்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவுமே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசியல் பணிப் போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கி வந்த காலங்களில் முடங்கியிருந்த இந்த குழுக்கள் இப்பொழுது சுறு சுறுப்பாக இயங்க ஆரம்பித்துவிட்டன.

அண்மை வாரமாக யாழ்ப்பாணத்தில் வெள்ளை வானில் ஈ.பி.டி.பி கும்பல் பகிரங்கமாக இயங்கத் தொடங்கியிருப்பதாகவும் மக்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்களையும் விடுத்துவருவதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

தமிழர் தாயகத்தில் தமிழ்மக்கள் அரசியல் ரீதியாக விழிப்படைந்து தமது உரிமைக்காக போராட்டங்களை நடத்தத் தொடங்கினார்களோ அப்போதே இதற்கெதிராக செயற்பட ஈ.பி.டி.பியினரும், அரச படையினரும் சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்தனர்.

இதன் பின்னணியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வு மற்றும், மாலதி நினைவுநாள், தியாகி திலீபன் நினைவு நிகழ்வு என்பவற்றை மக்களே முன்னெடுத்ததுடன் இலட்சக்கணக்கில் ஒன்று திரண்டமையும் இந்த சக்திகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது.

மக்களின் இந்த வெகுசன விழிப்பு தொடருமாக இருந்தால் அரசியல் ரீதியாக பாரிய பின்னடைவுகளை சந்திக்கவேண்டுமென கணிப்பிடும் சக்திகள் துப்பாக்கிகள் மூலமாக இதனை ஒழித்து விடலாம் எனக்கருதுகின்றனர்.

தமிழ் மக்கள் மீது அரசு ஒன்றில் சட்டங்கள் மூலமாக தனது ஆக்கிரமிப்புச் செயற்பாட்டை பிரயோகிக்கிறது. இரண்டாவது இராணுவ பலத்தின் மூலமாக ஆக்கிரமிப்பை மேற்கொள்கிறது. மூன்றாவதாக இந்த அடக்குமுறை செயற்பாடுகளுக்கு அடிபணியாத மக்களை அச்சுறுத்தும் வகையில் தமிழ் உணர்வாளர்களை இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொள்கிறது. இவ்வாறு பல்வேறு செயற்பாடுகளை அரசு காலத்திற்குக் காலம் மேற்கொண்டே வருகிறது.

இந்த வகையில்தான் இப்பொழுது தமிழ் உணர்வாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் ஆகும்.

எவ்வாறாயினும் அரசு மறைமுகமாக தமிழ் உணர்வாளர்களை குறிவைத்துத் தாக்குதல்களை தீவிரப்படுத்தி விடுதலைப் போராட்டத்தின் வீச்சை தடுக்கலாம் எனக் கருதுகிறது.

ஆனால் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது பல்வேறு இடர்களுக்கு மத்தியில் தான் வளர்ச்சியடைந்துள்ளது என்பதை இந்தச் சக்திகள் கணிப்பிடத் தவறி விடுகின்றன.

இதனால்தான் மேலும் மேலும் இந்தகைய தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் பின்னணியில் அரச படை முழுமூச்சுடன் இயங்கி வருகின்றமை பலமுறை நிரூபிக்கப்பட்டே உள்ளது.

இதேவேளை இன்று தமிழ்த் தேசிய விடுதலை தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் விழிப்பு நிலை தொடர்பாக அரச இயந்திரம் அஞ்சத் தொடங்கியிருப்பதையே தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மீதான தாக்குதல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

புகழன்

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தல் சுவரொட்டிகளை அகற்ற ஒரு கோடியே 30 லட்சம் ரூபா செலவிடப்பட்டதாக சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் கூறியிருக்கிறார். அதே வேளை அண்மையில் தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளுடன் அரச வாகனமொன்று மரத்தில் மோதிய நிலையில் காணப்பட்டதாகவும் குடிபோதையில் ஓட்டிவந்த சிலர் இதனை மரத்துடன் மோதிவிட்டு இறங்கிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தம்மை ஆள்வதற்கு அல்லது வழிநடத்துவதற்கு ஒரு தலைவரை மக்கள் தெரிவுசெய்வதற்கு அந்த மக்கள் எவ்வாறான செலவீடுகளைச் செய்யவேண்டியுள்ளது? ஒன்று தேர்தலை நடத்துவதற்கான செலவீடு 100 கோடிரூபாவுக்கு மேல் தேவை என தேர்தல் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. இதுதான் தேர்தலுக்கான செலவீடு என்று வெளிப்படையாகக் கூறிக்கொள்ளப்படுகிறது. இந்தச் செலவீட்டுக்குள் தான் மேற்குறிப்பிட்ட ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பணமும் அடங்குகிறது எனக் கூறப்படுகிறது. ஏனெனில் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுவதற்கான செலவீட்டை தேர்தல் திணைக்களம்தான் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்போகிறது.

ஆனால் இந்தச் சுவரொட்டிகளைத் தயாரிக்க, ஒட்ட எவ்வளவு அரசபணம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது? என்பதைப் பார்க்கவேண்டும். இம்முறை தேர்தல் திகதி அறிவிக்கப்பட முன்னரே தென்பகுதியில் பிரசாரப் போட்டி ஆரம்பமாகிவிட்டது. முக்கிய போட்டியாளர்களின் உருவப்படங்களும் கோஷங்களும் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள், கட்டவுட்டுகள் என்பன கொழும்பின் தோற்றத்தையே மாற்றியிருந்தன.

இந்த சுவரொட்டிகள் போட்டியாளர்களின் கொள்கை கோட்பாடுகள், மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஊட்டும் கருத்துக்கள் என்பவற்றைக் கொண்டிருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இவற்றில் பெரும்பான்மையானவை ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் தன்மை கொண்டவையாகவே காணப்பட்டன.

இந்தச் சுவரொட்டிகள் போட்டியாளர்களையும் அவர்களின் மனோநிலையையும் ஓரளவுக்குப் புரிந்துகொள்ள உதவினாலும் மக்கள் மத்தியில் இவர்கள்பற்றி மோசமான பதிவொன்றையும் ஏற்படுத்தக்கூடியவை என்பதும் உண்மையாகும். இதனால் நாட்டின் “தலைவர்கள்” குறித்து மோசமான விம்பங்களே மக்கள் மனதில் பதிய வாய்ப்புள்ளது. அல்லது அவற்றை முற்றுமுழுதாக மக்கள் நிராகரிப்பார்களாயின் இந்தச் சுவரொட்டிகளால் என்ன பயன் கிட்டிவிடப்போகிறது?

இவ்வாறாக சுவரொட்டிகளால் ஏற்படும் பயன்பாடு இருக்கையில் இவற்றை அச்சிட, ஒட்ட மட்டுமல்லாது கிழிக்கவும் பணம் கொடுக்கும் மக்கள் உண்மையில் பரிதாபத்திற்குரியவர்களே.



# விரையமாக்கப்படும் மக்கள் பணம்

அதேவேளை தேர்தலுக்கு மக்கள் வரிப் பணத்திலிருந்து நேரடியாகத் தேர்தல் செலவீட்டுக்கு என்றே பெறப்படும் 100 கோடிரூபா பணம் ஒருபுறமிருக்க தேர்தல் பிரசார நடவடிக்கைகள், வேட்பாளர்களின் தேவைக்குப் பயன்படுத்தப்படும் அரச சொத்துகள் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கச் செலவிடப்படும் பணம் என்பனவற்றையெல்லாம் பார்த்தால் இதனை விட பலமடங்குபணம் செலவிடப்படுவது தெரியவரும்.

இவ்வாறு தேர்தல் ஒன்றை நடத்தி ஒரு தலைவரை அல்லது ஆட்சியைத் தெரிவு செய்யும், மக்கள் தாம் எதிர்பார்த்த பயனைப் பெறுகிறார்களா? ஒருவரின் தேர்தல் விஞ்ஞாபனம், தேர்தல் வாக்குறுதிகள், கோட்பாடுகள் என்பவற்றை பார்த்து அதனை ஏற்றுக்கொண்ட மக்களால் ஒருவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டால் அவரால் அந்த மக்கள் எதனைப் பெறுகிறார்கள். தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டவை தேர்தல் வாக்குறுதிகளாகக் கூறப்பட்டவற்றில் எவ்வளவு நிறைவேற்றப்படுகின்றன?

உண்மையில் ஒரு தேர்தலின்போது வழங்கப்படும் வாக்குறுதிகளில் சில பத்துவீதங்கள் நிறைவேற்றப்பட்டால் கூட அடுத்த தேர்தலுக்கு வாக்குறுதி வழங்குவதற்கு பெரிதாக எதுவும் இல்லாத நிலையே தோன்றியிருக்கும்.

அதிகமேன்? ஒவ்வொரு தேர்தலிலும் முன்வைக்கப்படும் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவோம் என்ற வாக்குறுதிமட்டும் நிறைவேற்றப்படுமானால் அதுவே அத்தலைவருக்கு நிரந்தர வெற்றியைப் பெற்றுக் கொடுத்துவிட முடியும். இதனைவிட மோசமான விடயம் என்னவெனில் மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் அமைதியையும் ஏற்படுத்த வேண்டிய இவர்களே தமது பதவிக்காக துவேசத்தையும் பிளவையும் ஏற்படுத்துவதாகும்.

சிறிலங்காவைப் பொறுத்தவரை இனங்களுக்கிடையேயான வேறுபாட்டையும் சரி, சிங்கள மக்களிடையே கூட பிளவுகளையும் மோதல்களையும் ஏற்படுத்தும் காலமாகவும் சரி இருப்பது தேர்தல் காலமேயாகும். இவ்வாறாக ஏற்படுத்தப்படும் மனப்பான்மையானது தேர்தல் காலத்தில் மட்டுமல்ல ஏனைய வேளைகளிலும் கூட பெரும் மோதல்களையும் வன்முறைகளையும் ஏற்படுத்தத் தவறுவதில்லை.

ஆனால் இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு ஒரு தலைவரை அல்லது ஆட்சியைத் தெரிந்தெடுக்கும் மக்கள் அமைதியான நிம்மதியான வாழ்வை அந்தத் தலைவரால் அல்லது ஆட்சியால் பெறுகிறார்களா? என்று கேட்டால் அதற்கு மிகவும் பரிதாபகரமான விடையே கிடைக்கும்.

இந்த மக்கள் அந்தத் தொல்லைகளையெல்லாம் தாங்கிக்கொண்டு, அடுத்ததேர்தல் வரை காத்திருக்கவேண்டிய நிலையே ஏற்படுகிறது. ஆனால் பிறகும் கூட தலையணி மாற்றப்படலாம். ஆனால் தலையிடி மாறிவிடப் போவதில்லை.

இத்தனை சிக்கலுக்குள்ளும் அண்மைக் காலமாக இலங்கை மக்களுக்கு மேலும் ஒரு வேதனை ஏற்பட்டுவருகிறது. அதாவது அடிக்கடிவரும் தேர்தல்கள் அவர்களுக்கு அந்த வேதனையை அடிக்கடி ஏற்படுத்திவருவதாகும். இலங்கையைப் பொறுத்தவரை தேர்தலுக்கு குறைவே இல்லாதவாறு பல “சனநாயக” அமைப்புகள், அதிகாரங்கள் உள்ளன. உள்ளூராட்சிச் சபைகள், மாகாணசபைகள், நாடாளுமன்றம், சனாதிபதி என தொடர்ச்சியான தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அத்துடன் இவை எல்லாம் தலைவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப கலைத்துவிடக் கூடியவையாக இருப்பதால் மேலும் தேர்தல்களுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது.

இவற்றுக்கெல்லாம் செலவீடு செய்பவர்களாக மட்டுமே மக்கள் இருக்கின்றனர். ஒவ்வொருமுறையும் சுவரொட்டிகளை ஒட்டவும் கிழிக்கவும் இவர்களே பணம் கொடுக்கின்றனர்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள்; மறைக்கும் இராணுவத் தளபதி

“சிறிலங்காவிலுள்ள அனைத்துத் துணைப்படைகளும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே களையப்பட்டுவிட்டன” என சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவத்தின் 56ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சாந்த கொட்டேகொடவின் இவ் அறிவிப்பானது முழுப் பூசணிக்காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைப்பதற்குச் சமமாகும். ஆனால் இது புதிதல்ல. சிறிலங்காவின் அரசியலிலும் சரி, படைகளிலும் சரி உயர் பதவிகளுக்கு வருபவர்கள் மற்றும் இருப்பவர்கள் இவ்வாறான திறமைகளை அடிக்கடி காட்டுவதில் தவறுவதில்லை,

எனவே இவர்கள் இவ்வாறு முழுப் பூசணிக்காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைக்க முயன்று பல இடங்களில் அவமானப்பட்டுள்ளனர். உதாரணமாக வெலிகந்தயில் கருணா குழு முகாம் தொடர்பாக புகைப்படத்துடன் கூடிய பத்திரிகைச் செய்தி ஒன்றுக்கு இராணுவப் பேச்சாளர் தயாரத்நாயக்க பி.பி.சிக்கு வழங்கிய நேர்காணலில் ஆணித்தரமாக மறுத்துரைத்தார். தங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசமான வெலிகந்தயில் அவ்வாறான முகாம்கள் எதுவுமே இல்லையென கூறினார். ஆனால் தயாரத்நாயக்க இவ்வாறு கூறி நான்கு, ஐந்து மணித்தியாலங்களுக்குப் பின் அம் முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த இடத்திலும் தங்களது ஆதாரமற்ற அறிக்கைகள் பொய்யாகிப்போய் தயாரத்நாயக்க செய்வதறியாது இருந்தபோது ஒரு உயர் பொலிஸ் அதிகாரி வெலிகந்த தங்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசம் அல்ல என அவர் ஒரு அறிக்கையை விடுத்தார்.

இது இவ்வாறு இருக்க சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவும் இவ்வாறுதான் முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகள் விடுவதில் திறமையானவர். இதற்கு நிறையவே உதாரணங்கள் கூறலாம். ஆனால் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு முன்னுக்குப்பின் முரணான ஆதாரமற்ற அறிக்கைகள் விடுவது சிறிலங்காவில் உயர் பதவிகளில் உள்ளோரின் ஒட்டிப்பிறந்த இயல்பாகவே மாறிவிட்டது. இந்நிலையில்தான் சாந்தகொட்டேகொட கூறியது இராணுவத் தளபதி அல்லவா. எனவே துணைப்படை தொடர்பில் அவர் கூறியதில் ஆச்சரியமில்லை. அதேநேரம் அதில் எவ்வித உண்மையும் இல்லை.

ஏனெனில் மூன்றாண்டுகளுக்கு முன்பே துணைப்படைகள் களையப்பட்டு விட்டது என்றால் எவ்வாறு கடந்த மாதம் கருணா குழுவை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு சந்தித்திருக்க முடியும். அதுவும் கருணா குழுவின் ஆயுதம் தாங்கிய ஒரு சிலர் பாதுகாப்பு



வழங்க போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும் கருணா குழு உறுப்பினர்களும் அமர்ந்திருந்து எப்படி பேசியிருப்பார்கள்.

இது இவ்வாறிருக்க புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி ஒரு நிஜ யுத்தத்தை நிறுத்தியதே தவிர வேறு எந்த உருப்படியான செயற்பாடுகளையும் சிங்கள அரசும் சரி அதன் படைகளும் சரி மேற்கொள்ளவில்லை. அதாவது உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படவில்லை. மேலும் தமிழர் பிரதேசங்களில் உள்ள பொதுக் கட்டடங்கள், பாடசாலைகள் என்பவற்றில் இருந்து இரா்ணுவம் இன்றும் முழுமையாக வெளியேறியதாகவும் இல்லை.

எனவே இவ்வாறு புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. இந்நிலையில் எவருக்கும் தெரியாமல் அதுவும் மூன்றாண்டுகளுக்கு முன் துணைப்படைகள் களையப்பட்டுவிட்டன என்று சாந்த கொட்டேகொட கூறுவது நகைப்பிற்கிடமாகவே உள்ளது.

மேலும் சிறிலங்கா அரசும் சரி, அதன் படைகளும் சரி தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு சிறு வேலையேனும் செய்வதாக இருந்தால் அதனை பெரும் எடுப்பில் சர்வதேசம் முழுவதும் சென்றடையக்கூடிய வகையில் பிரச்சாரம் செய்துவிடுவர். நிலைமை இப்படி இருக்க மிகப்பிரதான விடயமான இதனை ஏன் காதும் காதும் வைத்தாற்போல இரகசியமாகச் செய்யப்போகின்றார்கள்? அவ்வாறு இவர்கள் செய்வார்களா? போன்ற பல்வேறு கேள்விகளுக்கு அப்பால் இந்தத் துணைப்படைகளை சிறிலங்கா அரசு ஒரு போதும் களையப்போவதில்லை. இவ்வாறான துணைப்படைகளை இராணுவத்துடன் இணைத்து செயற்பட்டது. செயற்படுகிறது. செயற்படப்போகிறது. சாந்த கொட்டேகொட இவ்வாறு கூறியதன் பின்னணி இதனையே தெளிவாக சுட்டி நிற்கிறது.

**மு.தமிழ்ச்செல்வன்**

# சோபை இழந்து காணப்படும் மன்னார் மாவட்டம்



மன்னார் தொன்மையான ஒரு பிரதேசம். அத்தோடு பல வரலாற்று சிறப்பம்சங்களையும் கொண்ட மண். தமிழ் பண்பாட்டோடு தமிழ் மக்கள் ஒரு கட்டுக்கோப்புக்குள் வாழ்ந்த மாவட்டம், இலங்கையில் மிகக் குறைந்தளவான மழை வீழ்ச்சி கிடைகின்ற பிரதேசம் என்றாலும் கூட முன்பு மன்னார் விலங்கு வேளாண்மையிலும் விவசாயத்திலும் சிறப்பாக விளங்கியது. கொழும்புக்கு அதிகளவான பால் ஏற்றுமதி செய்த மாவட்டங்களில் மன்னார் முதலிடத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால் இன்று மன்னார் தனது வழமையை இழந்து சோபை இழந்து காணப்படுகிறது. போராட்டத்தின் வடுக்கள் இராணுவ ஆக்கிரமிப்பின் அடையாளங்கள் நிறைந்த பிரதேசமாகக் காணப்படுகிறது. இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிறிலங்கா அரச கட்டுப்பாட்டிலும் மற்றயது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுமாக வாழ்ந்துவருகின்றனர்.

இப்பிரதேசங்களில் தற்போது 26560 குடும்பங்களைச் சேர்ந்த 102135 இற்கும் மேற்பட்டோர் ஐந்து உதவி அரச பிரிவுக்குள் வாழ்கின்றனர். மன்னார் பட்டணம், மடு, மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி என்பனவே அவ்வுதவி அரச பிரிவுகளாகும். இந்நிலையில் இங்கு வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகள் ஒப்பீட்டளவில் இரு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் வேறுபட்டே காணப்படுகின்றன.

## பொருளாதாரமும், பிரச்சினைகளும்.

மன்னார் மாவட்ட மக்களின் பொருளாதாரத்தினை பொறுத்தவரை விவசாயம், மீன்பிடி, வியாபாரம், கூலித்தொழில் மற்றும் இதர உத்தியோகங்கள் எனினும் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையும், மீன்பிடித் தொழிலையுமே மேற்கொள்கின்றனர். எனவே இத்துறையில் ஈடுபடுகின்ற மக்களைப் பொறுத்தவரை அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை என்னவெனில் தங்களுக்கு உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதாகவும் ஆனால் அதற்கேற்ற சந்தைப்படுத்தலோ அல்லது உரிய விலையினையோ பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலானவர்கள் கடன் சுமையுடன் காணப்படுகின்றனர். அத்தோடு இந்திய மீனவர்களின் றோலர் பிரச்சினையும் பெரும் தலையிடியை கொடுப்பதாக வேதனையுடன் தெரிவிக்கின்றனர். பல சந்தர்ப்பங்களில் தாங்கள் கடன் வாங்கிக் கொள்வனவு செய்த இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இந்திய றோலர்களால் அறுத்து நாசமாக்கப்படுவதால் தாங்கள் கடன்களை அடைக்க முடியாமல் மேலும் கடன் பொறிக்குள் அகப்பட்டு துன்பப்படுவத்தாக வேதனையுடன் கூறுகின்றனர்.

## பொது, சமூகப் பிரச்சினைகள்

பொதுவான பிரச்சினைகளில் குடிநீர்ப்பிரச்சினை பெரும் பிரச்சினையாக தற்போது காணப்படுகிறது. இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள எமில்நகர், சாந்திபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இப்பிரச்சினை காணப்படுகிறது. ஆனால் இராணுவ ஆக்கிரமிப்பு அற்ற பெரும்பாலான பிரதேசங்களில் நீர்ப்பிரச்சினை பரவலாகக் காணப்படுகிறது. மக்கள் தங்களது குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்துக்கொள்வதற்கு பல கிலோ மீற்றர் நடந்து செல்ல வேண்டியுள்ளது.

மேலும் மன்னார் நகரை பொறுத்தவரை கழிவகற்றல் என்பது ஒரு பெரும் பிரச்சினை. தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்கள் மழை பெய்தால் நகர் முழுவதும் வெள்ளமாக இருப்பதாகவும் கழிவு நீர் உட்பட வெள்ள நீரை அகற்றுவதற்கு சீரான வடிகால் இன்மை ஒரு காரணமாக இருப்பதோடு சில பிரதேசங்கள் கடல் மட்டத்திலும் பார்க்க தாழ்வாக இருப்பதும் காரணமாகக் கூறப்படுகிறது.

மேலும் பிரதேச சபைக்கு சுத்திகரிப்பு ஊழியர்கள் பற்றாக்குறை பெருமளவு காணப்படுவதாகவும் பொதுவான மூன்று உழவு இயந்திரங்கள் இருப்பதால் அதனை பயன்படுத்தி சீரான முறையில் கழிவகற்றலை மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும் கூறுகின்றனர்.

அத்தோடு தங்கள் பிரச்சினைகள் தொடர்பில் உயர் அரச அதிகாரிகளுக்கு பல முறை எடுத்துக் கூறியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செயலகத்தினர் தெரிவிக்கின்றனர்.

| உ.அ.அ.பிரிவு | குடும்பங்களின் எண்ணிக்கை | மக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மன்னார் பட்டணம் | 12836 | 48672 |
| மடு | 1894 | 7354 |
| நானாட்டான் | 5263 | 19268 |
| முசலி | 1123 | 4509 |
| மாந்தை மேற்கு | 5444 | 22332 |

இது இவ்வாறிருக்க சமூக பிரச்சினை தொடர்பில் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பது மன்னார் பட்டண உதவி அரச அதிபர் செயலகத்தினர் மூலம் அறிய முடிகிறது.

அதாவது மன்னார் போதை வஸ்து விற்பனை நிலையமாக தொழிற்படுகிறது. கடல் வழியாக கடத்தி வரப்படும் போதைப் பொருட்கள் கொழும்பில் இருந்து வருகின்ற வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படும் முகவர் நிலையமாக மன்னார் காணப்படுகிறது. இதற்கு படைத்தரப்பின் உதவிகள் நன்றாகவே கிடைப்பதாக பெயர் கூற விரும்பாத அரச அதிகாரி ஒருவர் கூறினார்.

மேலும் கசிப்பு,களவு என பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஆனால் சிறிலங்கா பொலிசார் இவற்றுக்கெல்லாம் ஏனோ தானோ என்ற வகையில் நடவடிக்கை எடுத்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அத்தோடு இரு நிர்வாகக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் குறைந்த வயதில் திருமணம் செய்வோர் கணிசமான அளவு காணப்படுகின்றனர்.

## கல்வி

மன்னார் மாவட்ட கல்வி நிலை ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் “போதாது” என்றுதான் கூறவேண்டும். அதற்கு பல காரணங்கள் கூறலாம். குறிப்பாக ஆசிரியர் பற்றாக்குறை, பௌதீக வளங்கள் பற்றாக்குறை என பல்வேறு காரணங்கள் கூறலாம்.

இந் நிலையில் எமது பார்வைக்கு எட்டிய மடு கல்வி வலயம் எதிர்நோக்குகின்ற சில பிரச்சினைகள்.

இக் கல்வி வலயம் போரால் பல மில்லியன் ரூபா சொத்திழப்பை சந்தித்துள்ளது. இக்கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் பெரும்பாலும் ஆரம்பக் கல்வி மாணவர்கள் நிலத்தில் இருந்தே கல்வி கற்கின்றனர். இக்கல்வி வலயத்தில் 36 பாடசாலைகளில் 6750 மாணவர்கள் கல்வி பயில்வதாகவும் 421 ஆசிரியர்கள் தேவையாக உள்ள நிலையில் 285 ஆசிரியர்களே இருப்பதாகவும் 38 அதிபர்களில் 16 அதிபர்களே அதிபர் தரத்தில் இருப்பதாகவும் கூறுகின்றனர். இதைவிட 31 சிற்றூழியர்கள் தேவையாக உள்ள இடத்தில் 07 சிற்றூழியர்களே காணப்படுகின்றனர். மடு கல்வி வலயத்தில் மேலும் தங்களுடைய கல்வி வலயம் வழமையான செயற்பாட்டிற்கு திரும்ப வேண்டுமென்றால் இன்னும் 27408 மில்லியன் ரூபாய்கள் தேவைப்படுவதாகக் கூறுகின்றார் மடு கல்வி வலய திட்டமிடல் அதிகாரி ஒருவர்.

மேலும் அவர் கூறுகையில், அபிவிருத்தி புனர்வாழ்வில் வடக்கு கிழக்கு பிரதேசம் சிறிலங்கா அரசினால் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பாக இராணுவ ஆக்கிரமிப்பு அற்ற பகுதிகள் மேலும் புறக்கணிக்கப்படுவதாக தாம் உணர்வதாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக தங்கள் தங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு பல முறை கூறியுள்ளதாகவும் ஆனால் இதுவரைக்கும் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

## மருத்துவம் தொடர்பாக.

மன்னார் அடம்பனில் ஒரு வைத்தியசாலை கட்டப்பட்டுள்ளது. அதனைத் திறந்து மக்களுக்கு சேவை யாற்றும் நிலையில் ஆளணிப் பற்றாக் குறை நிலவுகிறது. இப்பிரதேசத்தில் இருக்கின்ற தியாகதீபம் திலீபன் மருத்துவமனையே மக்கள் விடயத்தில் பெரிதும் உதவி புரிகின்றது. அடிப்படை மருத்துவத் தேவைகளை பொறுத்தவரை ஏனைய எல்லாத் தேவைகளுக்கும் மன்னார் பொது வைத்தியசாலைக்கே செல்ல வேண்டும்.

ஆனால் மன்னார் பொது மருத்துவமனையோ பழைய பாதுகாப்பற்ற கட்டடத்தில் வைத்தியர், தாதியர்கள், ஊழியர்கள் உட்பட 326 ஆளணி பற்றாக்குறையுடன் இயங்கி வருகிறது. ஒரு பொது மருத்துவமனையாக உள்ளதே தவிர மேலதிக சிகிச்சை வசதிகள் எதுவும் இல்லை எனவும் பலமுறை பலரிடம் தெரிவித்தும் பயனேதும் இல்லை என மாவட்ட வைத்திய அதிகாரி ம.கெங்காதீஸ்வரன் தெரிவித்தார்.

## தயக்கம்

தங்களுடைய கல்வியை முடித்துக்கொண்டு சேவை வழங்குவதற்கு எவரும் மன்னாருக்கு வருவதில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது. பொதுவாக தங்களுடைய மேலதிக கல்வி தொடர்வதற்கு மன்னாரில் ஏற்ற நிலைமைகள் இன்மையும் திருமணம் செய்து பிள்ளைகளை உடைய உத்தியோகத்தர்கள் தங்களுடைய பிள்ளைகளை படிப்பிப்பதற்கு ஏற்ற பாடசாலைகள் இன்மை போன்ற காரணங்களை கூறுகின்றனர். ஆனால் இராணுவ ஆக்கிரமிப்பற்ற பகுதிகளுக்கு சேவையாற்றுவதற்கு பெரும்பாலானவர்கள் வருவதில்லை என்றுதான் கூறவேண்டும். இதற்கு அவர்கள் மேற்கூறப்பட்ட காரணங்களோடு போக்குவரத்து பிரச்சினைகள், மின்சாரமின்மை, நீர்ப்பிரச்சினை, மருத்துவப்பிரச்சினை மற்றும் இவ்வாறான பிரதேசங்களில் பணியாற்றுவதால் திறமைகள், அறிவுகள் குறித்த வரையறைக்குள் மட்டுப்படுத்தப்படுவது போன்ற காரணங்களைக் கூறி பணியாற்ற தயங்குவதால்தான் மன்னார் போன்ற பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள நிறுவனங்கள் திணைக்களங்களில் உயர்நிலை தொடக்கம் சிற்றூழியர்கள் வரை பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இங்கு வேதனை தரும் விடயம் என்னவெனில், அந்த மண்ணிலேயே பிறந்து வளர்ந்து கல்விகற்றவர்கள் கூட அந்த மண்ணில் சேவையாற்ற தயங்குவதும் மறுப்பதும்தான். இதைவிட ஒருசிலர் நியமனங்களுக்காக குறுகிய காலம் வேலை செய்துவிட்டு வசதி வாய்ப்புகள் நிறைந்த இடங்களுக்கு மாற்றலாகிச் செல்வதும் காரணமாக அமைகிறது.

## தீர்வுதான் என்ன?

இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்கள் தொடர்பில் அனைவரதும் பார்வை இருக்குமானால் அதன் அபிவிருத்தி, புனர்வாழ்வுதான் என்னாவது? எனவேதான் இவ்வாறான பிரதேசங்கள் வளர்ச்சி அடையவேண்டுமானால் முதலில் வீதிகள் சீராக்கப்பட்டு ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்: அத்தோடு பாடசாலைகளின் தரங்கள் உயர்த்தப்படல் வேண்டும். மேலும் ஒழுங்கான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்படுவதோடு முக்கியமாக இவ்வாறான பின்தங்கிய பிரதேசங்களுக்கு பணியாற்ற முன்வருபவர்களுக்கு அரசாக இருந்தாலும் சரி அல்லது ஏனைய நிறுவனங்களாக இருந்தாலும் சரி மேலதிகமான ஒரு கொடுப்பனவினை வழங்குவதன் மூலமும் சில சலுகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் சேவை செய்ய வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்.

எனவே உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இப்பிரதேசம் தொடர்பில் கரிசனையோடும் அக்கறையோடும் செயற்பட முன்வர வேண்டும் என்று மன்னார் மாவட்ட மக்களின் பிரதான வேண்டுகோள். எனவே உரிய அதிகாரிகள் மனம் வைத்தால் மன்னார் மறுபடியும் மறுமலர்ச்சி காணும்.

**சுழியன்**

யாழ் பொது நூலகம்



புலிகளுக்கெதிரான இராஜதந்திர வலைப்பின்னலை சர்வதேச ரீதியாகப் பின்னும் செயற்பாடுகள் உற்சாகத்தோடும் முழு வீச்சோடும் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றன. கொழும்பு, லண்டன், வோசிங்ரன், நியூயோர்க், புதுடில்லி எனப் பரந்து செல்கிறது இந்த வலைப்பின்னலின் முடிச்சுக்கள். வலையைப் பின்னுவோருக்கும் முடிச்சுக்களைப் போடுவோருக்குமாகக் கோடிக்கணக்கான பணம் தண்ணீராகத் திறந்துவிடப்படுகிறது.

சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னலை உருவாக்கி புலிகளை அச்சுறுத்துவது ஐ.தே.கட்சியின் 2002-2003 ஆட்சியின் மூலோபாயமாக இருபெருங்கட்சிகளுமே தமக்குள் என்னதான் முரண்பாடுகளைக் கொண்டுள்ளபோதும் தமிழ் மக்களின் பிரச்சினை 'தொடர்பாக அவர்களது அடிப்படை நோக்கில் எந்தவிதமான மாறுபாடும் கிடையாதென்பதே.

அம்மையாரின் இராஜதந்திர வலைப்பின்னலின் நெசவாளர்களின் முக்கிய தளமாக அமைந்தது லண்டன் மாநகரமாகும். அங்கே தளங்கொண்டு தீவிரமாக உழைத்த ஒரு குழுமம் மேற்கு நாடுகளின் சகல மட்ட அரசியல்வாதிகள், இராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேசி புலிகளுக்கெதிரானதொரு கருத்துத்தளத்தை மேற்கு நாடுகளில் உருவாக்கக் கடுமையாக உழைத்தது.

ஒன்றியத்தின் தற்போதைய தலைமையான இங்கிலாந்துக்கு தெரிவித்து வருகின்றன.

இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாக உள்ளவர்கள் குறிவைக்கப்படுகின்றனர். செவ்வாய் இரவு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளரான இவர் கடந்த 10 ஆம் திகதி கோப்பாயில் 2ஆம் லெப்ரினன்ற் மாலதியின் நினைவு நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடாத்தியிருந்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரசியற் போராளிகள் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரண

இவர்கள்தான் என்று தானே முரசறைந்த புலிகளை சிங்களப் பேரினவாதம் இராஜதந்திர ரீதியாகச் சுற்றி வளைக்க முனைவதைக் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்கப்போகிறதா? (புலிகள் தமது இராஜதந்திரச் சாணக்கியத்தின் மூலம் இந்த இக்கட்டிலிருந்து கரையேறியவர்கள் என்பது வேறுவிடயம். ஆனால் அதற்காகத் தமிழ்ச் சமூகம் வாளாவிருக்கக் கூடாது என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது).

ஐரோப்பிய யூனியனின் கண்காணிப்பாளர்களைக் கொண்ட குழுவொன்று வெகு விரைவில் இலங்கைக்கு வரவுள்ளது. இக்குழுவில் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை ஆணைக்குழு, சிறுவர்

# ஈழத்து சிவில் சமூகத்தின்; முன்னுள்ள பணி

இருந்தது. இதற்காக ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்திய இராஜதந்திர மூளைகள் மூன்று. மிலிந்தமொரகொட சக்தி வாய்ந்த அமைச்சராக இதற்குத் தலைமையேற்றார். இவரது மனைவி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சின் மருமகள் முறையானவர் என்பது இந்நடவடிக்கைக்கான கூடுதல் அனுகூலமாயிருந்தது. அடுத் தவர் சிதம்பரம் மகேந்திரன். ஐ.நாவுக்கான சிறிலங்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக



**ஐரோப்பிய யூனியனின் கண்காணிப்பாளர்களைக் கொண்ட குழுவொன்று வெகுவிரைவில் இலங்கைக்கு வரவுள்ளது. இக்குழுவில் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை ஆணைக்குழு, சிறுவர் பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

**இந்தக் குழுவினருக்கு தமிழ்ச் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தங்கள் பிரதிபலிப்புகளை நிச்சயமாக வலியுறுத்தவேண்டும். சர்வதேச இராஜதந்திர சமூகத்துக்கு தமிழ் சிவில் சமூகத்தின் உண்மையான கருத்துக்கள் சொல்லப்படவேண்டும். இதற்கான ஏற்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தனியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இந்த தூதுக்குழுவைச் சந்திப்பது தற்போது பயன்விளைவுடையதாக இருக்கமாட்டாது.**

கடமையாற்றினார். இவருடன் இணைந்து வெகு தீவிரமாகப் பணியாற்றியவர் ஐ.நா வில் அப்போது துணைச் செயலர் தரத்திலே இருந்த சிறிலங்காவின் அதியுயர் இராஜதந்திரியான ஜயந்த தனபால. சிதம்பரம் மகேந்திரனும் ஜயந்த தனபாலவுமே ஐ.தே.க வின் சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னலின் நெசவாளர்கள்.

2004 ஏப்பரலில் ஆட்சி மாறிய பின்னர் சந்திரிகா அம்மையார் இந்தப் பாதுகாப்பு வலைப்பின்னல் என்ற மூலோபாயத்தை சர்வதேச இராஜதந்திர வலைப்பின்னல் என்பதாக மாற்றிக் கொண்டார். உண்மையில் இது காட்டுவதென்னவெனில் சிறிலங்காவின்

ஐரோப்பிய ஒன்றியம் கடந்த மாதம் 26 ஆம் திகதி அறிவித்த 'விடுதலைப்புலிகளின் தூதுக்குழுக்களை வரவேற்பதில்லை' என்ற அறிவிப்பை தங்களது சாதனையாக இந்த லண்டன் பரப்புரைக்குழுவினர் பானங்களை அருந்திக் கொண்டாடியிருக்கிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த அறிவிப்பையடுத்து புலிகளுக்கெதிரான, தமிழ்த் தேசியத்துக்கெதிரான, தமிழர்களுக்கெதிரான, அதிதீவிர சிங்களச் சக்திகள் அனைத்துமே வெகுவாக உற்சாகமடைந்துள்ளன. இவை அனைத்துமே தங்களது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு- குறிப்பாக ஐரோப்பிய

மாக விலகிவிட்ட தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு பின்வாங்கிவிட்ட புறநிலையில்; இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ்த்தேசியம் பேசுவோருக்கான அச்சுறுத்தலாகவே கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபரின் கொலை நடந்தேறியிருக்கிறது.

கனடாவின் வோட்டலூவில் தமிழ்த்தேசிய அபிமானிகளான இரு சகோதரர்கள் வாகனத்தால் மோதிக் கொல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பு வெள்ளவத்தை நெல்சன் வீதியில் தினமுரசு பத்திரிகை அலுவலகத்துக்கு முன்பாக சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற குண்டு வெடிப்பு ஒரு



உள்வீட்டு வேலை எனவும்; இதன் மூலம் புலிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்ற கணிப்பை மேற்குலகின் மனதில் மேலும் ஆழமாகப் பதியவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவை அனைத்துமே வெளிப்படுத்துபவை இரண்டு விடயங்களாகும். ஒன்று விடுதலைப்புலிகளின் நற்பெயரைக் கெடுப்பதற்கான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பல முனையிலான வேலைத்திட்டம் வெகுமுனைப்பாக மேற்கொள்ளப்படுகிறது. இரண்டாவது தமிழ்த் தேசிய ஆதரவு நிலைப்பாட்டாளர்களை அந்நிலைப்பாட்டிலிருந்து பிறழ வைப்பதற்கான முனைப்பு. இந்த முனைப்பு மிரட்டல்களிலிருந்து முன்னேறி படுகொலைகளாக அரங்கேறிக் கொண்டிருக்கிறது. கோப்பாயிலிருந்து கனடாவின் வோட்டலூ வரையும் அது விரிகிறது. இந்தச் சூழலை தமிழ்ச் சமூகம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது? தனது ஏகப்பிரதிநிதிகள்

பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் குழுவினருக்கு தமிழ்ச் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தங்கள் பிரதிபலிப்புகளை நிச்சயமாக வலியுறுத்தவேண்டும். சர்வதேச இராஜதந்திர சமூகத்துக்கு தமிழ் சிவில் சமூகத்தின் உண்மையான கருத்துக்கள் சொல்லப்படவேண்டும். இதற்கான ஏற்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தனியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இந்த தூதுக்குழுவைச் சந்திப்பது தற்போது பயன்விளைவுடையதாக இருக்கமாட்டாது.

இதைவிடவும் எமது சமூகத்தின் உணர்வலைகளை வெளிப்படுத்த பலப்

பு.சத்தியமூர்த்தி

பலவிதங்களில் நாங்கள் முயற்சிக்கலாம். தபாலட்டைகளை ஈமெயில்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்பு பணிமனைக்கு இலங்கைத் தீவிலிருந்தும்; பிரசல்ஸ் தலைமைப் பணிமனைக்கு உலகெங்குமிருந்தும் அனுப்பவேண்டும். ''எழுக தமிழ்'' நிகழ்ச்சிக்கு மேலதிகமாக இதனையும் நாம் செய்யத்தான் வேண்டும்.

ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கமென்பது ஒரு தனி அமைப்பல்ல அது ஈழத்திலும் உலகமெங்கிலும் பரந்து கிடக்கின்ற ஈழத்தமிழ் சமூகத்தின் ஒரே நம்பிக்கை; அதனை இக்கட்டுக்குள் விட்டுவிடுவதென்பது இந்த ஒட்டுமொத்தச் சமூகத்தினதும் எதிர்கால இருப்பை இக்கட்டுக்குள் இட்டுச்செல்லுவதாகும்.

# காரசாரம்

## சிந்திக்கத் தெரிந்த மனிதகுலம் — ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாது



சுனாமியடித்து ஏறக்குறைய பத்து மாதங்கள் முடிந்துவிட்டன. சுனாமி சுழியோடி அழிந்து போனவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டும் வருகின்றன. இந்த நிவாரணங்கள் எல்லாம் மக்களின் அன்றாடத் தேவைகட்கானவையாகவே இருக்கின்றன. அடிப்படைத் தேவைகளான வீடு, நிலம், கிணறு என்பனவற்றில் நிலைமை திருப்தியாக இல்லை. குறிப்பாக இம்மக்களுக்கான தற்காலிகக் கொட்டகைகள் போடப்பட்டும், மலசலகூடங்கள் கட்டப்பட்டும், கிணறு, குளிப்பதற்கான மறைப்பு என்பன செய்யப்பட்டும் விட்டன. அதே இடங்களை பல நிறுவனங்கள் பொறுப்பெடுத்து பின்னூட்டல் நிகழ்ச்சிகளையும் செய்யத்தான் செய்கின்றன.

உளவளச் செயற்பாடுகள், இறைவழிபாடுகளுக்கான பக்க வேலைகள், மருத்துவ சேவைகள் என நீண்டு கொண்டே போகும் இப்பட்டியலில் சிறுவர் நலனும் அடக்கம்.

இன்றைய நாட்களில் அடிக்கும் வெயிலும் வீசும் காற்றும் கூட அனலைப் பாய்ச்சுகிறது. இவ்வேளைகளில் சாதாரணமாக மரஞ்செடிகள் இருந்தாலும் மேட்டுத் தெருக்களில் போகும்போது வெப்பம் கானல் முகத்திலறைகிறது.

இதே காலப்பகுதியில் சுனாமிக்கான மீள் கட்டமைப்புப் பணிகள் நிறைவேறாத நிலையில் தற்காலிகக் குடியிருப்புகளில் வாழும் மனிதர்களைப் பற்றிக் கொஞ்சம் பார்ப்போமா?

பாலை மணற்றிட்டுகளில் பச்சை இலைகளையே காணாத வெளியில் போடப்பட்ட மிகப்பதிவான கிடுகுக் கொட்டில்களில் வாழும் மக்கள் முற்றத்தில் கால் வைக்கமுடியாத வெப்பம் அனல் போலச்சுடும் மணலில் கால் வைக்கமுடியாது. அதில் தான் அவர்களது பிள்ளைகள் விளையாடுகிறார்கள்.

அந்தச் சின்னட்டிக் கொட்டிலில் பிள்ளைகளை அடைத்து வைக்க முடியாது. சமையலுக்கு விறகுதான். அந்த வெப்பமும் குடிசையைச் சூழுகிறது. பிள்ளைகளின் விளையாட்டுத் திடலுக்கென அந்தப்பாழ் வெளிமணலில் ஒரு ஸ்தாபனம் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களைக் கட்டிக்கொடுத்துள்ளது. ஆனால் காலை ஏழுமணிக்குப் பிறகு அதில் பிள்ளைகள் விளையாட முடியாது வெயில் வந்துவிடும். பின் மாலை யில் அவற்றைத் தொடக்கூட முடி யாது சூடேறிப் போயிருக்கும்.

கிணறுகளில் நீர்கிடையாது. மலசலகூடங்கள் அநேகமானவை சேதமாகிவிட்டன. இந்த வெப்பச் சூழலில் தினசரி அவர்களோ அல்லது பிள்ளைகளோ குளிப்பது கேள்விக்குறிதான். மாதந்தோறும் வரும் மருத்துவ சேவை இவர்களுக்கு அடிக்கடி கிடைக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு சொல்லும் மக்களுக்கு ஒரு நாட்டில் புதிதாக ஆஸ்பத்திரிகள் கட்டுவதும் சிறைச் சாலைகள் திறப்பதும் விழாவாகக் கொண்டாட வேண்டிய விசயமில்லை என்பது தெரியவில்லை. நோயாளர்களும், குற்றவாளிகளும் அதிகரித்தால்தான் இவற்றுக்கான தேவைகள் வரும். இந்தப் பிரதேசங்களில் பாராட்டப்படக்கூடிய ஒரே அம்சம் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே கூலி, தினமும் நூறுரூபாய்கள். பெண்கள் உழவியந்திரப் பெட்டிக்கு மண் ஏற்றப் போகிறார்கள். பசியாரிடமில்லை. பஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

என்ன குடிநீர்த்தாங்கிகள் பெரும்பாலும் வெறுமையாகவே உள்ளன. இதற்கான நீர்விடுவதற்கு மண்ணெய் இல்லாததால் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்க முடியவில்லை என்றார்கள். அந்த மண்ணெய் விநியோகம் உரியவர்களால் கவனிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. சுடச்சுட ஒரு பிரச்சினையில் நான் நானென்று முன்வரும் நிறுவனங்கள் நாட்பட நாட்பட தங்களுக்கான காலம் முடிந்துவிட்டதாகக் கூறி கைகழுவி விட்டுவிடுகின்றன. ஆனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலம், படகு, வலை என்பனவும் வழங்கினாலும் அவற்றை வைத்துப் பேணும் வசதியை யார் கொடுப்பது. அரசாங்கமே கைவிட்ட நிலையில் அவர்களைப் பசிபட்டினியில்லாமல் காப்பது பாராட்டப்பட்ட விடயம்தான். என்றாலும் அவர்கள் பச்சை மரங்களையே காணக்கூடாது என்ற முறை ஆச்சரியம்தான். இவர்களுக்கான குடியிருப்புக்கள் பாலை வெளியாகத்தான் இருக்க வேண்டுமா? சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் ஏனோதானோவென்று கொண்டுபோன விளையாட்டுக்கான ஊஞ்சல், சறுக்கல் போன்ற உபகரணங்களை தனியார் ஒருவரிடம் கையளித்து விட்டு வந்துவிட்டது ஒரு நிறுவனம். அதைப் பெற்றுக்கொண்டவரோ, அது தனக்கு வழங்கப்பட்டதாகவும் தான் நினைத்தபோது அதை தேவையான இடத்தில் பொருத்துவேன் என்று கூறுகிறார் என்றார்கள். சரி, இது பற்றி ஏதாவது முறைப்பாடு உரிய இடத்துக்கு செய்தீர்களா என்றால் இல்லை. "எனக்கென்ன போச்சு"

மக்களிடம் விழிப்புணர்ச்சி போதவில்லை. எந்த விடயத்திலும் அது தமக்கு உரிமையான ஒரு விடயத்தைக் கேட்கிறோம் என்றில்லாமல், ஏதோ இலவசமாகத் தருகிறார்கள். கிடைத்தவரை சந்தோசம் என்றும் கிடைக்காத போது யார்மீதாவது சலிப்பு என்றும் போகிறது காலம்.

இப்படித்தான் வாழ்க்கை என்ற மனோபாவம் எப்போதும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு வந்து விட்டது. ஒரு அமைதியான, உரிமையுடன் கூடிய ஒரேயிடத்தில், உறவுகள் சூழ வாழ்ந்த வாழ்வும் அரிவரி தொடக்கம் பன்னிரண்டு வகுப்புகளையும் ஒரே பாடசாலையில் ஏறக் குறைய ஒரே பள்ளித் தோழர்களுடன் பயின்ற அனுபவமும், இன்றைய இளைஞர்களுக்கில்லை. அயலவர், அயற் தோழர், தோழர் தோழியர் என்பது திருமண வாழ்க்கை வரும்போது மட்டுமே குலையும். ஆனால் இன்றைய இளைஞர்களுக்கு...

தைமுதல் மாசிவரை ஒரு அயலவர் மாசிமுதல் பங்குனி வேறு வசிப்பிடம் என்பது கடந்த இருபத்தைந்து வருடங்களாக உள்ள நடவடிக்கை. வளர்ந்தவர்களைப் போல சலித்துக் கொள்ளாமல் எங்கு போனாலும் சட்டென ஒட்டிக் கொண்டு இசைவாக்கமும் அடைந்து விடுகின்றனர்.

இதுவே ஒருபுறம் நன்மையாக இருந்தாலும், மறுபுறம் மாபெரும் தீமை விளையவும் காரணமாகிறது. தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் எந்த இடத்தையும் சொந்தமாக நினைத்து அபிவிருத்தி செய்யும் மனப்பான்மையை இல்லா தொழித்துவிட்டதுடன் சமூகச் சீர்கேடுகளையும் வளர்த்துவிட்டது.

கூசாமல் ஆண் பெண் நட்புகள் ஏற்பட்டு, அவை காதலாகக் கணிக்கப்பட்டு காமமாக மாறி கையில் குழந்தையுடன் கைவிடப்படும் பெண்களை அதிகரிக்க வைக்கிறது. நன்றாக சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு நிலையான வாழ்விடத்தில் நிலையான அயலவர்கள் மத்தியில் இப்படி நடந்தால் கிராமத்தவர்களே அந்தப் பிரச்சினையில் தலையோட்டு உறவாக்கி விட்டகாலம் இருந்ததில்லையா? இதுதான் இன்றைய குற்றச்செயல் களின் அடிநாதம். எங்களுக்கென்றொரு காடு, எங்களுக்கென்றொரு வீடு.

இதைநாம் விரைவில் தேடத் தவறினால் மிக மோசமான இழிநிலைக்குள் தள்ளப்படப் போகிறோம். இழப்புகளில் வீழ்ந்துபடும் மக்களை இலக்காக வைத்தே பல நாடுகள் தமது சந்தையை எங்கள் மண்ணில் விரித்து வைத்துள்ளன. கவர்ச்சிகரமான திட்டங்கள் கேட்கும் போதும் பார்க்கும் போதும் கண்ணைக் கவருகின்றன. போதை ஏற்படுத்தி மயங்கவைக்கின்றன. எங்களுக்கு என்ன நேர்ந்தது. என்ன நேரப்போகிறது என்ற சிந்தனைக்கு எமக்கு நேரமில்லை. எங்களை சிந்திக்கவே விடாமல் கூட்டம் கூட்டம், கூட்டமென்று நடாத்தி தங்கள் சிந்தனைகளை மக்களிடம் திணித்துக் கொண்டேயிருக்கின்றனர்.

முடியுமா? உங்களால் மீளமுடியுமா? குழாய்த்தண்ணீரும், கூப்பன் அரிசியும் பிளாட்டிக் பாத்திரங்களும், அளந்து போடும் உணவுவகைகளும் உங்களுக்குப் போதும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஏற்றுக்கொள்ளும் மக்கள் இருக்கும் வரை இது நடக்கத்தான் போகிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டிலே, எழுபத்தேழிலே , எண்பத்தொன்றிலே, எண்பத்து மூன்றிலே, தொண்ணூற்று நாலிலேயெல்லாம் ஏற்பட்டது இயற்கை அழிவல்ல. ஆனால் இந்த அராஜகங்களின் பின்னணியிலேயே தமிழரை தற்குறிகளாக்கும் முயற்சி தொடங்கிவிட்டது. சிந்திக்கத் தெரிந்த மனிதகுலம் ஒருபோதும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடி பணியாது. கட்டிவைத்துத் தீனி போட்டால் யானையும் அடங்கும் இது தான் உண்மை. நாங்கள் வலியவர்கள், சுதந்திரத்துக்காக உயிரையும் கொடுக்கும் அளவுக்கு உயர்ந்தவர் கள். சுனாமியைச் சாட்டிச் சும்மாயிருக்கக் கூடாது. சும்மாயிருக்கச் சுகமொன்றிருக்குது என்பது துறவிக்கு, நாம் துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும் துணையாக வாழவேண்டியவர்கள். எம்மைப் பாழ் வெளியில் போட்டாலும் வாழுவோம் என்ற நிலைசரிதான். அதற்காக பாழ்வெளியில்தான் வாழ வேண்டுமென்றில்லை. விழிப்புணர்வு மிக முக்கியம், எமது உரிமை கஞ்க்காக ஓங்கி ஒலிக்கவேண்டும். ஒலிப்போம்.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாட்சி

தெக்கத்திக் கள்ளனடா....ஆ....
தென்பாண்டி மன்னவண்டா...ஆ...

எட.... என்னவாமடா உங்கால காலங்கலிபிரண்டு கத்தரிக்கா மூள்பிரண்டு போச்சு. ந.. ஆறுமுகத்தார் இருந்தாப்போல மாறிட்டார். எடேய் இப்ப பொதுசன மக்கள் முன்னணிக்க பொத்தல் விழுந்து கொஞ்சம் வெளியாலயும் கொஞ்சம் உள்ளுக்கயுமாப் போட்டுதுபோல. எடேய் எனக்கு என்மாரி வருதெண்ணுறாய். உவர் தொண்டா இருக்கேக்க இருந்த கொள்ளையப் பேரன் விடாமப் பிடிச்சிருக்கிறார்.

ஆனா கையோட அம்மா வெளிநாடெல்லாங் கொண்டு சுத்திஏதோ கதைய அவுட்டு விட்டிட்டாவெண்டும், ஒரு கசமுசப்பு எழும்புதுடா கவனிச்சியே. மகிந்தற்ற பிரச்சாரக் கூட்டங்கள்ள அவ கலந்துகொள்ளமாட்டாவெண்டும் சொல்லியாச்சு. இந்த ஆரவாரத்துக்க அவ வெளிநாடுகளுக்க ஓடுப்பட்டுத்திரியிறதிலயும் ஒரு ஞாயமிருக்குப் பொடியா. மனிசி இனி உப்பிடி அந்தஸ்தோட எங்கசுத்தப்போகுது. தம்பியும் தமக்கையுமா ஓடித்திரிஞ்சு சாதிக்கப்போறது ஒண்டுமில்லை. பின்ன காலமும் போகுது பின்னக் கதையோட கதை சனாதிபதியா வாறத்துக்கு பதின்மூண்டுபேர், பேர் குடுத்திருக்கினமாம்.

முக்கியமா சித்தாலேப யாவாரியாருக்கும் தலையிடி பிடிச்சிருக்குப்போலதான் தெரியுது. எப்பிடியெண்டாலும் சனாதிபதித் தேர்தல்ல வெற்றிய நாங்கள்தான் தீர்மானிக்கப் போறமெண்டு சவால்விட்ட ஜே.வி.பியின்ர சாயம் வெளுத்துக் கொண்டு போகுது. லண்டனால வந்த அவயட தலைவரய்யா கொழுவுப்பட இடமில்லாம ஆமிக்காறரோடயெல்லே கொழுவுப்பட்டிருக்கிறார். பின்ன இப்ப கொதிச்சுக் கொண்டிருக்கிற எண்ணைச்சட்டி போலயெல்லே இராணுவ நிருவாகம் இருக்குது. இது விளங்காம இப்பபோய் உந்தக் கதைய அப்பளம் போட்டமாரி அதுக்க போட்டாப் பொரியாமவிடுதே. ஒரு கிரிமினல். குற்றவாளியளோட கூட்டுச் சேர்ந்துகொண்டு மகிந்தரய்யா புலியளப்பற்றி கதைக்கிறார்.

ந... எத்தின பத்திரிகையாளர்களை, எத்தின அரசியல் வாதியள, எத்தின பொலிசை ஆமிய எத்தின சனத்தை சுட்டுத்தள்ளின இயக்கம் ஜே.வி.பி...ந இவயட ஆயுதங் களைக் களைஞ்சு போட்டினமே... அதை கீழ வச்சிட்டமெண்டு ஏதும் பேச்சு வார்த்தையில ஒப்புக்கொண்டவையே. இப்பயும் அந்த கொலைகாறர் சுதந்திரமா திரியிறதுமில்லாம... தேர்தலில் நிக்கவும் இனவாதங் கதைக்கவும் இவையளோட கூடிக்குலாவி குடிச்சு விருந்துதிண்டு... மற்றவையப் பற்றிக் கதைக்கவெளிக்கிட்டிட்டினம்.

ஒரு நாளையில உந்த இலங்கை முழுக்கப் பிடிக்க வெளிக்கிட்டவைக்கு ஒரு முழ நிலத்துக்க நிண்டு புலியள் உவள நாட்டை திரும்பிப் பாக்கவைச்சது பெரிய புதினமாத்தான் கிடக்கும். அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது. சண்டைக்கு வரப்போகினமாமோ சனத்தின்ர காசில ஒண்டரை வரியத்துக்கொரு லெச்சன். காணாததுக்கு மாசத்துக்கு மூண்டு வெளி நாட்டுச் சுற்றுலா, பிறகு சண்டைக்கு விட்டிட்டு...கஞ்சி குடிக்கப்போகினமே.. பாப்பமே... "அரிவாளுமாடக் குடுவையுமாடும்" குடுவையும் நிக்கத்தானே போகுது.

பின்ன சமாதான காலம் கொஞ்சம் அஞ்சப்பத்தச் சேர்த்ததுதானே. அதைக் கொணந்து இஞ்சால தரும் வரைக்கும் நித்திரை வரவே போகுது. நடக்கட்டும் நடக்கட்டும் இல்லத் தெரியாமத்தான் கேக்கிறன் இவயளின்ர வீட்டுச் சொத்தையே கேக்கிறம். எட இதிருக்கட்டுமடா இன்னுமொரு கதை... வெளியில கதைச்சுப்போடாதை. அம்மா... அதுதான் சனாதிபதியம்மா... ரணிலுக்குச் சப்போட்டாம்.

எடேய் வெளியில சொல்லிப்போடாதை பிறகு என்ரபாடு... துலைச்சுப்போடும் மனிசன் ஏனடி உனக்குந்தக் கதையெண்டு இல்ல... ஆறுமோத்தாரையும் கக்கீங் காக்காவையும் திசைமாத்தி விட்டது அம்மாதானெண்டொரு கதையடிபடுது!.

விட்டேத்தியாத் திரிஞ்ச சில்லறைக் கட்சியளுக்கும் இவைதானாமடா கட்டுக்காசு கட்டினது. என்னேயிற எங்களுக்கு 'போனால் போகட்டும் போடா' எண்டு இருக்கக் கிடைச்சது பெரியவிசயம். பின்ன மலை நாட்டிலயும் கொழும்பு புத்தளம் வழியவும் இருக்கிற தமிழ்ச்சனம் ஆருக்கோ கீறிப் போடத்தானே வேணும். கனக்க என்னத்துக்கு ஒரு அதிசயம் நடந்தாப்போல தமிழருக்கு ஐரோப்பிய யூனியன் போட்ட பயணத்தடைக்கும் உந்தக் கிரகநிலைதான் காரணம். கிரகம் மாறுதோ இல்லாட்டி பிடிச்சாட்டுதோ இலங்கையின்ர தலைவிதி இப்போதைக்குச் சரியில்ல.யாவாரியள் பாடு அந்தரமாப் போச்சு. ஆனா மகிந்தருங் கூட்டாளியளுக்கும் வெண்டாலும் சோதினை தோத்தாலுஞ் சோதினைதான்.



மண்ணின் மைந்தர்களின் கதை

# தனையழித்து பகைமுடித்த இளம் புலிவீரன்

இன்று முகமாலையில் நிறுத்தப்பட்டிருக்கும் சிங்கள இராணுவம் அன்று கிளிநொச்சி முன்னரங்கு பகுதிகளா-- சுட்டதீவு, சேவியர் ,டைச்சந்தி, கிளிநொச்சி திருவையாறு, 3ஆம் வாய்க்கால், முரசுமோட்டை, ஊரியான் என மிக நீண்டதொரு பிரதேசத்தை ஆக்கிரமித்து நின்றது. அதே சமகாலத்தில் எதிரியை முன்னேறவிடாமல் தடுக்க எமது போராளிகளும் நீண்ட பிரதேசத்தில் காவலரண் அமைத்து பாதுகாப்புச் சமரில் ஈடுபட்டிருந்தனர். இந்தக் காலப்பகுதியில்தான் காவலரணே எமது வாழ்வாக இருந்தது.

நீண்டதொரு காவலரண் தொடர் என்பதனால் பாதுகாப்புச் சமர் என்பது வர்ணிக்கமுடியாத சமராக இருந்தது. வெயில், மழை, குளிர் எல்லாம் ஒன்று சேர இருந்தது. பசி, தாகம், வரட்சி இவை எம்மை வாட்டிய காலம். உணவு கிடைப்பதே பெரும் பாடாக இருக்கும்போது சிலவேளை எதிரியின் எறிகணை வீச்சில் உணவு எடுத்துவரும் ஊர்தி சேதமடையும் அல்லது உணவு எடுக்கப்போகும் போராளி எறிகணை பட்டு வீரச்சாவடைவான். இவை இரண்டுமே நடக்காது விட்டால்தான் எமக்கு உணவு கிடைக்கும். இப்படியான ஓர் நாளில்தான் அந்தப் போராளியின் கடமையுணர்வு வெளிப்பட்டது.

98 ஆம் ஆண்டின் ஆரம்பகாலம் கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திக்கு கிழககுப்புற வீதியில் பண்ணை பாலத்தடியை கடந்து கூப்பிடுதூரத்தில் எமக்கான காலை உணவு வந்துவிட்டது. உணவூர்தியை செலுத்திவருவது ஒரு போராளி என்பதனால் மிகவும் கவனமாக சத்தத்தைக் குறைத்து செலுத்தி வந்தான். உணவூர்தியைக் கண்டால் தான் எங்களுக்கு தெம்பு பிறக்கும் காலமது என்பதனால் எல்லோரும் என்ன வந்திருக்கும் என எங்களுக்குள்ளேயே விவாதித்துக் கொண்டிருந்தோம். விவாதத்தின் முடிவு சாக்குப்பிட்டும் கருணைக் கிழங்கும் வந்துவிட்டதை உணர்த்தியது. அதை நினைத்த நேரத்தில் மறந்தவர்களாய் எமது வேலைகளை செய்துகொண்டிருக்க எமக்கான உணவெடுக்க அந்த இளம் போராளி உரப்பையுடன் முன் செல்கிறான்.

உணவூர்தி சென்று சிறிது நேரத்திலே உணவு பிரித்துக் கொடுக்கப்பட, எமக்கான உணவினை எடுத்துக் கொண்டு மாவீரன் வீரவேங்கை தேனமுதன் அணிகளிருந்த பாலத்தை நோக்கி வருகிறான். அதே சம நேரத்தில் எதிரியின் எறிகணை ஏவுதளங்கள் தனது அனல் நாக்கைத் திறந்ததை டப்....டும்....டப்....டும் என்ற பல சத்தத்தின் மூலம் உணரமுடிந்தது. எதிரி பலரக எறிகணைகளை ஏவிவிட்டான் என்பது கணப்பொழுதில் எங்களால் உணர முடிந்தது.

எனவே நாம் எல்லோரும் காப்பகழியின் வாசலிலிருந்து ''தேனமுதன் ஓடிவாடா''

தேனமுதன் ஓடிவாடா என்று கத்துகிறோம்.

ஆனால் எங்களோடு இருந்த மருத்துவப் போராளி ராஜ்

தேனமுதன் ஓடிவரேலாது படுடா, ஓடிவரேலாது காப்பெடு என்று சொல்லி முடிப்பதற்கிடையில் எம்மைத்தாண்டிச் சென்ற எதிரியின் ஆட்லறி எறிகணைகள் வட்டக்கச்சிப் பக்கமாக வெடிக்க நாமிருந்த இடத்திலும் தேனமுதன் இருந்த இடத்தைச் சுற்றிலும் எதிரியின் 81 மி.மீ பல எறிகணைகள் வெடித்துச் சிதறின.

எறிகணை வெடிப்புக்கள் ஓய்ந்ததும் வெளியில் எட்டிப் பார்த்தால் மாவீரன் வீரவேங்கை தேனமுதன் உணவுப் பொதியை கட்டிப்பிடித்தபடியே காப்பெடுத்து கிடந்தான்.

இப்போது அவனுக்கும் எங்களுக்குமான தூரம் 150 அடியாக இருந்தது. எதிரி தொடர்ந்து எறிகணைகளை ஏவியதால் அவனால் எழுந்து எமது காப்பரணுக்கு ஓடிவர முடியாது அப்படியே ஓடி வந்தாலும் உணவுப்பொதியை கொண்டுவர முடியாது. எனவே போராளிகளின் அன்றைய உணவானது அவர்களுக்கு போய்க்கிடைக்கவேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அதனை பாதுகாப்பதையே தனது கடமையாக நினைக்கிறான். காரணம் அன்றைய நாளில் போராளிகள் காப்பரண் அமைக்கவும் வேலி அடைக்கவுமென நிறைய வேலைகளைச் செய்யவேண்டியிருந்தது.

எனவே ஓடிவரச் சொல்லியும் வரவில்லை. காப்பெடுக்கச்சொல்லியும் காப்பெடுக்கவில்லை. மாறாக, அடுத்தடுத்து எதிரியின் 60 மி.மீ எறிகணையும் 81 மி.மீ எறிகணையும் வந்து விழுந்து வெடிக்கத், தான் எடுத்து வந்த உணவுப் பொதியை பாதுகாப்பதிலேயே அந்த இளம்புலிவீரன் முனைப்பாக இருந்தான். எறிகணை விழுந்து வெடித்துச் சிதறி அவனது உயிரைக் குடிக்கப் போகும் கணத்திலும் அவன் தனது தோழர்களுக்காய் சுமந்து வந்த உணவுப் பொதியை தனது உயிரைவிட மேலாகப் பாதுகாத்தான்.

அந்த இக்கட்டான நிலையில் உயிரை பறிக்கின்ற விநாடிகளில் தன் சக போராளிகளுக்காக எதைப் பாதுகாக்க நினைத்தானோ அதை பாதுகாத்துவிட்ட பெருமையுடன் எறிகணைகள் வெடிப்பு ஓய்ந்தவுடன் எழுந்து சிரித்துக்கொண்டே ஓடோடிவந்தான்.

தப்பிட்டேன், நான் தப்பிட்டேன் என்று சிரித்துக் கொண்டு ஓடோடி வந்தவனின் உடம்பெல்லாம் புழுதி படிந்திருந்தது. தலை முழுவதும் மண்ணால் நிரப்பப்பட்டிருக்க ஏதோவொரு பிசாசு வருவது போல் வந்து சேர்ந்தான். எல்லோரும் வியந்து நிற்க அன்றைய நாளின் அவனது சமையல் பணியைத் தொடர்ந்தான்.

மாவீரன் வீரவேங்கை தேனமுதன் (சின்னச்சாமி புஸ்பநாதன்) இளம்புலிவீரன் என்பதனால் எப்போதுமே ஒரு துடிப்பான போராளியாக இருந்தான். ஜெயசிக்குறு தொடங்கிய காலத்தில் தன்னை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் இணைத்துக் கொண்டவன் குறுகிய காலத்தில் ஜெயசிக்குறு எதிர்ச்சமர், அதிலும் புளியங்குளச்சமர், தாண்டியடி, ஓமந்தை, பெரியமடு பனிக்க நீராவி போன்ற சண்டைகளுடன் கிளிநொச்சி 2ஆம் மாதம் 1ஆம் திகதி சண்டையிலும் பங்குகொண்டான்.

தேனமுதனிடம் எப்போதும் 06 கைக்குண்டுகள் இருக்கும். காரணம் அவன் அணியில் குண்டுக்காரனாகவே இருந்தான். அந்நேரத்தில் சண்டை அணியில் குண்டுக்காரனுக்கே சுமை அதிகமாக இருக்கும். குண்டு, தண்ணீர் குவளை, நோயாளர் காவி (ஸ்ரெச்சர்) என எல்லாமே குண்டுக்காரர்களின் தலையிலேயே சுமைவிழும். இப்படியான நாளொன்றில் தான் அவனது இறுதிக்கணமும் நகர்ந்தது.

20.05.98 இரவு 11 மணிக்கு எமது எல்லா அணிகளும் கோவிந்தன் கடைச்சந்தி தொடக்கம் 3ஆம் வாய்க்கால் வரை காவலரண்கள், நகர்வரண்கள் வெட்டுவதிலும் வேலி அடைப்பதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, வேலை செய்யும் அணிக்கு பாதுகாப்பு வழங்க ரி 56-1 உடன் தேனமுதன், லெப்.நிலாவேந்தனையும் காவல் கடமையில் விட்டு அணிகள் வேலை செய்து கொண்டிருந்தோம். நாம் உசாரில்லாமல் வேலை செய்வதாக எண்ணி எதிரியின் பெரியதொரு அணி 3 முனைகளில் நகர்வை மேற்கொள்ள அவ்வணியின் திட்டம் பன்னங்கண்டி ஊடாகவும் தென்னம்பிள்ளை பண்ணை ஊடாகவும் வட்டக்கச்சியைப் பிடிப்பதாகும். அதே எண்ணத்தில் நகர்ந்தவர்கள் வீரவேங்கை தேனமுதனும், லெப்.நிலாவேந்தனையும் எதிர்பார்க்கவில்லை.

தேனமுதன் எதிரியை மிக அருகில் கண்டதும் தனது இரண்டு கை எறிகுண்டுகளை மளமளவென கழட்டி எறிகிறான், பின் நிலாவேந்தனும் சேர்ந்து இன்னும் இரண்டு குண்டுகளை எறிந்து விட்டு சடசடவென சுட்டவாறே அணிகள் இருக்கும் இடத்திற்கு பின்வாங்கி வந்து நிலைமையை சொல்கிறான். அவ்விடத்தில் சொற்ப போராளிகளே இருந்ததனால் முழு எதிரியையும் எதிர்க்க எல்லோரும் பிரிந்து செல்கிறார்கள். மீண்டும் தேனமுதனை நோக்கி எதிரி முன்னேறிவர தன்னிடமிருந்த எஞ்சிய நான்கு குண்டுகளில் மூன்றை அடித்துவிட்டு ஒன்றை உருவிக்கொண்டு இருந்தவன் எதிரி கிட்ட வந்ததும் கையை விடுகிறான். அதே குண்டில் மூன்று எதிரி சாவடைய தேனமுதன் தாய் மண்ணை முத்தமிடுகிறான்.





க.பிரேசு



## சிறுகதை

"மலர்கள் கவிதையை 1947ஆம் ஆண்டில் 'வசந்தம்' என்ற இதழில் எழுதி எழுத்துலக வாழ்வை ஆரம்பித்தவர் வ.அ.இராசரத்தினம். தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இலங்கை கிழக்கு மாகாணத்தை இலக்கியத்தில் வெகு யதார்த்தமாக சித்தரித்து எழுதியவர்களில் ஒருவர்.

சிறுகதை, நாவல், நாடகம், மொழிபெயர்ப்பு என்று பல்வேறு துறைகளிலும் தடம்பதித்தவர். 'கொழுகொம்பு'(1959) 'துறைக்காரன்' (1969) 'கிரௌஞ்சப்பறவைகள்' (1978) ஆகியன நாவல்கள். தமிழரின் பாரம்பரியப் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்களின் பண்பாட்டையும், வனப்பையும் பதிவுசெய்திருக்கிற நாவலாக 'கொழுகொம்பு' விமர்சகர்களால் மதிப்பிடப்படுகிறது. ஈழத்தின் சிறந்த கதையான தோணியை உள்ளடக்கிய தொகுதி (1962) பிறமொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.



# தோணி

கருநீலமாகப் பரந்துகிடக்கும் வங்காள விரிகுடாவைப் பார்த்தவாறு எங்கள் கிராமம் இருக்கிறது. கிராமம் என்றா சொன்னேன்? பூமி சாத்திர, சமூக சாத்திரத்தின் நியதிப்படி கிராமம் என்றால் எப்படியிருக்குமென்று எனக்குத் தெரியாது. சோழகக் காற்றுச் சரசரத்துக்கொண்டிருக்கும். தென்னை மரங்களடியிலே அங்கொன்றும் இன்கொன்றுமாக ஏறக்குறைய முப்பது ஓலைக் குடிசைகள் இருக்கின்றன. ஒரு குடிசையிலிருந்து மற்றக் குடிசைக்குப் போக பெண்களின் தலைவகிடு போல ஒற்றையடிப்பாதைகள் செல்கின்றன. இந்தக் குடிசைகள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் கிராமம் என்று சொல்கிறேன். சரியோ, பிழையோ? உங்கள் பாடு.

எங்கள் குடிசைக்கு முன்னால் தென்னைமரங்கள் இரண்டைச் சேர்த்து நீண்டகம்பு ஒன்று எப்போதும் கட்டப்பட்டிருக்கும். அதிலேதான் தூண்டிற் கயிறுகளையும் தோணியைச் செலுத்த உதவும் சவளையும் என் தந்தையார் வைப்பது வழக்கம். அதன் கீழே தென்னை மரத்தினடியிற் பென்னம் பெரிய குடம் ஒன்று இருக்கும். அந்தக் குடத்திலே தண்ணீர் எடுப்பதற்காக ஒற்றையடிப் பாதை வழியாக அம்மா அடுத்த குடிசைக்குப் போகும்போதெல்லாம் நானும் கூடப் போயிருக்கிறேன்.

அநேகமாகக் காலைவேளையில் அம்மாவும் அப்பாவும் வீட்டில் இருக்கமாட்டார்கள். அப்பா கோழி கூவும்போதே எழுந்து கடலுக்குப் போய்விடுவார். அம்மாவிற்கு வெளியே என்ன வேலை இருக்குமோ, என்னால் ஊகித்துக்கொள்ளமுடியாது. ஆனால் அம்மா வீட்டிற்கு வரும்போதெல்லாம் பனையோலைப்பெட்டியில் அரிசியும், மரவள்ளிக்கிழங்கும், தேங்காயும் கொண்டு வருவதை நான் பார்த்திருக்கிறேன். அம்மா வீட்டிற்கு வந்து சிறிது நேரத்திற்கெல்லாம் அப்பாவும் தூண்டிற்கயிறுகளோடும், சவளோடும், மீன் கோவையோடும் வீட்டுக்கு வந்துவிடுவார்.

அப்பாவும் அம்மாவும் வீட்டிலில்லாத நேரங்களில் ஒரே குஷிதான்! ஏறுவெயிலின் மஞ்சட் கிரணங்கள் சரசரக்கும் தென்னோலைகட்கூடாகவும், முகடு பிய்ந்துகிடக்கும் எங்கள் வீட்டுக் கூரைக்கூடாகவும், துள்ளிப் பாய்ந்து நிலத்தில் வெள்ளித்துண்டுகளைப்போல வட்ட வட்டமாக ஒளியைச் சிந்தும் அந்த வட்ட ஒளியை நான் என் கையால் மூட, அந்த ஒளி என் புறங்கையில் விழ, அடுத்த கையால் நான் அதை மறைக்க, அவ்வொளி அடுத்த கையிலும் விழ, நான் கைகளை ஒளிவிழுமாறு உயர்த்தி உயர்த்திக்கொண்டே போவது எனக்குப் பிடித்தமான விளையாட்டாக இருக்கும். ஆனால் கூரைக்கூடாக ஒளி பாய்ந்துவரும் துவாரம், என்னால் எட்ட முடியாத உயரத்தில் இருக்கிறபடியால் நான் விளையாட்டை முடித்துக்கொள்வேன்.

குடிசைக்கு வெளியே வந்தால், அங்கே பக்கத்து வீட்டிலிருந்து என் நண்பன் செல்லனும் வந்திருப்பான். செல்லன் என்னைவிட நோஞ்சான். பாய்மரக்கம்பு போல நீளமாக இருப்பான். இன்னமும் ஐந்தாறு வருடம் சென்றால் அவன் தென்ன மரத்து வட்டைத் தொட்டு விடுவான் என்று என் அம்மா கூட அவனைப் பரிகசிப்பதுண்டு.

செல்லன் வந்ததும், நான் எங்கள் வீட்டுப் படலையை இழுத்துச் சாத்திவிட்டு, அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே ஆற்றங்கரைக்கு ஓடுவேன்.

ஆற்றங்கரை, வீட்டிலிருந்து அதிக தூரத்திலில்லை. வங்காளக்கடல் சிறிது உள்ளே தள்ளிக்கொண்டு வந்து ஒரு சிற்றாறாக எங்கள் கிராமத்திற்கூடாகச் சென்று கொண்டிருந்தது. இந்த ஓடையில் பூரணையன்று வெள்ளம் வரும்போது தண்ணீர் எங்கள் வீட்டு முற்றத்துக்கே வந்துவிடும்.

அந்த ஆற்றங்கரையின் ஓரமாக, ஆற்றில் நீண்டு வளர்ந்த கோரைப்புற்கள் சடைத்துக்கிடக்கின்றன. அந்தப் புற்களினடியில் நீருக்குள் ஓசைபடாமல் இருகைகளையும் கூட்டிவைத்து இறால் பிடிப்பதில் எங்கட்குப் பரம திருப்தி. என்றாலும் இந்த விளையாட்டில் எங்கட்கு அலுத்துப்போய்விடும். அதன்பின் நாங்கள் நேரடியாகக் கடற்கரைக்கே போய்விடுவோம்.

கடற்கரையில் கச்சான் காற்று சுழற்றி சுழற்றி அடிக்கும். அந்தக் காற்றில் இராவணன் மீசைகள் எல்லாம் நிலத்தில் பட்டும் படாமலும் உருண்டு உருண்டு, பந்தயக்குதிரை போல வேகமாக எங்களைநோக்கி ஓடிவரும். அவைகளைத் துரத்திப் பிடிப்பதற்காக நானும் செல்லனும் எங்கள் அரையில் கட்டியிருக்கும் துண்டைக் கழற்றிக் கழுத்தை வளைத்துப்போட்டுக்கொண்டு கோவணத்தோடு ஓடுவோம். இரண்டு மூன்று இராவணன் மீசைகளைத் துரத்திப் பிடித்தபின், அந்த விளையாட்டிலும் எங்கட்கு அலுப்பு ஏற்பட்டுவிடும்.

அதன்பின்னால் நாங்கள் இருவரும் கடற்கரை வெண்மணலில், மதாளித்துப் படர்ந்துகிடக்கும் அடம்பன் கொடிகளின் மேல் குந்திக்கொள்வோம். பதை பதைக்கும் வெயிலில் அந்த அடம்பன்கொடி மெத்தை எங்களுக்குக் "கோடையிலே இளைப் பாறிக்கொள்ளும்வகை கிடைத்த குளிர்தரு" வாகத்தான் இருக்கும். அந்தப் பட்டுமெத்தையின் மேல் வீற்றிருந்துகொண்டு எதிரே கடவுளைப்போல ஆதியும் அந்தமும் அற்றுப்பரந்துகிடக்கும் கருநீலக்கடலிலே அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பாய் விரித்தாடும் பாய்த்தோணிகளைப் பார்த்துக்கொண்டிருப்போம். கடற்பரப்பிலே வெள்ளைச் சீலைப் பாய்கள் வட்ட வட்டமாக வண்ணாத்திப் பூச்சிகளைப் போல அழகாக இருக்கும். அவைகளில் ஏதோ ஒன்றில்தான் என் தகப்பனார் இருப்பார். ஆனால், எதிலே அவர் இருக்கிறார் என்று திட்டமாக எனக்குத் தெரியாது. எனினும் ஏதாவது ஒரு தோணியைக் குறிப்பிட்டு அதில்தான் அவர் இருப்பதாக எண்ணிக்கொள்வேன். அந்த நம்பிக்கையில், முகத்தில் 'சுள்' என்றடிக்கும் சூரியக்கிரணங்களை நெற்றிப்பொட்டில் கைகளை விரித்து மறைந்துகொண்டு அந்தத் தோணியையே பார்த்துக்கொண்டிருப்பேன். அந்தச் சமாதிநிலையில், என்னுள்ளே இன்பகரமான கனவுகளெல்லாம் எழும். இன்னும் சில நாட்களில் நான் பெரியவனாகிவிடுவேன். அப்போது அப்பாவிற்குப்போல எனக்கும் ஒரு தோணி சொந்தமாகக்கிடைத்துவிடும். அந்தத் தோணிக்கு வெள்ளைவெளேரென்று அப்பழுக்கில்லாத ஒரு பாயைப்போட்டுக்கொண்டு நான் கடலிற்குள் செல்வேன்; ஒரு தென்னைமர உயரத்திற்கு எழுந்து வரும் கடல் அலைகளில் என் தோணி தாவித்தாவி ஏறி இறங்கிக் கொண்டே செல்லும். எல்லாத் தோணிகளையும் விட வேகமாக ஓடுவதற்காக என் தோணியின் பாய் பெரிதாக இருக்கும். அந்தப்பாய்க்குள் சோழகக் காற்றுச் சீறியடித்துக்கொண்டிருக்கையில், என் தோணி கடற்பரப்பில் 'விர்'ரென்று பறந்துசெல்லும். நான் பின்னணியத்தில் தலைப் பாகைக்கட்டோடு தைரியமாக நின்று சுக்கானைப் பிடித்துக்கொள்வேன். செல்லன் முன்னணியத்தில் நின்று எனக்குத் திசைகாட்டுவான். எங்கள் தோணி முன்னே முன்னே ஏறிச் சென்று, கடைசியாய் கடல்வானத்தைத்தொடும் இடத்திற்குப் போய் விடும். அங்கே அம்மா இராத்திரிச் சொன்ன கதையில் வரும் ஏழு தலைநாகத்தை காண்பேன்...

தூரத்தே நான் குறிவைத்திருந்த தோணி சமீபித்து விட்டது. அதிலே என் தகப்பனார்தான் இருந்தார். தோணி கரையை அடைந்ததும் அவர் பாயைக் கழற்றிவைத்துத் தோணியை ஓடை வழியாக இழுத்துச்சென்றார். நானும் அவரோடு சேர்ந்துகொண்டேன். பிறகு நாங்கள் எங்கள் வீட்டின். முன்னால் தோணியைக் கரையில் கொற கொற என்று இழுத்துவந்தோம். அப்பா தூண்டிற் கயிறுகளை வளையமாக்கி சவளில் போட்டு என்னிடம் கொடுத்தார். தோணிக்குள் இருந்த பழஞ்சோற்றுப் பானையையும் மீன்கோவையையும், நங்கூரத்தையும் எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு அப்பா பின்னே வர நான் சவளைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு சப்த சமுத்திரங்களையும் கடந்து வந்த வீரனைப் போல முன்னே நடந்தேன்.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. பசித்தவன் விருந்துண்ணக் கனாக் காண்பது போல நானும் தோணியைப் பற்றியே கனாக்கண்டேன். எங்கள் வீட்டுக்கு முன்னாலுள்ள ஓடையில் ஐந்து புத்தம் புதிய தோணிகள் இருந்தன. நான், முன்னணியம் உயர்ந்து சவாரிக் குதிரைபோல இருந்த தோணியின் மேல் ஏறிக்கொண்டேன். வாடைக்காற்றான படியால் எல்லோருடைய தோணிகளும் முன்னேற முடியாமல் கரையை நோக்கியே வருகின்றன. என்னுடைய தோணி மட்டும் எரிந்துவிழும் நட்சத்திரம் போலக் கனவேகமாகக் காற்றை எதிர்த்துப் போகிறது. கலங்கரை விளக்கின் ஒளிகூடக் கண்ணுக்குப் படாத அத்தனை தூரத்திற்கு ஆழ்கடலின் நடு மையத்திற்கே என்தோணி போய்விடுகிறது.

நான் திடீரென்று விழித்துக் கொண்டேன். காலையில் எழுந்த போதுகூட எனக்குத் தோணியின் நினைவு மாறவில்லை. அன்று நான் ஓடைக்கரையில் பழுது பார்க்க இழுத்துவைக்கப்பட்டிருக்கும் தோணி ஒன்றைத் தள்ளிக்கொண்டு கடலிற்குப் போவது எனத் தீர்மானித்துக் கொண்டேன். செல்லனைக்கூட்டிப் போய் இருந்த தோணியை எங்கள் பலத்தையெல்லாங்கூட்டித் தள்ளிப் பார்த்தேன். தோணி அசையமாட்டேன் என்றது. அப்படியானால் நான் தோணி விடவே முடியாதா? சப்த சமுத்திரங்களையும் என்னால் தாண்ட முடியாதா?

நான் கவலைப்பட்டுக்கொண்டேயிருக்கையில் ஓடையில் முருக்க மரத்துண்டு ஒன்று மிதந்து வந்தது. அதைக் கண்டதும் எனக்கு ஒரே சந்தோசமாகப் போயிற்று. 'ஆம்; எனக்கென்று ஒரு தோணி கிடைத்துவிட்டது! அந்த முருக்கங்கட்டையை முன்னாலும் பின்னாலும் கொடுவாக் கத்தியினால் செதுக்கி உள்ளே குடைந்து தோணி ஒன்றைச் செய்தேன். பின்னர் அந்தத் தோணியில் செல்லனையும் ஏற்றிக்கொண்டு என் ஆசை தீருமட்டும் ஓடையில் தோணி விட்டு விளையாடினேன்.

மதியம் திரும்பிவிட்டது. என் தந்தை கடலிலிருந்து திரும்பிவந்து கொண்டிருந்தார். தோணி விளையாடிக்கொண்டிருந்த என்னைக் கண்டதும் "அடே பயலே! தோணி விடுறியா? அப்படியெண்டா நாளைக்கு என்னோட கடலுக்குவா'' என்றார்.

அதைக்கேட்டதும் எனக்குச் சந்தோசம் தாங்கமுடியாமற் போய் விட்டது. "சரியப்பா நாளைக்கு நானும் வருகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே சவளைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடந்தேன். பெரிய தோணியில் போகப்போகிற ஆனந்தத்தில் என் முருக்கந் தோணியை மறந்துவிட்டேன்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. தென்னோலைச் சரசரப்பும் சிள் வண்டுகளின் கீச்சுக் குரலும் எனக்குக் கேட்டுக்கொண்டேயிருந்தன. படுக்கையிற் புரண்டு கொண்டே ஆனந்தக் கனவுகள் கண்டுகொண்டிருந்தேன். கடைசியாய் எங்கோ ஒரு சேவல் கூவிற்று. அதைத் தொடர்ந்து எங்கள் கிராமத்துச் சேவல்கள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு கூவின. அம்மா எழுந்து கை விளக்கைக் கொளுத்திக்கொண்டு சமையல் செய்யத் தொடங்கினாள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த குடிசைகளிலிருந்து ஒருவர் மற்றவரைக் கூவியழைக்கும் சப்தம் கேட்டது. கடைசியாய் அப்பாவும் எழுந்து "தம்பிடேய்!" என்று எழுப்பினார். நான் சுட்ட பிணம்போல வளைந்து நெளிந்து உட்கார்ந்து கொண்டேன். இரா முழுவதும் தூக்கமில்லாததினால் கண்ணிமைகள் கல்லாய்க் கனத்து அழுத்தின. ஆனாலும் உற்சாகத்தோடு எழுந்திருந்தேன். அப்பா சோற்றுப்பானை நிறையத் தண்ணீரை ஊற்றி எடுத்துக்கொண்டு நங்கூரம், தூண்டில், கயிறு சகிதம் வெளிக்கிளம்பினார். நானும் சவளைத் தோளில் வைத்துக் கொண்டு புறப்பட்டேன்.

படலையைத் திறந்து வெளியே வந்ததும் முகத்தில் வாடைக் கடுவல் ஊசி குத்துவதைப் போலச் சுளீர் சுளீரென்று அடித்தது. எனக்கு உடம்பெல்லாம் நடுக்கமெடுத்தது. மேல் துண்டை முகத்தை வளைத்துக் கட்டிக்கொண்டு முன்னால் விறு விறுஎன்று நடந்தேன். தூரத்தே குடிசைக்குள் இருந்த அகல் விளக்குகள் இருளைக் குத்துகுத்தென்று குத்தின.

ஓடைக் கரையை அடைந்த போது ஆறு. பரமார்த்த குருவின் சீடர்கள் கண்ட ஆற்றைப் போலத் தூங்கிக்கொண்டிருந்தது. கண்டல் இலைகள் பொட்டுப் பொட்டென்று ஆற்றில் எங்கே போகிறோம் என்ற பிரக்ஞையே அற்றவண்ணம் போய்க் கொண்டிருந்தன. கோரைப் புற்களின் மேலே சிலந்திவலை போலப் பனிப்படலம் மொய்த்துக்கிடந்தது.

அப்பா கரையில் இருந்த தோணியை ஓடையிலே தள்ளினார். அதற்குள்ளே சோற்றுப்பானையையும், மற்றைய சாமான்களையும் வைத்தார். உடனே தோணியை ஆற்றிலே விட்டுவிட்டுக் கோரைப்புற்களினடியில் 'அத்தாங்கை'வீசி இறால் பிடிக்கத் தொடங்கினார். நான் வெடுவெடுக்கும் குளிரில் வள்ளத்தின் முன்னணியத்தில் ஒடுங்கிப்போய் குந்திக்கொண்டிருந்தேன். கிழக்கே கூரையில் தொங்கும் புலிமுகச் சிலந்தியைப்போல வானத்தில் விடிவெள்ளி நடுங்கிக்கொண்டிருந்தது இன்னமும் கீழே கிழக்கு வெளுக்கத்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



தொடங்கியது.

பறி நிறைய இறால் பிடித்ததும் அப்பா வள்ளத்தில் ஏறிக்கொண்டார். வள்ளமும் சமுத்திரத்தை நோக்கி ஓடத்தொடங்கிற்று. பலாரென்று விடிந்தபோது வள்ளம் நடுச்சமுத்திரத்தையே அடைந்துவிட்டது. அப்பா நங்கூரத்தை தண்ணீரில் எறிந்துவிட்டு தூண்டிலில் இறாலைக்குத்திக் கடலில் எறிந்தார். நானும் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தேன். சமுத்திரா தேவி நிர்க்கதியான தன் குழந்தைகளைத் தன் அலைக்கரங்களை எறிந்து எறிந்து தாலாட்டிக்கொண்டிருந்தாள்.

வெயில் ஏறிக்கொண்டே வந்தது. முதுகுத் தோலை உரித்துவிடுவதுபோலச் சுளீரென்று அடிக்கும் வெயிலுக்கு ஆற்றாமல் அப்பா தன் சட்டையில் கடல் தண்ணீரை அள்ளி அள்ளி ஒற்றிக்கொண்டேயிருந்தார்.

மதியத்தை அண்மியபோது நாங்கள் ஆளுக்கு ஐந்து 'கருங்கண்ணிப் பாரைகள்' பிடித்துவிட்டோம். என் உழைப்பைக்கண்டு எனக்கே திருப்தி ஏற்பட்டுவிட்டது. அந்தத் திருப்தியில் பழஞ் சோற்றைக் கரைத்துக் குடித்த தண்ணீ எனக்குத் தேவாமிர்தமாகத்தான் பட்டது. வயிறு நிறைந்ததும் நங்கூரத்தைத்தூக்கி வைத்துத் தோணியைத் திருப்பத் தொடங்கினோம். வள்ளம் ஓடிக்கொண்டிருக்கையில் என் உள்ளம் பகற்கனாக்காணத் தொடங்கியது. இந்தப் பத்துக் கருங்கண்ணிப் பாரைகளைக்கண்டதும் அம்மா சந்தோசப்படுவா. பக்கத்துப் பட்டினத்துச் சந்தைக்கு அதைக் கொண்டு போனால் பத்து ரூபாய்க்கு விற்கலாம். சந்தையிலே எதிரேவரும் பொங்கலுக்காகக் கமுகம் பூப்போன்ற பச்சையரிசியும், பாசிப்பயறும், சாக்கரையும் முட்டி நிறைய பாலும் வாங்கிக்கொள்ளலாம். எங்கள் வீட்டுத் தென்னைமரத்தின் கீழே புதுப்பானை 'களக்களக்' என்று பொங்கும்போது நான் புதுவேட்டியை உடுத்துக் கரும்பைக் கடித்துக்கொண்டு...

வள்ளம் கரையை அண்மித்துவிட்டது. கடற்கரையிலே புத்தம் புதிய பைசிக்கிளிற் சாய்ந்தவாறு ஒருவர் நின்றுகொண்டிருந்தார். சூரிய கிரணங்கள் பைசிக்கிள் தகடுகளின் மேல் பட்டு ஜொலித்தன. அப்பா ஏதோ மந்திர சக்தியால் கட்டுண்டவரைப்போலத் தோணியை அங்கே திருப்பினார்.

தோணி கரையை அடைந்ததும் மீன்களையெல்லாம் பைசிக்கிள் காரரிடம் போட்டுவிட்டுத் திரும்பவும் வட்டை நோக்கித் தோணியை விட்டார.

எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

தோணி வந்துகொண்டிருக்கையில் நான் கேட்டேன்; "ஏன் அப்பா மீன்களை எல்லாம் அங்கே போட்டுவிட்டு வருகிறீர்கள்?"

அப்பா சொன்னார்; "அவர்தான் நம் முதலாளி. இந்தத் தோணி-எல்லாம் அவருடையதுதான். நாம் மீனைப் பிடித்து அவருக்குத்தான் கொடுக்கவேண்டும்"

"நமக்குக் காசு தரமாட்டாரா?"

"நம் கடனிலே கழித்துக்கொள்வார் விலையை. நமக்குச் சாப்பாட்டிற்காக மேலும் கடன் தருவார்"

"அப்படியானால் நாம் ஒரே கடன்காரராகத்தானே இருக்க வேண்டும்?" என்னமோ அப்பா; நானும் தலை நரைக்கு மட்டும் உழைத்துவிட்டேன். கடனை இறுக்க முடியவில்லை. நமக்கென்று புதிதாக ஒரு தோணி வாங்கவும் முடியாது"

"எல்லாத் தோணிகளும் அந்த முதலாளியுடையதுதானா அப்பா?"

"ஆம் ஓடைக்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் எல்லாமே அவருடைய தோணிகள் தான்"

வெள்ளம் ஓடைக்கரையை அடைந்துவிட்டது. நாங்கள் தோணியைக் கரையில் இழுத்துவ்வைத்து விட்டு வீட்டை நோக்கி நடந்தோம். என்னுள்ளே ஒரு பயங்கரமான உண்மை புலனாகியது. இந்தத் தோணி எனக்குச் சொந்தமில்லை ஆம் தூண்டிற்காரனுக்குத் தோணி சொந்தமில்லை; அப்படியே உழுபவனுக்கு நிலம் சொந்தமில்லை. உலகில் உழைப்பவனுக்கு எதுவும் சொந்தமில்லை.

அன்றிலிருந்து தோணி எனக்குக் கனவுப்பொருள் ஆகிவிட்டது. எப்படியாவது கஷ்டப்பட்டு உழைத்து ஆகக் குறைந்தது ஒரு தோணியாவது சொந்தமாக வாங்கிக்கொள்ள வேண்டும். அதன்பின் மீன்பிடித்தால் சந்தையில் கொண்டுபோய் நம் இஷ்டத்துக்கு விற்கலாம். பொங்கலுக்குக் கரும்பும், பாலும், பச்சையரிசியும், சர்க்கரையும் வாங்கலாம்.... முதலாளிக்கு பிடித்த மீனையெல்லாம் கொடுத்துவிட்டு வெறுங்கையோடு திரும்பிவரத் தேவையில்லை.

நாட்கள் கடந்துவிட்டன. நான் பெரியவனாகிவிட்டேன். சொந்தத் தோணி இன்னமும் வெறுங்கனவாகவே இருந்துவந்தது. தகப்பனார் வாழ்ந்துவரும் அதே பாதையில்தான் என் வாழ்வும் போய்க்கொண்டிருந்தது. இந்த வாழ்வில் எனக்கு நேரகாலத்தில் கல்யாணம் முடித்து வைத்துவிட வேண்டும் என்பது அம்மாவின் ஆசை.

ஒரு நாட் சாயந்திரம் ஓடைக்கரையில் இராட்டினத்தில் நூல் முறுக்கிக் கொண்டிருந்தேன். மேலே நீல நிறமான ஆகாயம் ஓடையின் தெளிந்த தண்ணீரிலும் விழுந்து பிரதிபலித்துக் கொண்டிருந்தது.ஓடை முகத்துவாரத்தில் இருந்த மணல் தீவில் கடற்புட்கள் கூட்டங்கூட்டமாக வந்து விழுந்துகொண்டிருந்தன.

"தண்ணீர் எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று வீட்டுக்குப்போன ...வை இன்னமும் காணவில்லை. ...குத் தாகமாயிருந்தது. வீட்டுப் ...கம் திரும்பிப்பார்த்தேன் கனகம் ...ம்பிலே தண்ணீ எடுத்துக்கொண்டு வந்தாள்.

கனகம் எங்கள் கிராமத்துப் பெண்தான். நீரின் இடைமட்டத்தில் ஆடும் பாசிக்கொடியைப்போல எப்போதும் மென்மையாக ஆடிக்கொண்டு தான் அவள் நடப்பாள். கற்பாரில் நிற்கும் செம்மீனைப்போலச் செக்கச் செவேலென்று அழகாக இருப்பாள். வண்டலிலே மின்னும் கிளிஞ்சல் போல் இருக்கும் அவள் கண்களை இன்றைக்கு முழுவதுமே பார்த்துக் கொண்டிருக்கலாம்.

அவள் அருகால் வந்தபோது "கொஞ்சம் தண்ணீ தந்திட்டுப் போறியா?" என்று கேட்டேன் நான்.

கனகம் ஒன்றும் பேசாமல் என்னிடம் செம்பை நீட்டினாள்.

நான் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கும்போது அம்மாவும் தண்ணீ எடுத்துக்கொண்டு வந்துவிட்டாள். அம்மாவைக்கண்டதும் கனகம் ஏதோ செய்யத்தகாத காரியத்தைச் செய்தவள் போல வெட்கப்பட்டுக் கொண்டு போய்விட்டாள்.

அம்மா சொன்னாள் " என்ன வெட்கமாம் அவளுக்கு. நாளைக்கு அவளைத்தானே நீ கல்யாணம் முடிக்கப்போகிறாய்."

"போ அம்மா எனக்கென்று ஒரு தோணி இல்லாமல் எனக்குக் கல்யாணமே வேண்டாம்" என்றேன் நான்.

"ஏண்டா! அவள் அப்பாவிடம் ஒரு தோணி சொந்தமாக இருக்கிறது. அதைஉனக்கே கொடுத்துவிடுவார் அவர்" என்றாள் அம்மா.

நான் யோசித்தேன். எனக்கு கல்யாணத்திலோ கனகத்திடமோ அக்கறை இல்லாவிட்டாலும் தோணி கிடைக்கப்போகிறதே! தோணி மட்டும் கிடைத்துவிட்டால் என் உழைப்பின் பயனை நானே அனுபவிக்க முடியும். என் குடும்ப வாழ்வும் இன்பமாகவே இருக்கும்...

அதன் பிறகெல்லாம் நான் கனகத்துடன் தைரியமாக நெருங்கியே பழகினேன். மனோகரமான மாலை வேளைகளில் ஓடைக்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் தோணி மூலையில் குந்திக்கொண்டு நானும் கனகமும் எவ்வளவோ கதைத்திருக்கிறோம்! கனகம் எப்பொழுதுமே தன் தோணியைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்வாள். அந்தத் தோணி அவள் தகப்பனாரின் சொந்தமாக இருக்கிறபடியாற்றான் கனகம் நல்ல சேலை கட்டியிருக்கிறாளாம். கையில் தங்கக் காப்புப் போட்டிருக்கிறாளாம்! 'அவள் என்றைக்குமே அப்படி இருக்க வேண்டும்' என்று என்மனதுள் எண்ணிக்கொள்வேன்.

ஆனால் இரண்டு வாரத்துள் அந்தத் துக்ககரமான செய்தி கிடைத்தது. கிராமமே பரபரப்படைந்தது. கனகத்தின் தந்தை மீன் பிடிக்கப் போனவர் புயலில் அகப்பட்டு மாண்டு போனார். தோணியும் திரும்பிவரவில்லை...

என் இதயத்தில் சம்மட்டியடி விழுந்தது போன்றிருந்தது எனக்கு. பாவம்! எனக்குத்தான் சொந்தத் தோணிஇல்லையென்றாற் கனகத்திற்குக் கூடவா இல்லாமற்போக வேண்டும்?

இரண்டு மூன்று நாட்கள் கழித்துக் கனகம் கடற்கரைக்கு வந்தபோது அவளை நிமிர்ந்து பார்க்கவே என்னால் முடியவில்லை. அவள் கண்கள் கலங்கியிருந்தன. என்னைக் கண்டதும் அழுகை பொத்துக் கொண்டு வந்துவிட்டது அவளுக்கு. விம்மி விம்மி அழத் தொடங்கினாள். என் மடியிற் தலையைப் புதைத்துக் கொண்டு கனகம் என்னிடம் எதை எதிர்பார்த்தாள்?

கனகத்தை மடியில் வைத்துக் கொண்டே நான் எண்ணினேன். என்னிடமோ தோணி கிடையாது. இந்த நிலையில் அவளை நான் சுகமாக வாழ்விக்க முடியாது. என் தகப்பனாரைப் போல நானும் தலை நரைக்கும் வரை உழைத்து, உழைத்துச் சாகவேண்டியதுதான். என்னோடு சேர்ந்து கனகமும் ஏன் சாகவேண்டும்? பாவம் கனகம்...

எனவே கனகத்தை யாராவது சொந்தத் தோணியுள்ள ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டும். என் கண்முன்னால் அவள் அழகான சேலையும் தங்கக் காப்பும் அணிந்துகொண்டு என்றென்றைக்கும் ஆனந்தமாக வாழவேண்டும். அவள் வாழ்வுதான் எனக்கும் ஆனந்தம்..

நான் எண்ணியது சரியாகப் போய்விட்டது. அமாவாசையன்றிரவு, புங்கை மரத்தின்கீழே இருந்த வைரவர் கோவிலடியில் கனகத்துக்கும் செல்லனுக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணத்தன்று பேசிப் பார்க்கவே எனக்குக் கண்ணீ வந்துவிட்டது. என் கையில் இருந்த அரும் பொருள் இன்னொருவனுக்குப் போய் விட்டது... ஆனாலும் என் கண்முன்னால் அவள் ஆனந்தமாகவே வாழ்வாள். செல்லனிடம் ஒரு தோணி இருக்கிறது. அவன் என்னைப் போல கடன்காரனல்ல. செல்லனோடு ...கம் என்றென்றைக்கும் ஆனந்...க வாழட்டும். எனக்கென்று ... ணி ஒன்று கிடையாமல் நான் எந்து... ணின் வாழ்வையும் பாழாக்கப்... தில்லை...

ஆனால், இன்னமும் தோணி எனக்குக் கனவுப்பொருளாகத்தான் இருக்கின்றது. அதனாலென்ன? உயர்ந்த கனவு செயல்மிக்க நனவின் ஆரம்பந்தான். எப்போதாவது ஒரு நாளைக்குக் காலம் மாறத்தான் போகிறது. அன்றைக்கு எனக்கு மட்டுமல்ல, என் நண்பர்கள் எல்லோருக்குமே சொந்தத் தோணி இருக்கும். எங்கள் தோணிகள் சப்த சமுத்திரங்களிலும் சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்கும். அந்த மீன்களைச் சந்தையில் பகிரங்கமாக விற்போம். விற்ற பணத்திற்குச் சந்தையில் அரிசி வாங்குவோம். அரிசி வாங்கும் பணம் என்னைப்போன்ற உழைப்பாளியான ஒருவனுக்கு நேரடியாகக் கிடைக்கும்! அப்போது உழவனுக்கு நிலமும் சொந்தமாக இருக்கும் அல்லவா?

## காலம்

வேகத்தடை போடுவோம்
ஊர்திகளுக்கு மட்டுமல்ல
உருண்டோடிக் கொண்டிருக்கும்
காலத்துக்கும் சேர்த்து.

அதிவேகம் கொண்டு
நகர்கிறது காலம்
யாருக்காகவும் காத்திராமல்?
எல்லோரும் அண்ணாந்து பார்க்க
பறக்கிறது காலம்
ஒரு "கிபீர்" போல

கால ஓட்டத்துக்கு
ஓடக் கற்காவிடில்
காலம் எங்கே போய்விடும்
எம்மையும் விட்டு விட்டு.

காலம் எதற்காகவுமே
பின் வாங்கியதில்லை
காலத்தால் நாங்களே
பின் நிற்கின்றோம்
இன்றைய நிகழ்காலம் கூட
நாளை இறந்தகாலம் தான்
இன்று நிகழ்த்தப்படாதவை
நாளை காலமானவையே!
போனால் திரும்பாதது
காலமும் உயிர் போல
காலத்தை மதித்துப் போ
அன்றேல் மானிட
காலம் உன்னையும் ஏறி
மிதித்துப் போய்விடும்...
எட்டாத தொலைவிற்கு!

வேலணையூர் சுரேஷ்

## ஒரு விடியலுக்கான நேரம் நெருங்குகிறது

இருண்டு கிடந்த என் தேசத்தின்
நாடி நரம்புகளில்
புதிய இரத்தம் உடைப் பெடுக்கிறது
சுதந்திர தாகத்தில்
பழைய இரவுகளின்
கழிவுகள்
புலர்காலைப் பொழுதின்
முற்றத்தில்
ஏக்கப் பெருமூச்சின்
வெப்பக் கணைகள்
வீறு கொண்டெழுந்து
சாம்பல் மேடுகளாக
பகை முகாம்கள்
பஸ்பமாகின்ற
கோலத்துக்காய்
விரைகின்றன.

தோள்களைப் பலமாக்கி
வீரிந்த விழிகளில்
அனலேந்தி
சாவுக்குள் வாழ்வு தேடி
வீழ்தலும், எழுதலும்
விரைதலும், புரிதலும்
விடியலின் வரலாறு என
முன்னவர் சுவடுகளில்
தம்பாதங்களைப் பதித்து
வீச்சாகி,
புயலாகி
புதுப்புனலாய்
புதுப் பாய்ச்சல் ஒன்று
மையம் கொண்டுள்ளது.
நம்பிக்கை ஒளியின்
நாயகர்களின் நகர்வுகள்
நாற் திசைகளிலும்
நாதமாகின்ற நடப்பு
நாளும் மூர்க்கம் கொள்கிறது.
மக்கள் திரளில்
பகை முகாம்கள்
நசிக்கப்பட
ஒரு விடியலுக்கான
நேரம் நெருங்குவது
நிதர்சனமாகிறது.

முருக பாரிமகன்

## சொற்சிலம்பம் - 108

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | று | ம் | டு | னா | அ | ன் |
| மா | கு | லி | பா | ந் | மி | லா |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | டி |
| வெ | னா | ப | வி | ளை | கீ | இ |
| ன் | ட் | தா | ஷி | ர் | லி | து |
| சா | ர் | ய | க் | ஸ் | கி | வு |
| ப் | வா | கே | ன் | சி | த் | மோ |

### சொற்சிலம்பம் -106 இன் விடைகள்

01. அன்னாசி.

02. வெப்பமானி.

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

### சொற்சிலம்பம் - 106 இன் பரிசுக்குரியவர்

கி.மிதுர்ஷன், தரம் -1, பெரியகுளம் அ.த.க, பாடசாலை, கனகராயன்குளம்.

### சொற்சிலம்பம் - 106 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. க.கமலதாசன், தரம்6A, மு/கற்சிலைமடு அ.த.க.பா ஒட்டுசுட்டான்.
02. ப.நாகேஸ்வரி, கதிரிப்பாய், அச்சுவேலி.
03 ச.நிலானி, 811,சிவிக்சென்றர் வட்டக்கச்சி.
04. க.விமலதாசன்,தரம10, மு/அ.த.க.பா, ஒட்டுசுட்டான்.
05. க.தனுஜிகன், மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
06. பா.லினோசிகா, கற்சிலைமடு அ.த.க.பா, ஒட்டுசுட்டான்.
07. இ.புவிகரன், தரம6C மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
08. ஜெ.ஜசோதினி, தரம6A மு/உடையார்கட்டு ம.வி, உடையார்கட்டு.

01. அண்மையில் பூகம்பம் ஏற்பட்ட இடங்களில் ஒன்று?

01) ..............................

02. சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆலோசகரின் பெயர்?

01) ..............................

சொற்சிலம்பம்-108 ஈழநாதம், யாழ்சாலை, கிளிநொச்சி.

பெயர் :- ..............................

முகவரி :- ..............................

## விடுகதைகளும் விடைகளும்

01. எங்கள் வீட்டுப் பையனுக்கு சிவத்தத் தாடி அவன் யார்?

02. பகல் முழுவதும் உறங்குவான் இரவில் அலறுவான் அவன் யார்?

03. ஏறுவான் ஆனால் இறங்க மாட்டான் அவன் யார்?

04. தீக்குளித்தால் திடமாக இருப்பான் அவன் யார்?

விடைகள்: 1.சேவல் 2.ஆந்தை 3.வயது 4.செங்கல்

வி.சுஜிகரன், தரம்-5C புதுக்குடியிருப்பு.




## மரஅட்டை



மரஅட்டை ஒரு விந்தை உயிரினம் ஆர்த்ரோபோடா பகுப்பில் டிப்ளமோடா வகுப்பைச் சேர்ந்தது. அதாவது கணுக்காலிகள் பகுப்பில் இரட்டைக் காலிகள் வகுப்பைச் சேர்ந்தது. இதன் உடல் நீண்ட உருளை வடிவம் உடையது. தொட்டால் சுருண்டு கொள்ளும்.

இதன் உடலில் தலை, உடல் என்று இரு பகுதிகள் உள்ளன. தலைபகுதியில் ஒரு சோடி உணர் கொம்புகளும் ஒரு சோடி அரைத் தாடைகளும், ஒரு சோடி துருவு தாடைகளும் உள்ளன.

உடல் பல கண்டங்களால் ஆனது. தலையை அடுத்து வரும் மூன்று கண்டங்களிலும் ஒவ்வொரு கண்டத்திலும் ஒரு சோடி கால்கள் உள்ளன. மற்றக் கண்டங்களில் பக்கத்திற்கு ஒரு சோடி கால்கள் இருக்கும். உடலில் உள்ள கண்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இதன் கால்கள் எண்ணிக்கை அமையும். ஒவ்வொரு காலிலும் ஆறு கணுக்களும் நுனியில் கூர் நகமும் காணப்படும். பொதுவாக இவற்றிற்கு 100 கால்கள் இருக்கும்.

உடலின் முன் முனையில் வாயும் பின் நுனியில் மலப் புழையும் உள்ளது. உடலின் பக்கவாட்டில் ஒரு கண்டத்திற்கு ஒரு துர்நாற்றச் சுரப்பி புழை அமைந்துள்ளது. இச் சுரப்பிகள் சுரக்கும் நீரம் உடலை ஈரப் பசையுடன் வைத்துக் கொள்வதுடன் ஒரு வித துர்நாற்றத்தையும் அளிக்கிறது. உணவு மண்டலம், கழிவு மண்டலம், சுவாச மண்டலம், இரத்த மண்டலம், நரம்பு மண்டலம் ஆகியவை அமைப்பில் பூரானைப் போலவே இருக்கும்.

மரஅட்டைகள் முட்டையிடும் இனத்தைச் சேர்ந்தது. மக்கிக் கிடக்கும் மரம், மட்டை, இலை முதலியனவே இதன் உணவு. உலகெங்கும் ஈரப்பசை உள்ள இடங்களில் இவை காணப்படும்.

## கைவண்ணம்



கோ.கோபால ரஞ்சினி, தரம்-09, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

## நகைச்சுவை



"பிள்ளையாரப்பா, நான் பரீட்சையில் சித்தியடைந்தால் உனக்கு பால் தரேன்."

"பால் வேண்டாம் இந்த வெயிலுக்கு இதமா குளிர்பானம் வாங்கித் தா.

## பாம்பின் வேதனை





# திட்டமிடல் வேண்டும்

எம் வாழ்க்கைக்கு எல்லாமே தேவை என்ற நிலையில் தான் எம் மனம் நினைக்கிறது. எல்லாம் தேவையென்பது உண்மையாக இருந்தாலும் எம்மிடம் உள்ளவற்றை வைத்து எம் தேவைகளை ஓரள்வு பூர்த்திசெய்து வாழப்பழகலாம் அல்லவா!

**அடுத்தவரிடம் இருப்பவற்றைக் கொண்டு எம் வாழ்வை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். அவர்களிடம் இருப்பவை அவர்களின் தேவைக்கானதாக இருக்கும். எம்மிடம் உள்ளபடி எம் வாழ்வை மாற்றி அமைப்போம் வாழ்வில் வசந்தத்தை வரவழைப்போம்.**

ஒரு சிலர் எமக்கு எது தேவையானது எது தேவையற்றது என்று தெரியாமல் தம் வாழ்க்கையையே அலங்கோலப்படுத்திவிடுகின்றனர். நாம் இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் தான் எம் தேவைகள் அமைய வேண்டும்.

ஒரு குடும்பத்தில் கணவனின் வருமானம் நூறு ரூபாவாக இருந்தால் அங்குள்ள மனைவி அதற்கேற்ற வகையில்தான் தன் தேவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதைவிட்டு பக்கத்தில் உள்ள வசதியான ஒருவரின் மனைவி பத்தாயிரம் ரூபா சாறி வேண்டினார் நானும் அதுபோல் வேண்டியே ஆக வேண்டுமென்றால் இக்குடும்பத்தின் நிலை எங்கே போய் முடியும். எம்மிடம் எவ்வளவு தான் இருந்த போதும் வீணாகத் தேவையற்றவற்றை எம் மனம் நாடுவதை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஒரு குடும்பத்தை நல்ல வழியில் இட்டுச் செல்வது கணவன் மனைவி இருவரினதும் கடமை. ஏன் அடுத்தவரிடம் இருப்பவற்றைக் கொண்டு எம் வாழ்வை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவர்களிடம் இருப்பவை அவர்களின் தேவைக்கானதாக இருக்கும். எம்மிடம் உள்ளபடி எம் வாழ்வை மாற்றி அமைப்போம். வாழ்வில் வசந்தத்தை வரவழைப்போம்.

இன்று ஒவ்வொருவருடைய வாழ்விலும் நிறையத் தேவையற்ற விடயங்கள் கட்டாய தேவையாக்கப் பட்டுக் கிடக்கிறது. மிகவும் கவலை தரும் விடயமாக இருக்கிறது. இப்படியான தேவையில்லாத தேவைகளால் பல குடும்பங்கள் கடன் என்ற நிலைக்கு வந்து தத்தளிக்கின்றன. ஏன் இந்த நிலை வரவேண்டும். ஒரு குடும்பத்தை சீரான முறை யில் நிர்வாகம் செய்பவரின் ஒழுங்குபடுத்தல்கள் அமையுமானால் இப்படியான இக்கட்டுக்களைத் தவிர்க்கலாம். தலைமையே தலைகீழானால் அதற்குக் கீழ் உள்ளோர் எப்படி நிமிரமுடியும்.

இன்று எந்த வீட்டைப் பார்த்தாலும் பொருளாதாரப் பிரச்சினைகள் தான் விஸ்வரூபம் எடுத்துக் கிடக்கிறது. ஒருவரின் தேவைக்கு இரண்டு பேர் உழைக்க வேண்டும் போல் பொருட்களின் விலை வாசியும் உயர்ந்துள்ளது. அது மட்டுமா அன் றாடம் A9 பாதை திறப்பால் பிரயாணத்திற்கு முக்கால்வாசிப் பணம் விரயமாகிறது. இத்தனையும் குடும் பத்தில் சிக்கலாக இருக்கையில் ஆடம் பரம் வேறு அலங்கோலப்படுத்தி விட்டுள்ளது. இவற்றை யோசித்துப் பாருங்கள் தேவையில்லாதவற்றை ஓரளவு குறைக்க முயற்சியுங்கள்.

எங்கள் கையில் வருவாய் குறைவாக இருக்கையில் அதற்கு மிஞ்சிய ஆசையை நாம் வீணாக எம் மனங்களில் போட்டு அதற்கு கடன் பட்டு செயல் வடிவம் கொடுக்கின்றோம். இது சிலபேருக்குப் பிழையாகப்படலாம். கடன் இல்லாமல் யார் இருக்கிறார்கள் என்று கேட்கலாம். எம்மால் எப்படி குடுப்போம் என்ற நிலையில் எம்வாழ்வே வறுமைப் பட்டு திண்டாடுகையில் கடனை எப்படித் திருப்பிக் கொடுப்பது என்று தான் நாம் சிந்திக்கவேண்டும். அதைவிட்டு கடனைப்பட்டு வீண் வேலைகளைப் பார்த்துவிட்டு யாரிடமோ கையேந்தி பிச்சை கேட்கும் நிலையை நாமே வரவழைப்பது எமக்குத்தேவையான ஒன்றுதானா?

நாம் வாழும் வாழ்க்கையில் எமக்குத் தேவையானதைக் கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் சில சமயம் தவித்துக் கொண்டு இருக்கும் நிலை எமக்கு ஏற்படுகின்றது. இந்நிலையில் தேவையற்ற ஒன்றை எமக்கு தேவையாக்க விரும்பினால் வாழ்வு எப்படிப் போகும் எல்லாமே இழந்து வாழ்வே சூனியமாவது தான் நடக்கும்.

தமிழினி






# எதிர்காலம் எமது சந்ததிகளுக்காகட்டும்

எங்களினுடைய எதிர்கால உலகம் அறிவியல் ரீதியாகவும் ஆக்க பூர்வமானதுமான உலகமாக மாறப்போகின்றது என்பதே உண்மை. அதற்கேற்றவகையில் எங்களினுடைய எதிர்காலச் சந்ததிகளை வளர்த்தெடுப்பதையே ஒரே நோக்கமாகக் கொள்ளல்வேண்டும். எம்முடைய பிள்ளைகளை அறிவியல் உள்ளவர்களாக ஆற்றல் மிக்கவர்களாக மாற்ற வேண்டும். அவ்வாறு வளர்பவர்களே எதிர்காலத்தை தமதாக்குவார்கள். எதிர்காலத்தை இனிமையாகக் கழிப்பார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகளை வைத்திருப்பவர்களல்லாமல் அவர்களுக்கான எதிர்காலத்தை புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் அவர்களை வழிநடாத்துதல் வேண்டும். இந்திய சனாதிபதி அப்துல்கலாம் அவர் தன்னுடைய நாட்டில் இளைய சமுதாயத்தை வளர்த்தெடுப்பதில் முழு மூச்சாக ஈடுபடுகின்றார். அதற்கேற்றவகையில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றார். அதற்கேற்ற வகையில் உங்களினுடைய பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வளர்க்கப் பழுங்கள்.

**நற் சிந்தனையுடையவனே சமுதாயத்தில் நல்ல மனிதனாகக் கருதப்படுவான்**

தற்பொழுது சினிமாத்துறையானது மிகமோசமானதாக மாறி வருகின்றது. அறிவியல் படங்கள் அல்லது சமுதாயத்தை சீர்ப்படுத்தும் படங்கள் என்றாலே அரிதிலும் அரிது. இப்படியிருக்கும் பொழுது உங்களினுடைய பிள்ளைகளை அதிலே மூழ்கியிருக்கவிட்டால் என்னவாகும். உங்களினுடைய பிள்ளைகளை நற்சிந்தனையுடையவர்களாக கல்வித்துறையில் மேம்பட உருவாக்குவதே உங்களின் ஒரே நோக்கமாக அமையவேண்டும். நற் சிந்தனையுடையவனே சமுதாயத்தில் நல்ல மனிதனாகக் கருதப்படுவான். சிறு வயதில் அவர்களுக்கு கல்வியின் அறிவு கல்வியின் பெருமை பற்றி விளங்காமல் இருக்கும். விளையாட்டுத்தனமாக இருந்துவிடுவார்கள் ஆனால் வளர்ந்த எங்களுக்கு அல்லது கல்வியை இழந்த இன்னுமொருவருக்கும் தான் விளங்கும் அதனுடைய சாதக பாதகம். சென்ற பேருந்துக்கு கை காட்டிப் பயன் ஏதுமில்லைத்தானே. கல்வியை இழந்த பெரியவர்கள் இளம் சந்ததியினரை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். முயற்சிக்கவேண்டும்.

இப்படியிருக்கும்பொழுது சில பிள்ளைகள் கல்வியில் குன்றியிருக்கும்போது பெற்றோருக்கு மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புண்டு. அவர்களை எவ்வாறு வளர்ப்பது என்று ஒரு கேள்வி மனதில் தோன்ற வேண்டும். அதற்கு அவர்களை ஆக்கபூர்வ வேலைகளில் ஈடுபடுத்தலின் மூலமாக அறிவியல் ரீதியான சிந்தனையை அவர்கள் மனதில் தோற்றுவித்தல் ஏதோ ஒருவகையில் அவர்களை நல்ல சிந்தனை செய்பவர்களாக முன்னெடுத்துச் செல்வதன் மூலம் கல்வித்துறையில் மேலோங்கி வளர்த்தெடுக்க முடியும்.

எனவே கல்வித்துறையில் மேம்பட்டவர்களாகவும் கலாசாரத்தை நன்கு வழி நடாத்துபவனாகவும் இளைய் சந்ததியினரை வளர்த்தெடுக்கவேண்டும். இதற்கு ஆசிரியரினுடைய பங்கை விட கூடுதலாக பெற்றோரினுடைய பங்கே மேலோங்கி நிற்கின்றது. எதிர்கால சந்ததியினரை கல்வித்துறையில் வளர்த்தெடுப்போம் வலிமை சேர்ப்போம். எதிர்காலம் எதிர்கால சந்ததிகளுக்காகட்டும்.

மு.அருளரசன்

**உண்மையான தோழமையை பெற்ற ஒருவன் எவ்வித தயக்கமும் கொள்ள வேண்டியதில்லை. மாறாக தோழமை போன்று நடித்து பழிவாங்க நினைப் பவர்கள் தோழன் அல்ல. அவன் துரோகியாவான்.**



# தோழமை

தோழமை என்பது பல்வேறு வடிவங்களில் பல்வேறு இடங்களில் ஏற்படுகின்றது. வேலைபுரியும் இடத்தில் தோழமை, வகுப்பறையில் தோழமை, விளையாட்டு மைதானத்தில் தோழமை, என்றெல்லாம் ஏற்படுகின்றது. இவற்றுள் என்றுமே எப்போதுமே கிடைக்காத தோழமை கல்வி கற்கும் போது வகுப்பறையில் கிடைக்கும் தோழமை ஆகும்.

கல்வித் தோழன், அதாவது மாணவத் தோழன் பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், ஏனைய உயர் கல்வி கற்கும் கல்லூரிகளில் ஏற்படுகின்றது. இவ்வாறான கல்வித் தோழமையுடன் இணைந்திருக்கும் போது அருமை தெரிவதில்லை. மாறாக பிரிந்து செல்லும் போதுதான் புரியும் தோழமையின் அருமை. உண்மையான தோழமையை பெற்ற ஒருவன் எவ்வித தயக்கமும் கொள்ள வேண்டியதில்லை. மாறாக தோழமை போன்று நடித்து பழிவாங்க நினைப்பவர்கள் தோழன் அல்ல. அவன் துரோகியாவான்.

இவற்றை விட பணியாற்றும் இடங்களில் ஏற்படும் தோழமையும் சிறந்ததே. எனினும் தோழமைக்கு அடிபணிவதால் கடமையில் சில தவறுகள் ஏற்படும். எனவே தோழமையினையும் இழக்கக்கூடாது, கடமையிலிருந்து தவறக் கூடாது. ஆகவே கடமை நேரததில் நிதானமான முறையில் சிந்தித்துச் செயலாற்றுதல் வேண்டும். சிறந்த தோழமையை பெறுவது கடினமானதாகும். அவ்வாறு மிகவும் கடினப்பட்டு தேடிப்பெறும் தோழமையைக் கொண்டு வாழ்க்கையில் பல சாதனைகளை நிலைநாட்டிக்கொள்ளமுடியும் இதுவே நாட்டின் மொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

ப.கஜேந்திரன்

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




**குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்**

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்— 69**

பெயர்:..................................................

முகவரி:..................................................

..................................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.


## பேரீச்சம்பழக் கேக்




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| பட்டர் | - 500 கிராம் |
| சீனி | - 500 கிராம் |
| றவை | - 500 கிராம் |
| முட்டை | - 8 |
| பேரீச்சம்பழம் | - 1 கிலோ |
| பேக்கிங் பவுடர் | - 4 தே.க |
| வனிலா | - 2 தே.க |
| முந்திரி வற்றல் | - 100 கிராம் |
| தேயிலைச்சாயம் (துடிப்பானது) | - 2 கப் |

செய்முறை:-

★பேரீச்சம்பழத்தைக் கழுவி விதை நீக்கி மிகச்சிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தில் இட்டு தேயிலைச்சாயத்தைவிட்டு 7-8 மணிநேரம் ஊறவைக்கவும்.

★பட்டரையும், சீனியையும் சேர்த்து நன்கு அடிக்கவும்.

★முட்டையையும் இடையே ஒவ்வொன்றாகச் சேர்த்து அடிக்கவும்.

★றவையுடன் பேக்கிங் பவுடரைச் சேர்த்துக் கலவைக்குள் சேர்க்கவும்.

★பின் ஊறவைத்த பேரீச்சம்பழம், முந்திரிவற்றல், வனிலா இவற்றைச் சேர்த்து நன்கு கலக்கிப்பின் பேக் பண்ணவும்.

பயிர்கள் தமக்குத் தேவையான பதின்மூன்று வகையான போசனைப் பொருட்களை மண்ணுக்கு விவசாயிகளிடம் உரப் பசளைகள் மூலம் பெற்றுக் கொள்கின்றன. அதற்காக விவசாயிகள் பதின் மூன்று போசனைப் பொருட்களையும் மண்ணுக்கு இடவேண்டும் என்ப தல்ல.

அதாவது இப் போசனைப் பொருட்கள் ஏதாவது பயிர் செய்யப்படும் மண்ணில்




## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

இருக்கின்றதா இல்லையா என்பதை விவசாயிகள் மண் பரிசோதனை மூலம் கண்டு அறிந்து அதன் பின்னரே வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்வது பொருத்தமாக அமையும்.

ஒரு சிறப்பான விவசாயியின் கெட்டித்தனமே தேவையான அளவு உரத்தை கணிப்பீடு செய்து தனது செலவுகளை கருத்தில் கொள்வதாகும்.

விவசாயி தான் செய்கை பண்ணும் விவசாய நிலத்தின் பரப்பெல்லையை அடிப்படையாகக் கொண்டு அந்த நிலப்பரப்பிற்குத் தேவையான போசனைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு உரங்களின் அளவுகள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

மண்ணை பரிசோதித்து உரங்களை இடுவதன் மூலம் பற்றாக்குறையாக உள்ள பயிர்போசனைகளை தேவையான அளவுக்கு இடமுடியும்.

இதைவிடுத்து எல்லாப் பிரதேசங்களுக்கும் பொதுவாக அறிவுறுத்தப்படும் உரப்பாவனையை விவசாயிகள் மேற்கொள்வது ஒரு பொருத்தமான நடவடிக்கையாக அமைய மாட்டாது என்பதை விவசாயி கள் கவனிக்கவேண்டும்.

எனினும் விவசாயிகள் மேற்கொள்ளும் மாற்றுப் பயிர்ச் செய்கைகள் காரணமாகவும் ஏனைய புறக் காரணிகளின் செயற்பாட்டாலும் எல்லா நிலங்களுக்கும் ஒரே வகையான தேவை அல்லது ஒரே அளவான தேவை இருப்பதில்லை.

எனவே விவசாயிகள் மண்ணைப் பரிசோதனை செய்வதன் ஊடாக விவசாய நிலங்களுக்கு உரங்களை இடுவதற்கு முயல வேண்டும்.

இதற்கு இத்துறை சார்ந்த நிபுண்ர்களும் உதவ முன்வருதல் அவசியமாகும்.

## காராளி செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையம்

மனித இனத்தின் தேவைகளுக்கும் தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் கால்நடைச் செல்வம் மிக இன்றிய மையாதது.

கால் நடைகளில் ஆடு, மாடுகள் முதன்மை வகிக்கின் றன. பொதுவாக ஆடு, மாடுகள் என்று வழங்கப்பட்ட போதும் அவற்றின் இனங்களிற்கு ஏற்ப உற்பத்தியும் குணாதிசயங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இதனால் மனிதன் இந்த விலங்குகளில் இருந்து அதி கூடிய பயனைப் பெறுவதற்காக சிறந்த இனங்களைத் தேடி வளர்ப்பதோடு விஞ்ஞான ரீதியான பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இந்த விலங்குகளில் இருந்து மேலும் மேலும் அதிகூடிய பயனைப் பெற்றுக்கொள்வதற்காக முயன்று வருகின் றான். ஆராய்ச்சிகளும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தி ஒரு தேசத்தின் பொருளாதார விருத்திக்கும் அந்தத் தேச மக்களின் போசாக்கு நிறைந்த பால், இறைச்சி என்பவற்றில் தன்னிறைவு காண்பதற்கும் அயராது உழைக்கின்றான.

மேலைத் தேசங்களை எடுத்துக்கொண்டால் அங்குள்ள நவீன தொழில்நுட்ப முயற்சிகளின் ஊடாக ஒரு பசுவில் இருந்து பால்மா பைக்கற் வெளியேறும் வரைக்குமான இயந்திர வியல் தொழில் நுட்ப வளர்ச்சியை காணக் கூடியதாக இருப்பதோடு இந்தப் பால் மா மற்றும் பதனிட்ட இறைச்சி என்பவற்றை ஏனைய நாடுகளிற்கு ஏற்றுமதி செய்து தங்கள் நாடுகளை செல்வம் கொழிக்க வைக்கிறார்கள். ஆனால் சிறிலங்காவைப் பொறுத்தவரை இந்த நிலைமையில் மிகவும் பின் தங்கியிருப்பதோடு வட கிழக்குப் பிரதேசங்கள் வேறு படுத்தப்பட்டு இத்தகைய முயற்சிகள் மிகவும் மந்தமாகவுள்ளன.

வடபகுதியில் குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் இந்த விலங்கு வளர்ப்பிற்குரிய மூலவளங்களும் ஆர்வமுள்ள மனித வளமும் இருந்தபோதும் இப் பிரதேசங்களில் உள்ள கால் நடைகள் உற்பத்தித் திறன் குறைந்த உள்ளூர் இனங்களாக காணப்படுகின்றன.

இவை இப் பிரதேச மக்களின் விவசாயத் தேவை களை பூர்த்தி செய்வதற்குரிய உள்ளூர் இந்திய இனங்களாக பல காலமாக இருந்து வந்தமையால் இந்த இனங்களில் இருந்து அதிக பாலைப் பெற முடியாத நிலையும் இறைச்சிக் காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆடுகள் மற்றும் மாடுகளின் தோற்றம் (நிறை) மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க கடந்த தசாப்தங்களாக போர்த் தாக்கங்களினால் கால் நடை அபிவிருத்தி மிகவும் பாதிக்கப்பட்டு இவற்றை நம்பி வாழ்ந்தவர்கள் தங்கள் உடமைகளை இழந்து மிகவும் பரிதாபகர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

மீண்டும் இந்த விலங்கு வேளாண்மையை ஒரு சிறந்த நாட்டிற்கு பயன்தரக்கூடிய நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளில் நல்லின விருத்திக்கு மிக அத்தியாவசியமானதாக இனங்காணப்பட் டுள்ளது. இந்த வகையில் மேற்படி தேவையை நிறைவு செய்வதற்காக கால நடைகள் செயற்கை முறைச் சினைப்படுத் தல் நிலையம் வன்னிப் பெருநிலப் பரப்பில் 2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் திகதி கிளிநொச்சி த.பொ.மே நிறுவனத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கு காராளி கால் நடைகள் செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தினால் விடுவிக்கப்படாத பிரதேசமென மதிப்பிடப்பட்டு அரச உதவிகள் குறிப்பாக விலங்கு வேளாண்மை அபிவிருத்திக்கு பாரபட்சம் காட்டப்பட்ட நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் (பகுதி), வவுனியா(பகுதி) ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரத்தின் அடிப்படையில் 96030 மாடுகளுக்கும் 36000 ஆடுகளுக்கும் உள்ளூர் இனங்களும் உள்ளவையென தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

இதனால் இந்த நான்கு மாவட்டங்களிலும் உள்ள ஆடு, மாடுகளை தரமுயர்த்தி இங்கு வாழ்கின்ற கால் நடை வளர்ப்போரின் வாழ்க்கைத் தரத்தையும், போசாக்கில் மேன்மை யடையச் செய்யவும் இந்நிலையம் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு யாழ்சாலை155 ஆம் கட்டையில் இயங்கிவருகிறது.

இந் நிலையத்தில் ஜேர்சி சசிவால் இனக்காளைகளும் ஜமுனாபாரி,சாணான் ஆட்டுக் கடாக்களும் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவற்றில் இருந்து செயற்கை முறை சினைப்படுத் தலுக்கு வந்து சேகரிக்கப்பட்டு நான்கு மாவட்டங்களிலும் உள்ள அரச கால் நடை வைத்திய நிலையங்கள் மற்றும் தனியார் உப நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சேவைக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் பொருண்மிய மதியுரையகம் என்பன நிதி உதவிகளை மேற்கொண்டு வருகின்றன. இந் நிலையத்தில் வாரத்தில் மூன்று நாட்கள் மேற்குறிப்பிட்ட கால் நடைகளில் இருந்து சுக்கிலம் சேகரிக்கப்பட்டு முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், கனகராயன் குளம், துணுக்காய், பூநகரி, கிளிநொச்சி ஆகிய கால் நடை வைத்திய நிலையங்களுக்கும் விசுவமடு, வட்டக் கச்சி, புதுக்குடியிருப்பு, மல்லாவி, முழங்காவில், ஸ்கந்தபுரம் ஆகிய பிரத்தியேக உப நிலையங்களுக்கும் சுக்கிலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையத்திலுள்ள காளை கடாக்களுக்கு போசாக்கு நிறைந்த உணவாக வழங்கப்படுவதற்கென CO-3 என்ற நல்லின புல் 2 ஏக்கர் நிலத்தில் வளர்க்கப்பட்டு வெட்டுப்புல்லாக மாடுகளுக்கு தீவனம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.


6 ஆம் ஆண்டு நினைவலைகள்...

அன்னை மடியில் முத்தாக
04 - 10 - 1975



மண்ணின் அடியில் வித்தாக
14 - 10 - 1999

லெப்.குட்டிமணி
(சண்முகராஜா அருமருந்தன்)

கண்ணே அருமருந்தா உன் வீர காவியத்தில்
உறைந்து போனோம்
உன் கவரும் புன்சிரிப்புக்களை
எங்கே காண்போம்
மறுபிறவி என்றொன்று
இருக்குமென்றால்
கண்ணே நீ பிறப்பெடுப்பாய்
எங்கள் வீட்டில் ...

சிவநகர், உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

(6845)



ADVANCED FIELD OFFICER
for FOOD SECURITY DEVELOPMENT PROGRAMS
(JAFFNA)

Action contre la faim is an international NGO involved in humanitarian activities in Srilanka since 1997 Current activities are based in Ampara, Batticaloa, jaffna and Trincomalee districts. For a coming development programme of 2 years we require in jaffna services of a woman as advanced field officer (AFO)

This position is suitable for an economist or an agriculturalist who has strong experience of minimum 2 years in running livelihood programs and who is more than 27 years old.

The woman will be in charge of development programmes mainly in the islands with a targeted gender approach (intiatives with women s group widows) She will manage the collection and analysis of livelihood data the reporting and occasionally the representation at technical meetings in Jaffna She will join a team of 2 AFO s(junior and senior) and will work under the responsibility of the Food Security program Manager in Jaffna

Applicants must be charismattic good in team management fluent in English and able to do conversation in Tamil. Computer literacy especeiall7y MS Word and Excel is required.

Category: Senior position
Duratiopn: Iyear with insurance coverage
Apply within as soon as possible
ACF Food Security jop Vacancy
NO 40 Racca Lane
Chundilkuli
Jaffna
T.P 0212222465/0212222465

(சி-13024)

# நிமிர்ந்து நிற்கும் மூன்றாமுலக நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் பிடிக்காது..!




உலா 55

## ஏ9-ஏரம்பு

வணக்கம் பிள்ளையள்! தயவு செய்து மற்றம்படியை விட இண்டைக்குச் சொல்லிறதை கொஞ்சம் கூடுதல் ஞாபகசக்தியோட உள்வாங்கிக் கொள்ளுங்கோ! ஏனெண்டால் நான் கிழவன், நாளைக்கே செத்துப்போனாலும் எங்கட இனம் பட்ட வேதனை சந்ததி சந்ததியாய் மறக்கப்படாமல் வைச்சிருக்கப்படோணும்.

கொஞ்ச நாளைக்கு முன்னால விடுவிக்கப்பட்ட எங்கட பிரதேசத்துக்குள்ளை 3 சிறிலங்காப் பொலிஸ்காரர் அனுமதியில்லாமல் உள்நுழைஞ்ச நேரம் பிடிபட்டிருக்கினம். முன்னுக்குப்பின் முரணாய் அவையள் சொல்லிற எல்லாக் காரணமும் ஒப்பந்தத்துக்கு முரணானவையாகவே இருக்கிது.

தங்கட கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளை புலியள் அனுமதி எடுக்கோணும் எண்டு அவையள் கதைக்கிற அதே சட்டத்தைத் தான் எங்கட காவல்துறையும் கதைக்கிது. ஆனாலும், கண்காணிப்புக்குழுவில இருக்கிற ஒரு அம்மணி இது யுத்தநிறுத்த மோதல் எண்டு குதிக்கிறா. அதேன் பாருங்கோ, சிங்களவர் தான் மனுசர், நாங்களெல்லாரும் வேறஏதோ ஜந்துகளே?

பிந்துனுவெவ குற்றவாளியளை சாட்சியில்லை எண்டு விடுவிக்கிறது, சுனாமியால உறவுகளை இழந்து பாதிக்கப்பட்டு கூடாரங்களில வேதனை வாழ்க்கை வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட சனத்துக்கு உதவியள் கிடைக்கிறதை முடக்கிறது, அதே நேரம் 80 மில்லியன் நிவாரண நிதியைச் சுருட்டின மகிந்த ராஜபக்ச மீதான விசாரணை தொடர்ந்து நடக்கவிடாமல் குற்றவாளிக்குப் பகிரங்கப்பாதுகாப்பு வழங்கிறது எண்டு எதுக்கும் கூசாத உச்ச (அ)நீதி மன்றம் இயங்கிற சிறிலங்கா மாதிரியில்லை எங்கட தமிழீழம்.

அவையள் சொல்லிற மாதிரி குழந்தையளோட முறைகேடான நடத்தையில ஈடுபட்ட ஒருத்தரைத் தேடித்தான் வந்தவையெண்டால், எங்கட காவல்துறைக்கு அறிவிச்சுப் போட்டு புளியங்குளத்திலோ, உயிலங்குளத்திலோ ராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்தில இவையள் காத்திருந்தால் எங்கட காவல்துறை அந்த ஸ்மித்தை பிடிச்சுக்கொண்டு போய்க்குடுத்திருக்கும். சிவில்சார் சட்டமீறல்கள், அதிலையும் குழந்தைப்பிள்ளையள் விசயத்தில பாதிக்கப்படிறது எந்த இனமெண்டாலும், பேதமுமில்லாமல் செயற்படிற கட்டமைப்பைத்தான் தலைவர் இஞ்சை உருவாக்கி வைச்சிருக்கிறார்.

அப்பிடி இருக்க ஸ்மித் கொழும்பில சரணடைஞ்சு, 2-3 நாளிலையே சட்டபூர்வமான பாலியலுக்கான வயசை 13ஆக மாற்றியிருக்கினம். நான் 14 வயசில கூட புத்தகத்துக்குள்ளை மயிலிறகு வைச்சுப்போட்டு, குட்டி போடுமெண்டு பார்த்துக் கொண்டிருந்த வெங்காயமாய்த்தான் இருந்தனான். 1995இல சந்திரிகா ஆட்சிக்கு வந்ததில இருந்து இதுநாள் வரைக்கும் செய்த ஒரேயொரு நல்ல காரியம் உந்த வயசெல்லையை 16 ஆக உயர்த்தினதுதான்.

இப்ப போறநேரம் அந்த ஒரேயொரு நல்ல பெயரையும் வாபஸ் பெறுகிற மாதிரி 13 ஆகக் குறைச்சாச்சிது. இப்பிடியொரு சட்டமாற்றம் வரப்போறதை அறிஞ்சுதான் ஓடியொளிச்ச பிரிட்டிஷ் ஸ்மித் சரணடைஞ்சிருக்கிறான் போல!

ஏனெண்டால் இனிமேல் வழக்கெல்லாம் குழந்தைகள்-துஸ்பிரயோகம் எண்டிராமல் 'வன்புணர்ச்சி' எண்டளவில தான் பார்க்கப்படும். ஒரு 10 வருசத்துக்கு முன்னால சுவிடன் தலைநகரம் ஸ்ரொக்ஹொல்ம் இல நடந்த சர்வதேச மாநாடு ஒண்டில சின்னனுகளில வக்கிரம் கொள்ளிறதுகளுக்கு எதிராக ஏக மனதாய் கன தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அதுக்குக் கொஞ்சக் காலம் பிறகு தெற்குக்கடற்கரையில வெள்ளைக் கிழடு ஒண்டு துர்நடத்தையில அகப்பட்டு 20 வருச சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

ஆனாலும், மேலைத்தேய அழுத்தங்களால 2வருசத்தில ஆள் விடுதலை செய்யப்பட்டது. உங்களுக்குத் தெரியும்தானே, தாய்லாந்துக்கு அடுத்த இடத்தில சிறிலங்கா சிறுவர் விபச்சாரத்தில சர்வதேச புகழ் எண்டு. பற்றாக்குறைக்கு பாவங்கள் 6 லட்சம் சிங்களக்குடும்பப்பெண்கள் மத்திய கிழக்கில பணிப்பெண் வேலையளுக்கெண்டு போய்நிக்கிறதால அதுகளின்ரை சின்னப்பிள்ளையளும் மோசமான பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு முகங்குடுக்க வேண்டியிருக்கிதாம்.

உந்த வெளிநாடான வெளிநாடுகளிலையே 16 ஆக இருக்கிற வயசெல்லையை 13 ஆகக்குறைக்கிறது தங்கட வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளிறதுக்காக சிறிலங்காவுக்கு வாற வெளிநாட்டு உல்லாசியளுக்கு வழங்கப்படிற சட்டரீதியான பாதுகாப்பாகத்தான் இருக்கப்போகுது.

எங்கட விடுதலைப்போராட்டத்தை நசுக்கப்பார்க்கிற பேரினவாதம் யுத்தத்துக்கு செலவளிக்கிறதுக்காக எப்பிடியெல்லாம் கேவலங்கெட்ட வழியில பணம் சம்பாதிக்க விழையிதெண்டு பார்த்தனீங்களே! உதுகளை கொஞ்சம் யுனிசெப் காரர் கவனிச்சால் என்னவாம்! ஆனால், எங்களுக்கெண்டு நீதியான தமிழீழச் சட்டம் இருக்கிது.

மற்றது ஐரோப்பியக்கூட்டமைப்புக்கு புதுசாய் தலைமை தாங்கிற பிரித்தானியா புலியளின்ரை வன்முறையளைத் தொடர்ந்தும் அனுமதிக்கேலாது எண்டு அறிக்கை விட்டிருக்கிதாம். இல்லை நான் கொஞ்சம் விளக்கம் குறைஞ்சனான், சில விசயங்கள் எனக்கு விளங்கேல்லை: எங்கட இனம் சுனாமியில 26 000 சொந்தங்களைப் பலிகொடுத்திட்டு வீடுவாசலுகளை இழந்து 10 மாதமாக அநாதரவாய் இருக்கிற நிலையில, அவையளுக்குக் கிடைக்க இருந்த உதவியளை கதிர்காமரும், உச்ச (அ)நீதிமன்றமும் சேர்ந்து முடக்கினதுக்கு ஒண்டுமே சொல்லாமல் இருந்தவை, இருந்தாப்போல இப்ப ஏனாம் துள்ளியடிக்கினம். "உச்சநீதி மன்றம் பொதுக்கட்டமைப்புக்கு விதிச்ச தடை வருத்தம் தருவதாகும்", எண்டு கிளின்ரன் சொல்லியிருக்கிறார். சுனாமி, கட்ரீனா, றீற்றா போன்ற இயற்கை அனர்த்தங்கள் வருத்தம் தரலாம். ஆனால், ஊழல் விசாரணையளில இருந்து மகிந்தவுக்கு விடுதலை அளிச்ச உச்ச (அ)நீதிமன்றம் நிவாரணங்களை முடக்கினது திட்டமிட்ட நயவஞ்சகம் பாருங்கோ!

போயும் போயும் நேற்று வைச்ச புத்தர்சிலையை எடுக்காமல் ஏமாத்திற சிங்களப்பேரினவாதத்தின்ரை போக்குகளை விமர்சிக்க முன்வராத தரப்புகளுக்கு, அறிக்கை விடுகிற தகுதி ஏதாவது இருக்கோவெண்டு கேட்கிறன். நாகர் கோவிலில எங்கட சின்னனுகளை சிங்களவன் கொல்லிறதை கண்டும்காணாமல் விட்ட சர்வதேசங்களுக்கு இண்டைக்கு மட்டும் எங்கையிருந்து உந்த அக்கறை வந்தது ? இடப்பெயர்வுக்கிள்ளை எங்கட இனம் பட்ட இன்னல்களுக்கு ஒரு ஆறுதல் வார்த்தையாவது தராத ஐ.நா உட்பட உந்த நாடுகளெல்லாம் நீதி, நியாயம் பற்றிக் கதைக்கிற உரிமை உள்ளவையோ?

அவர் ரணில் வேற ஜேவிபியையும் பேச்சுவார்த்தையில கலந்து கொள்ளச் செய்வாராம். தான் நல்ல பிள்ளை பத்திக்கொண்டு ஜேவிபியைச் சாட்டி இழுத்தடிக்கிறதுக்காக! சீனாவில 4 பேர் கூடிநிண்டு கதைச்சாலேயே ஜனநாயகத்துக்கான போராட்டம் எண்டு தங்கட செய்தியில போட்டு, அங்கை அரசியல் மாற்றம் வேணுமெண்டு கூச்சல் போடிற உவையளுக்கு எங்கட மக்கள் எழுச்சிகள் கண்ணுக்குள்ளை குத்தேலையோ!

ஈராக்கில எந்த அதிகாரப்பங்கீடு அவசியம் எண்டு உவையள் வலியுறுத்தினமோ அதே அதிகாரப் பங்கீட்டுக்கு முற்றிலும் எதிரான நிலைப்பாட்டை எங்கட விசயத்தில எடுக்கப்பார்க்கினம்.

பட்டப்பகலில பிந்துனுவெவவில 12 வயசுப்பொடியன் தலை நசிச்சுக் கொல்லப்பட்டதுக்கு சாட்சியுமில்லை, குற்றவாளியும் இல்லை. ஆனால், கதிர்காமரை மட்டும் புலியள் சுட்டவை எண்டு ஜேம்ஸ் பெண்டு 008 சந்திரிகா சொல்லிறதை நம்பிடுவினம். ஒண்டுமில்லை பாருங்கோ! முதுகெலும்பு உள்ள மூன்றாமுலக நாட்டை பணக்கார நாடுகளுக்கு பெரிசாய் பிடிக்கிறேல்லை.

எங்களிட்டை பலமான படையும், நாங்கள் எல்லாரும் பெருமை கொள்ளத்தக்க நிகரற்ற தலைவரும் இருக்கேக்கிளை தயங்காமல் எல்லாரும் சேர்ந்து உழைச்சால் பொருளாதார வல்லமை படைச்ச நாடாக தமிழீழமும் ஆகலாமோ இல்லையோ!

அதிலையும் வன்முறையைப் பற்றி பிரிட்டன் விமர்சிக்கிறது எனக்கு வேதனையிலயும் சிரிப்பாயிருக்கிது பாருங்கோ! ஆசிய, ஆபிரிக்க நாடுகளெண்டு யுத்தம் நிலவிற 20 இற்கும் குறையாத நாடுகளின்ரை இண்டைய நிலைமைக்கு "சூரியன் அஸ்தமிக்காத புகழ்" பிரித்தானிய சாம்ராச்சியம் தானே காரணம்! 2000 வருசத்துக்குப் பிறகு பைபிளில பழைய வேதாகமத்தில குறிப்பிடப்பட்டிருக்கிறதை அடிப்படையாக வைச்சு யூதர்களுக்கு தனிநாட்டுரிமை இருக்கிதெண்டு சொன்ன நாடுதானே பிரிட்டன்.

இல்லைப்பாருங்கோ 20ஆம் நூற்றாண்டின்ரை ஆரம்பகாலப் பகுதியில யூத மக்கள் தங்களுக்கு எதிராய் ஐரோப்பிய நாடுகளில உருவான எதிர்ப்புணர்வைத் தொடர்ந்து பழைய வேதாகமத்தில குறிப்பிட்டதை வைச்சு பலஸ்தீனத்தில அமைஞ்சிருக்கிற இஸ்ரேலுக்கு குடிபெயரத் தொடங்கிச்சினம்.

கொஞ்சக்காலத்தில ஏற்கெனவே அங்கை வாழ்ந்து வந்த அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில பிரச்சினையள் முத்திக்கொண்டு வந்திட்டிது. அந்த நேரம் பிரித்தானிய சாம்ராச்சியத்தின்ரை நிர்வாகத்துக்கு உட்பட்டிருந்த பலஸ்தீனத்தை பிரிட்டன் உடன ஐ.நாவோட (ஐ.நா. உருவானது 1945இல்) சேர்ந்து 1948 இல இரண்டாய்ப் பிரிச்சு இஸ்ரேலை அமைச்சுக் கொடுத்திது. 2000 வருசக் கதையை வைச்சு அங்கை அப்பிடி செய்த பிரிட்டன் 238 வருசத்துக்கு முன்னால எங்களுக்கு இருந்ததையும் கெடுத்துக் குழப்பம் உருவாகிறதுக்கு காரணமாய் அமைஞ்சது மட்டுமில்லாமல், தொடர்ந்தும் பிழையளை விடவெல்லே பார்க்கிது. எங்கட தாயக உரிமைக்கு ஒண்டில்லை ஓராயிரம் ஆதாரங்கள் எங்களிட்டை இருக்கிது.

எங்கட தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஒரு நிபந்தனையும் வைக்கேல்லை. அரசாங்கம் தான் தங்கட கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில வைக்கோணுமெண்டு நிபந்தனை விதிச்சிருக்கிது. இல்லை தங்கட வெளிநாட்டமைச்சருக்கே பாதுகாப்பு வழங்கேலாத அரசாங்கத்தை நம்பி, என்னண்டு நாங்கள் எங்கட ஆட்களை அனுப்பிறது! ஆ... சொல்லுங்கோ பார்ப்பம். பக்கத்தில இருக்கிற பாரத பூமியிட்டையும் ஒரு சந்தேகம் கேட்கோணும். தங்களுக்கெதிராய் செயற்படிற ஆயுதக்குழுக்களுக்கு பாகிஸ்தான் ஆதரவளிக்கிறதை நிறுத்தி, இதய சுத்தியோட பேச்சுவார்த்தையளில கலந்துகொள்ளாததைக் கண்டிக்கிறவைக்கு, இஞ்சை எங்கட எதிர்பார்ப்பும் அதுதான் எண்டிறதை விளங்கிக்கொள்ளேலாமல் இருக்கோ?

என்ரை குஞ்சுகள் ஒண்டு நான் உங்களுக்கு சொல்லிறன்: அடுத்தவை தந்துதான் சுதந்திரத்தை அனுபவிக்கோணும் எண்ட தலைவிதி எங்களுக்கில்லை. தமிழினம் உலகத்தில இருக்கிறதும், இல்லாமல் போறதும் தமிழீழத்தில இருக்கிற எங்கட கையளில தானிருக்கிது. குழந்தையளை அடகு வைச்சு யுத்தம் நடக்கிற பேரினவாத அரசை எதிர்க்கிறதுக்கு குஞ்சு, குருமன் எல்லாம் சேர்ந்து துணிஞ்செழுந்தால் எந்தப் பகையும் எரியும் சிறு தூசாய்! நெல்சன் மண்டேலாவையே பயங்கரவாதி எண்டு சொல்லிக்கொண்டிருந்தவைதான் இண்டைக்கு தங்களை சர்வதேச சனநாயகங்களாக விளம்பரப் படுத்திற ஆக்கள் எல்லாரும்!

இல்லைப் பிள்ளையள்! நாங்கள் வாழிறது அறிவியல் யுகத்தில. ஆங்காங்கை ராணுவத்தை நோக்கி வெடிக்காத கிரனைட்டுகளை வீசிற சம்பவங்களை புலியள் மேல பழி சுமத்தி, தொடரும் வன்முறை பற்றிக் கதைக்கிற தரப்புகளைப் பார்த்து சின்னதொரு கேள்வி: புலியள் என்ன சில்வர் சட்டி வாங்கினால் இனாமாய் குடுக்கிற தீபாவளி சீசன் கிரனைட்டுகளை வைச்சே போராடினம்!

ஆனானப்பட்ட ஆனையிறவை வென்றெடுத்த எங்கட பிள்ளையள் லேசில எறியாதுகள், அப்படி எறிஞ்சாலும் அது எறிஞ்ச மாதிரித்தான் இருக்கும். ராணுவப்புலனாய்வுத்துறை சும்மா சீண்டிறதுக்காகத்தான் உப்பிடியெல்லாம் செய்யிது எண்டது சின்னப்பிள்ளைக்குக் கூட விளங்கும்.

ஐரோப்பியக்கூட்டமைப்பின்ரை அறிக்கையால உசாரடைஞ்சிருக்கிற சிங்களப்பேரினவாதம் எடுக்கப்போகிற மோசமான முடிவுகளுக்கும், அதின்ரை கடந்தகாலம் உட்பட சகல மனிதப் படுகொலையளுக்கும் ஐரோப்பியக் கூட்டமைப்பு பொறுப்பு ஏற்கத்தயாரா எண்டு கேட்கிறன்.

போர்த்துக்கேயருக்கு சங்கிலியன் பயங்கரவாதி, ஆங்கிலேயருக்கு பண்டார வன்னியன் பயங்கரவாதி எண்டால் ஒட்டுமொத்த ஈழத்தமிழ் மக்களுமே பயங்கரவாதியளாவே இருந்திட்டுப்போறம்.

செல்லங்கள்! எங்கட நாட்டுக்கான விடுதலையை வென்றெடுக்கிறதுக்காக ஒரு பலமான படை, உறுதியான மக்கள் வெள்ளம் இரண்டையும் வழிநடத்த சிறந்ததொரு தலைவர் கிடைச்சிருக்கேக்கிளை நாங்கள் விடுதலைக்காக எவரிட்டையும் கையேந்தி நிற்கத்தேவையில்லை ! கடற்புலித்துணைப்படைக்குப் போன சனங்கள் "நீங்கள் பயிற்சியை மட்டும் தாங்கோ! ஆயுதங்களை நாங்கள் ஆமியிட்டை இருந்து பறிச்செடுத்து அடிக்கிறம்" எண்டு இயக்கத்திட்டை கேட்டிச்சினமாம். அந்த ஓர்மம் ஒண்டே போதும் பாருங்கோ, எதையும் நாங்கள் எதிர்கொள்ளலாம். வாற முறை சந்திப்பம்!



தேசிய வாசிப்பு மாதமாக ஒக்டோபர் மாதம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. சிறிலங்கா அரசின் தேசிய நூலக ஆவணவாக்கள் சேவைகள் சபை இதனை கடந்த ஆண்டு தொடக்கம் செயற்படுத்தி வருகின்றது. கலாசார அலுவலர்கள், தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சின் கீழ் வருகின்றது 'இச்சபை.

திட்டமிட்ட முறையில் தமிழ் இன அடக்குமுறையும் கல்வி, உயர் கல்வி, வேலைவாய்ப்பு என்று சகல செயற்பாடுகளையும் இனவாதக் கண்கொண்டு பார்க்கும் ஒரு அரசு இவை எல்லாவற்றையும் விட பாடசாலைகளை, பாடசாலை மாணவர்களை, அவர்களின் நூல் நிலையங்களையெல்லாம் அழித்தொழித்தது. இவை எல்லாவற்றுக்கும் சிகரமாக மிகப் பெறுமதிவாய்ந்த யாழ்ப்பாண நூலகம் அதன் அறிவின் பெறுமதிக்காக திட்டமிட்டு அழிக்கப்பட்டது.

அப்படியே உள்வாங்கி புலம்பிக் கலங்கி மனம் குழம்பாமல் அதுசரியா தவறா என்பதை நின்று நிதானித்து விசாரணை செய்து புரிந்து கொள்ளவும் உதவுகின்றது.

ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமானால் ஆற்றல் உள்ள மனித வளம் முக்கியமானது. இந்த ஆற்றல் என்பது பல்வகை நிலைப்பட்டது. பல்வகை நிலையானது. அவர்கள் பொருத்தமான கல்வியறிவு மூலம் வலுவூட்டலிலேயே தங்கியுள்ளது. இத்னாலேயே அவன் அறிவூட்டப்படுவான். பொருத்தமான கல்வியானது நாட்டின் தேவைக்கும்

# இலக்கியப்பகிர்வு

எதிர்கால மேம்பாட்டின் அடிப் படையிலும் நாட்டின் பொருண்மிய வளங்களின் அடிப்படையிலுமே மேற்கொள்ளப்படும்.

என்றாலும் கூட அறிவு ஆனது அடிப்படைக் கல்வியும் தொழில் நுட்பக்கல்வியும் ஏனைய துறைசார்ந்த கல்வி மூலமும்தான் கிடைக்கும் என்று கருதமுடியாது.இதற்கு இன்னுமொரு பக்கமும் உண்டு அதுதான் வாசிப்பு.

ஏனெனில் அறிவு என்பது பரந்த ஒரு தளத்தைக் கொண்டது.

சொற்களை கற்களுக்கு ஒப்பிட முடியும். எங்களிடம் இருக்கும் கற்களின் அளவினைக் கொண்டே எங்களால் கட்டப்படும் வீட்டின் அளவினைத் தீர்மானிக்க முடியும். அவ்வாறேதான் எம்மிடம் உள்ள சொற்களைக் கொண்டே எம்மால் எழுதவோ பேசவோ முடியும்.

எல்லோரிடமும் கருத்துக்கள். கற்பனைகள் உண்டு. இக்கருத்துக் களை, கற்பனைகளை வெளிப்படுத்த எல்லோராலும் முடியாது இருப்பதற்கு முக்கியமான காரணம் அவர்களால் தொடர்ச்சியாக தம் கருத்துக்களை எழுதவோ பேசவோ முடியாதபடி அவர்களுக்கு ஏற்படும் சொற்களின் பற்றாக்குறைதான்.

கவிதை, கதை என்று இலக் கியமோ ஏனைய துறைசார்ந்த விடயங் களைப் படைக்கும் படைப்பாளிகள் அந்தந்தத் துறைகளில் சிறப்பாக முன்னேற தனித்தன்மை பெற அவர்களுக்கு உதவுவது வாசிப்புத்தான் என்பதை அவர்களுடைய செவ்விகள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

எனவே வாசிப்பின் பெறும தியை அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும். தொலைக்காட்சி நிகழ்சிகள் எமது மக்களின் பெருமளவு நேரத்தை தின்றுகொண்டிருக்கும் சூழலில் வாசிப்பின் பெறுமதியை அதன் தேவையை நாங்கள் விளங்கிக் கொள்ளமுடியும்.

வாசிப்பு ஆனது தொடர்சியான செயற்பாட்டின் மூலம் வளர்த்தெடுக்கப்படவேண்டியது. "கண்டதும் கற்றால் பண்டிதன் ஆவான்" என எங்கள் மரபில் பழமொழி ஒன்று உள்ளது. இதன் அர்த்தம் என்ன என்பது புரியக்கூடியதே.

வாசித்தலை எந்த மட்டத்திலும் தொடக்கலாம். எப்படியும் தொடக்கலாம். "அம்புலிமாமா" சிறுவர்கதைப் புத்தகத்தில் தொடங்கி "ரமணிச்சந்திரன்" என்று மாறி வாசிக்கலாம். ஆனால் வாசிப்பின் தரத்தினை ஒரேமட்டத்தில் வைத்துக்கொள்வதுதான் ஆபத்தானது.

எங்களில் பலபேர் இவ்வாறு ஒரே மட்டத்தில் தமது வாசிப்புத் தளத்தினை நிறுத்திக்கொண்டு விடுகின்றார்கள். ஒரு தளத்தில் இருந்து அடுத்த தளத்திற்கு செல்வது தான் வாசிப்பு சிறப்பதற்கு வழி கோலும் விடயங்களாகும்.

ஒரே தளத்தில் நாம் பயணிப் பது எமக்கு புதிய அனுபவங்களை புதிய செய்திகளை எமக்குத்தராது. இதன் மறு அர்த்தம் என்பது புதிய தகவல் கள் எமக்குக் கிடைக்கமாட்டாது.

ஒரு தளத்தில் இருந்து மறுதளத்திற்கு மாற மிக நீண்டகாலம் எடுத்தாலும் அதற்காக நாம் முயல வேண்டும். இந்த முயற்சியே வாசிப்பு மீதான செயற்பாட்டினை தொடர்ச்சியாக முன்னெடுக்க உதவும்.

ஆக மொத்தத்தில் வாசிப்பினை நாம் இளம் பராயம் தொட்டு எம் மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்த வேண்டும். பெற்றோர்கள் இது தொடர்பில் அதில் அக்கறைகாட்ட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக பாடசாலைகள் முழுமூச்சுடன் இந்தச் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். அதுவே உபயோகமானதாகும்.



# வாசிப்பு

இப்போதும் இந்தச் செயற்பாடுகள் மறைமுகமாகவேனும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.

என்றாலும் 'வாசிப்பு' என்பது எங்களுக்கு முக்கியமானது. மாணவர்களாக இருந்தால் என்ன பெரியவர்களாக இருந்தால் என்ன வாசிப்பு அவரவர் தளத்தில் அவரவர் தேவைகளுக்கேற்ப புதிய புதிய அனுபவங்களைக் கொடுக்கின்றது.

தொடர்ச்சியான வாசித்தல் நடைமுறைகள் ஊடாக ஒருவர் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். பரந்த பொது அறிவுக்கும் சுயமதிப்பீடு களுக்கும் இது அவசியமானதாகும்.இது தவிர ஒழுங்கமைக்கப்பட்ட வாசித்தல் செயற்பாட்டின் மூலம் ஒருவர் ஒரு பக்குவமான மனக்குழப்பங்கள் இல்லாத தெளிவான மனநிலையைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

இவ்வாறான தன்மை உள்ள ஒருவரே எந்தவிதமான நெருக்கடியான சூழ்நிலையிலும் சரியான சுய மதிப்பீடுகள் மூலம் தன்னைக் காத்துக்கொள்ளவும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் முடியும். இதன் பிரதான அம்சம் கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்று எங்கள் மத்தியில் சொல்லப்படும் பொய் வதந்திகள், கட்டுக்கதைகள் போன்றவற்றை

அந்தத் தளம் பரந்த வாசிப்புத் தளத்தை பேணுவதன் ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும். சமகால சூழலில் வலை விரித்துள்ள பரந்த தொடர்பு சாதனங்கள் ஊடாக இந்த அறிவை வளர்த்துக்கொள்ள முடியும்.

இருந்தாலும் எமது பகுதிகளில் கற்றலுக்கோ, தகவல்களுக்கோ ஏனைய தேவைகளுக்கோ அறிவி னைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முக்கியமான ஊடகமாக உள்ளது அச்சு ஊடகம் தான் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

அதனாலேயே எமது பகுதிகளில் வாசிப்பு என்பது பிரதானமான செயற்பாடாகக் கருதப்படுகின்றது. அதிலும் சிறப்பாக பாடசாலை மாணவர்கள் இதன் பொருட்டு ஊக்குவிக்கப்பட வேண்டியவர்கள் ஆகின்றார்கள். சிறு வயது தொடக்கம் இவர்கள் ஊக்குவிக் கப்பட்டாலே எதிர்காலத்தில் அவர்கள் ஆற்றல் உள்ளவர்களாகவோ சிறப் பான ஆளுமைமிக்க தலைவர்களா கவோ, முகாமைத்துவ நிபுணத்துவம் கொண்டவர்களாகவோ வரமுடியும்.

வாசிப்பு ஆனது எமது மனக்கிடக்கைகளை சொற்களைக் கொண்டு நிரப்புகின்றது. இங்கு சொற்களின் முக்கியத்துவத்தை உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

## படித்ததில் பிடித்தது



### பதில் வாழ்க்கை

அவனுடைய தன்மானத்தின்
எலும்புகளைக்
குறிவைத்துத்
தாக்கின எஜமானின்
வார்த்தைகள்

ஆத்திரம்
எஜமான் குரல் வளையை
நெரிக்கச் சென்ற
வேகத்திலேயே
திரும்பி வந்து
விரல்களைப் பின்னியது

வெப்ப நரம்புகளில்
கொப்பளித்த ரோஷத்தைச்
சீவனம் பிடித்திழுக்கப்
பின்வாங்கியது
உறுமிக் கொண்டே

இதென்ன பிழைப்பு
கேள்வி ஏந்திய தீப்பந்தம்
கைநீட்டி வாங்கிய
சம்பளத்தில்
நனைந்து கருகியது.

வயிறு
எந்த விலங்கை
இப்படிக்
கேவலப்படுத்துகிறது
வயிறு
அவமானப்படுத்தும்
வாழ்க்கை
மனிதருக்கு மட்டும் தானா?
வெளிப்படுத்த முடியாத
கோபத்திற்கு
வெறிபிடித்தது–உடம்பின்
திசுக்களில் எல்லாம்
அங்குமிங்கும்
திரிந்து
குரைத்துக் கொண்டே
இருந்தது.

திரைப்பட கொட்டகையில்
நுழைந்த போது
கதாநாயகன் ஜாக்கீசான்
குத்துகளில்
பண்ணையார் இரத்த
வெள்ளத்தில்

கதாநாயகன்
கைகளாலேயே
எஜமான்மேல்
குத்துகள் சரமாரியாய்.

போனால்
போகட்டும் போ
ஐம்பது ரூபாய் டிக்கேற்

பேந்து போச்சு
எஜமான் மூஞ்சை.

தமிழில் - இ.றஜித்
ஆங்கிலத்தில் -வாகீர்சீமா

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
பொருந்தெருக்கள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கூறுவிலை கோரல்கள்

வழுக்கையாறு- புங்குடுதீவு- குறிகட்டுவான் வீதியில் 12.475-14.5 கி.மீ பகுதியில் சேதமடைந்த சரிவுகள் பாதையின் ஓரச்சுவர்க்கற்களை சிறிய அளவிலான உட்கட்டுமானப் புனரமைப்பிற்கும் தரமுயர்த்தலுக்குமான திட்டத்தின் (SIRUP) கீழ் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி வழிங்கல்கள் மூலம் புனர்நிர்மாணம் செய்தல்.

01 பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) மேற்குறிப்பிட்ட வேலைக்கான மூடிய கேள்விப்பத்திரங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச்சபையின் சார்பாக பெற்றுக்கொள்வார் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 08.11.2005 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு- கிழக்கு (வடக்கு) யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா காரியாலயங்களில் கிடைக்கும் கேள்விப்பத்திரப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் கேள்விப்பத்திர ஆவணங்கள் 18.10.2005 தொடக்கம் 07.11.2005 வரை மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர கட்டணமான 1750.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

02 நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

03 தகுதிவாய்ந்த கூறுவிலை கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையில் தரம் M-4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ஆ) கேள்வி கோரல் கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியான ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04 கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி **வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு/ கிழக்கு (வடக்கு) அவர்களின் யாழ்ப்பாண மற்றும் கண்டிவீதி வவுனியா** காரியாலயங்களில் பார்வையிடலாம்.

05 கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாகும்.

06 கேள்விப் பாதுகாப்புக் கட்டணத்தொகையான ரூபா 325.000/= பெறுமதிக்குரிய பத்திரங்கள் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

07 முன்கேள்வி கோரல் கூட்டம் 02.11.2005 அன்று முற்பகல் 10.00 மணிக:கு மாகாணப் பணிப்பாளர் வடக்கு/ கிழக்கு (வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டிவீதி வவுனியா அலுவலகத்தில் நடைபெறும்.ள

08 மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இருபிரதிகள் பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாவதுமாடி, "செர்சிறிபாய" பத்தரமுல்ல அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09 கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாவது மாடி, " செத்சிறிபாய" பத்தரமுல்ல அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும் கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

10 மேலதிக விபரங்களிற்கு தயவுசெய்து மாகாணப்பணிப்பாளர்/ வடக்கு - கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா, தொலைபேசி இலக்கம் 024-222 2826, 024-2220679, தொலைநகல் இலக்கம் 024-2222826 மின்னஞ்சல் முகவரி **rdanorth @sltnet.lk** மாகாணப்பணிப்பாளர் /வ-கி (வடக்கு) யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021-222 2517, தொலைநகல் இலக்கம் 021-2222517 மின்னஞ்சல் முகவரி**rdapdnenj @slt.lk** பிரதான பொறியியலாளர், யாழ்ப்பாணம். தொலைப்பேசி இலக்கம் 021-222 2968 மின்னஞ்சல் முகவரி **rdacejf@sltent.lk** என்பனவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

R.W.R.பேமசிறி,
பொதுமகாமையாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை. (சி-13064)

மோசஸ் மரியதாஸன்,
மாகாணப்பணிப்பாளர்/வ-கி (வடக்கு),
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம் /வவுனியா.

## இரண்டாம் ஆண்டு நினைவுமலர்



மலர்வு 07 10 1977

உதிர்வு 07 10 2003

### மாசிலாமணி – சிறிகாந்தன் (காந்தன்)

திதி - 14.10.2005

குடும்பத்தின் ஆதவனே – நாம்
துன்பத்தில் இருக்க நீ சென்றதேனோ
காந்தம் போல் கவரும் காந்தனே
எமைச் சிரிக்க வைத்த காந்தனே
ஆண்டோ இரண்டு சென்றதையா
உன் நினைவு நமைவிட்டுச் செய்றிடுமா.

தகவல்:-
சகோதரர்கள்.

(6842)

"தேத்தா அடி விநாயகர் துணை"

## 1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 01 11 1929

மறைவு 25 09 2004

திதி 14.10.2005 வெள்ளி

### திரு.சிவகுரு சண்முகம்.

(பளையை வதிவிடமாகக் கொண்ட முன்னாள் கண்டாவளை தபால் ஊழியர்)

அன்பின் திருவுருவாய் எங்கள் குடும்ப
ஒளி விளக்காய் விளங்கிய அன்புத்
தெய்வம் நீங்கள் இறைபதம் எய்து
ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எம்மை விட்டு அகலாது ஐயா!

தங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மனைவி,மக்கள்,பேரப்பிள்ளைகள்,
"அருளகம்"
அல்லிப்பளை,
பளை.

தகவல்:-
மகன் சண்- சந்திரபாலன்,
(ஸ்ரீஅம்பாள் ரான்ஸ்போட்)

(6840)

## ஆறாம் ஆண்டு நினைவு நாள்



வீரப்பிறப்பு 09 04 1976

வீரச்சாவு 14 10 1999

### மேஜர் இளம்பிறை

*(மாலதி படையணி)*

*நாகேந்திரம் ஜெயகலா*

*கைதடி, யாழ்.*

(சம்பவம் - அம்பகாமப் பகுதியில் வோட்டசற் -01 இராணுவ நடவடிக்கையின் போது)

நீ தேசத்தின் வித்தாகி
ஆறாண்டு ஆனதம்மா
நூறாண்டு கடந்தாலும்
மறப்போமா உனை நாங்கள்

இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீர்களையும் நினைவு கூருகின்றோம்.

அண்ணாசிலையடி,
அந்தோனியார் கோயில் முன்பாக,
அக்கராயன்.

இளம்பிறை குடும்பத்தினர்

(சி.13032)

# கேள்வி அறிவித்தல்

**பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - மன்னார்**
**2006 ஆம் வருடத்திற்குத் தேவையான வழங்கல்கள்/சேவைகள்**

01. மன்னார் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட வைத்தியசாலைக்குப் பின்வரும் வழங்கல்கள்/சேவைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
அ. சமைத்த/சமைக்காத உணவு வழங்கல்
ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
இ. காவல் சேவை (Security Service)
ஈ. சுத்தம் செய்தல் (Cleaning Service)

02. 2006 ஜனவரி 01 முதல் டிசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான இவ்வழங்கல், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரை இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 31.10.2005 ஆம் திகதி பி.ப 3.00 மணி வரையும் மன்னார் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

03. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுகோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

04. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ் குறிப்பிடப்படும் தொகையைச் செலுத்துவதுடன், உணவு வழங்கல், சலவை செய்தல் சேவை என்பவற்றிக்காக பெறுமதி ஆவணத்தினை (Worth Certificate) மன்னார் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 03.11.2005 ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

05. வைப்புத்தொகுதிகளும், ஆவணங்களும்

அ. சமைத்த /சமைக்காத உணவு வழங்கல

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|
| பொது வைத்தியசாலை 01 | 500.00 | 40,000.00 | 200,000.00 |
| மாவட்ட வைத்தியசாலை 03 | தலா 300.00 | 30,000.00 | 100,000.00 |
| சுற்றியல் கூறு 01 | 250.00 | 20,000.00 | 75,000.00 |
| கிராமிய வைத்தியசாலை 02 | தலா 250.00 | 20,000.00 | 75,000.00 |
| மத்திய மருந்தகமும், மகப்பேற்று மனையும் 02 | தலா 250.00 | 10,000.00 | 50,000.00 |

ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்

| வைத்தியசாலை | | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| பொது வைத்தியசாலை 01 | தொகுதி 1 | 500.00 | 10,000.00 | 75,000.00 |
| | தொகுதி 2 | 300.00 | 10,000.00 | 50,000.00 |
| மாவட்ட வைத்தியசாலை 03 | | தலா 250.00 | 5,000.00 | 30,000.00 |
| சுற்றியல் கூறு 01 | | 250.00 | 3,000.00 | 15,000.00 |
| கிராமிய வைத்தியசாலை 02 | | தலா 100.00 | 3,000.00 | 15,000.00 |
| மத்தியமருந்தகமும், மகப்பேற்றுமனையும் 02 | | தலா 100.00 | 2,000.00 | 10,000.00 |

இ. காவல் சேவை வழங்கல் (Security Service)

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|
| பொது வைத்தியசாலை | 1000.00 | 50,000.00 |

ஈ. சுத்தம் செய்தல் (Cleaning Service)

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|
| பொது வைத்தியசாலை | 1000.00 | 50,000.00 |

உ. ஆவணங்கள்

1. 01.09.2005 ஆம் திகதிக்குப் பின் அந்தந்தப் பிரதேச செயலரிடமிருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதி உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதம் {(பி.செ.எம்.201 படிவம்) மேலே கூறப்பட்ட ''அ''வுக்கும் ''ஆ''வுக்கும் மாத்திரம்}

2. காவல் சேவை வழங்குவதற்காக கேள்விப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3. பதிவு செய்யப்பட்ட துப்புரவு ஏற்பாட்டுச்சேவை வழங்குவதற்காக கேள்விப்பத்திரம் கோருபவை நிறுவனங்கள்/சங்கங்களாக இருத்தல் வேண்டும்.

4. முன்னைய அனுபவங்கள் தொடர்பான சான்றுகள். (காவல் சேவை,சுத்தம்செய்தல்) அரச/ அரசகூட்டுத்தாபன/ சபைகளில் (Board) பெற்ற அனுபவச் சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும் போது சமுகமளிக்கலாம்.

6. கேள்வி தொடர்பாக கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

7. மேலதிக விபரங்களை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணிமனைக்கணக்காளர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி - 023-2233114)

வைத்திய அதிகாரி திருமதி.எஸ்.ஆர்.யூட்,
பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
மா.சு.சே.பி.பணிப்பாளர் பணிமனை,
மன்னார்.

(சி-13062)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில். 6.10.2005 இல் 24 ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் இவ் இருவரும் B.F.A நுண்கலை மாணி பட்டம் பெற்றுள்ளனர்.



புவேந்திரன் (J.P) மகேசன்
**B.F.A. (Ard and design spl)**

நவரத்தினம் விஜயராசா
**B.F.A. (Ard and design spl)**

மேலும் பல பட்டம் பெற வாழ்த்துபவர்கள்

திரு.திருமதி. புவனேந்திரன் (J.P) குடும்பத்தினர் ஜெயந்திநகர் (கிளி)
திரு.திருமதி. சடகோபன் குடும்பத்தினர் திருவையாறு (கிளி)
திரு. திருமதி. Do முகுந்தன் குடும்பத்தினர் அரசினர் வைத்திசாலை (பதுளை)

(சி.6419)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்
1982 * 03 * 20



வீரமரணம்
1999 * 10 * 14

## லெப்-கண்ணாளன்
## லோகேந்திரன்-சுஜேந்திரன்
## செல்வபுரம்-முல்லைத்தீவு

அம்பகாமப் பகுதியை ஆளவந்த சிங்களப்படைக்கு
நம்பிக்கை இழக்க வைத்த நல்லதோர் ஈழப்போரில்
தும்பாக படைசிதறி தூசாகக் காற்றில் பறக்க
அம்பாக களமாடிய அப்பனே சுஜேந்திரா
எம்மைப் பிரிந்த ஆறாண்டு எப்படித்தான் போனதோ
அம்மாவுடன் விண்ணில் இணைந்து விடிப்பலைப் பாரப்பா.

தந்தை
த.லோகேந்திரன்,
சகோதரர்கள்
சுமணன், சுதன்.

(6229)

# 6 ஆம் ஆண்டு நினைவினில்

தாய் மடியில்
1975 * 02 * 13



தாயக மண்ணில்
1999 * 10 * 14

கடந்த 1999/10/14 அன்று அம்பகாமம் பகுதியில் பெருமெடுப்பில் முன்னேறிய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

## மாலதி படையணியின் மருத்துவப் போராளி
## கப்டன் திலீபனா
## சதாசிவம்-சதானந்தி
## சிலாவத்தை, முல்லைத்தீவு.

தமிழ் மக்கள் துயர்துடைக்க
தலைவன் அணிதனில் தாயின் ஆசியுடன்
தளராது போராடப் புறப்பட்ட- வேங்கையே
தமிழீழம் விடிவு பெறும் காலம் வெகுதூரமல்ல.
மருத்துவப் பணியில் மகத்துவம் புரிந்த- திலீபனாவாக
மங்காப் புகழுடன் எம்மனதில் வீற்றிருப்பாய்
என்றும் உன்நினைவில் வாடும்.

அன்பு அம்மா,
பெரியக்கா, அத்தான்,
பிள்ளைகளான திலீபனா, துசான்,
துவாரகன், சின்னக்கா சகீலா,
தம்பி சதா,
அண்ணா கமலன், அம்மம்மா.

சிலாவத்தை,
முல்லைத்தீவு.

(சி.13056)




# உதைபந்தாட்ட உயர்ச்சிபற்றிய எமது கனவு மெய்ப்படுமா?

*அரும்புகள் உதைபந் தாட்டப் பயிலரங்கம் பற்றி...*

அரும்புகள் உதைபந்தாட்டப் பயிலரங்கு என்பது கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னோடியாக ஆசிய ஜேர்மன் விளையாட்டுப் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் நான்கு உதைபந்தாட்ட பயிற்றுனர்கள் இங்கு வருகைதந்தபோது ஐந்து பாடசாலை களின் சிறுவர் அணிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட செயல்திட்டத்தின் விரிவாக்கமே இன்றுவரை அரும்புகள் உதைபந்தாட்ட பயிலரங்கமாக செயற்படுகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களில் வெறும் கால்களுடன் ஆடப் பட்ட உதைபந்தாட்டமே எமது மக்களுக்கு சிறந்த உளவளத்துணை ஊடகமாக இருந் ததை அப்போது யுத்தம் அகோரமடைந்திருந்த எமது இடம்பெயர்ந்த வாழ்வில் கண்டு கொண்டோம். சுற்றுப்போட்டிகளுக்கான வாய்ப்பு இல்லாத காலங்களில் ஒப்பீட்டளவிலான எமது தர மேம்பாடு பற்றிய மதிப்பீடுகள் அப்போதைய காலத்தில் இல்லாமல் இருந்தது. இப்போது மாகாணமட்டப் போட்டிகளில் பங்கு பற்றும்போது எம்மால் வெல்லமுடியாமலி ருக்கிறது. எனினும் இந்த ஆண்டு புதுக்குடி யிருப்பு மத்திய கல்லூரி வடக்கு கிழக்கு மாகாணப் போட்டிகளில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடும்படியான ஒரு மாற்றமாகும். இந்த அடிப்படையில் உதைபந்தாட்ட தரமேம்பாட்டில் மாற்றத்தை எதிர்நோக்கியே குறிப்பாக, யுத்தத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதி, திருமலையில் ஈச்சிலம்பற்றுப் பகுதி என்பவற்றில் அரும்புகள் உதைபந்தாட்ட பயிலரங்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இப்போது இணைத்துக்கொள்ளப்பட்ட அணிகளுடன் மேலும் ஓரிரு அணிகள் இணைக்கப்பட்டு பயிற்றுனர்களுக்கான அடிப்படை பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று ஆண்டுகளுக்கு தொடரான பயிற்சிகளை வழங்க முன்வருபவர்கள் மட்டுமே இதில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

உதைபந்தாட்டம் மீதான ஈர்ப்பு அதில் நீண்டகால நோக்கில் சாதிக்கவேண்டும் என்ற ஆர்வமுடைய அணிகளை இணைத்து சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வகையில் தொடர் பயிற்சிகளையும் வழங்கவுள்ளோம்.

இந்த வகையில் தயார்ப்படுத்து வதற்கு அரும்புகள் உதைபந்தாட்டம் எனும் பயிலரங்கம் ஒன்றை இளையோர் செயற்பாட்டு நிறுவனம் செயற்படுத்தியிருக்கிறது.

இந்த செயல்திட்டம் நீண்ட இலக்கில் வெற்றிபெறும் என நாங்கள் நம்புகின்றோம். இதன் ஒரு செயற்பாடாகவே கடந்த வாரம் நடைபெற்ற அரும்புகள் உதைபந்தாட்டப்போட்டி அமைந்திருந்தது.

இதில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டபோதும் எதிர்காலத்தில் உதைபந் தாட்டம் என்பது தமிழர் தாயகத்தின் முதன்மை விளையாட்டாக குறைந்தபட்சம் தெற்காசிய தரத்திலாவது சாதனைக்கு தயார்ப்படுத்தும் அணியாக உருவாகவேண்டும் என்பதே இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் அரும்பு கள் பயிலரங்கம் எதிர்பார்த்து நிற்கிறது.

*உதைபந்தாட்டத்தின் இன்றைய நிலைபற்றி என்ன குறிப்பிட விரும்புகிறீர்கள்?*

உதைப்பந்தாட்டத்திலே எங்களுக் கென்று ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றிலே 1976 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட தெரிவு அணி வடமாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தி அநுராதபுரத்தில் நடந்த விளையாட்டு அமைச்சின் அகில இலங்கை போட்டியில் உதைப்பந்தாட்டத்தின் இறுதிப்போட் டிக்கு வருகிறது. அந்த இறுதியாட்டத்தில் முன்னணியில் நிற்கின்ற மேல்மாகாணத்தின் (கொழும்பு மாவட்டம்)உதைப்பந்தாட்ட அணியை சந்திக்கிறது. அப்போது 4-1 என்ற கோல்கணக்கில் யாழ் மாவட்ட அணி வெற்றி பெறுகிறது.

அன்றைய காலகட்டத்தில் யாழ்ப் பாணத்தில் உதைபந்தாட்டம் என்பது மிகச்




*அ.அன்ரன் அன்பழகன்*
*செயலாளர்,*
*இளையோர் செயற்பாட்டு நிறுவனம் இணைப்பாளர்,*
*வடக்கு கிழக்கு உதைபந்தாட்ட அபிவிருத்திச் சங்கம்.*

சிறியதாக இருந்தது. அங்குள்ள பொழுது போக்குகளான திரைப்படம், நாடகங்கள் வானொ லிக்கு அப்பால் யாழ்.மாவட்டத்தில் அந்தக் காலத்தின் பெரும்பகுதி யாழ் துரையப்பா அரங்கில் எப்போதுமே கால்பந்து போட்டி நடக்கும் அந்த போட்டிக்கான நுழைவுக் கட்டணம் அப்போது ஒரு ரூபா. அந்த நுழைவுக் கட்டணம் சில வேளைகளில் பாடசாலைகளின் அணிகள் பங்குபற்றும் போதும் நடைமுறையில் இருந்தது. அப்போது யாழ்ப்பாணத்தில் நுழைவுச் சீட்டு எடுத்து உதைபந்தாட்டத்தை ரசிக்கும் உதைபந்தாட்ட பிரியர்கள் இருந்தனர்.

ஆனால் இன்றைக்கு உதைபந்தாட் டத்தை பார்ப்பதற்கு கட்டணம் செலுத்த தயாராக இருக்கிறார்களா? இல்லையா? என்பதை விட உதைபந்தாட்டம் என்பது ஒரு பாமரர்களின் விளையாட்டு ஒரு கௌரவம் குறைந்த விளையாட்டு என்று எண்ணப்படுகிற அளவுக்கு எங்கள் தாய கத்தில் உதைபந்தாட்டம் வீழ்ச்சி கண்டுவிட்டது.

இதற்கு முக்கிய காரணம் உதைபந் தாட்டத்தை விட வேறு வேறு விளையாட்டு களுக்கு இலத்திரனியல் ஊடகங்களாலும், பத்திரிகைகளாலும் கொடுக்கப்படுகின்ற முக் கியத்துவம் இலங்கை கிரிக்கெட்டில் உலகத் தரத்தில் உள்ள நிலைக்கு எட்டியதும் முக்கிய காரணமாகும்.

ஆனால் கிரிக்கெட்டை பொறுத்த வரை தமிழர்கள் எப்போதுமே விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில்தான் அந்த இடத்துக்கு போகிறார்கள்.

ஆனால் உதைபந்தாட்டத்தை பொறுத்த வரையில் இன்றைக்கும் கொழும்பு நகரத்தில் கூட தமிழ் மக்கள் அல்லது முஸ்லிம்கள் தான் உதைபந்தாட்டத்தின் நட்சத்திரங்களாகத் திகழ்கின்றனர்.

இப்போது உதைபந்தாட்டம் சில பண்பு ரீதியான தேவைகளை வேண்டிநிற்கின்றது.

அதாவது பொருளாதார ரீதியில் பார்த்தால் இங்கிலாந்து அல்லது ஐரோப்பாவை பொறுத்த வரையில் உதைபந்தாட்டம் என்பது ஒரு வருமானத்தை தருகின்ற அதி உச்ச வருமானத்தை தருகின்ற ஒரு பொறியியலாளர் அல்லது ஒரு கணக்காளரைவிட அதிக வருமானத்தை தருகின்ற ஒரு தொழிலாக இருப்பதால் இங்கு எல்லோரும் ஆறு வயதில் தமது பிள்ளைகளை உதைபந்தாட்ட வீரர் ஆக்குவதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளை பொறுத்தவரையில் ஆறு வயது முதல் ஒன்பது வயது வரை அடிப்படை நுட் பங்கள் பாடசாலை களிலேயே பயிற்று விக்கப்படுகின்றன.

அதன்பின் அவர் கள் வளர்ந்து வரு கின்றபோது அவர் களின் தரத்துக்கு ஏற் றவாறான கழகங் களில் இணைக்கப் படுகின்றனர்.

டிவிசன் 1,2,3,4,5 என அங்கீகாரங்கள் உண்டு. இந்த நிலை யானது உதைபந்தாட் டம் ஒன்றை நேரடி யாக பார்க்கவேண்டும் என்றால் அதற்கான நுழைவுச் சீட்டு சிலவேளைகளில் அங்கு இருக்கும். ஒரு சராசரி மனிதனின் நாள் உழைப்பில் நான்கில் ஒரு பங்காக இருக்கும். அதனைவிட தரமானபோட்டி என்றால் ஒரு நாள் உழைப்பையே கட்டணமாகச் செலுத்தியே பார்க்கவேண்டும். இவற்றை விட விளம்பரத்தி னால் கிடைக்கும் கட்டணம் மிகமிக அதிகம்.

எனவே நாங்கள் எமது தாயகத்தில் உதைபந்தாட்டத்தை வளர்ப்பதானால் பிரதான மானது உதைபந்தாட்டத்தை பொருளாதார ரீதியான ஒரு ஆட்டமாக உலகத்தின் ஓட்டத் துக்கு ஏற்றவாறு மாற்றவேண்டும்.

அதாவது உதைபந்தாட்டம் என்பது கட்ட ணத்துக்குரிய போட்டியாக மாற்றப்படவேண்டும்.

கட்டணத்தில் கிடைக்கும் வருமானத் தில் 50 வீதத்தை அன்றைய ஆட்டத்தில் ஈடுபடும் அணிகளுக்கு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு பொருளாதார ரீதியான கட்டமைப் புக்குள் உதைபந்தாட்டத்தை கொண்டுவரும் போது உதைபந்தாட்டத்தில் பாரிய வளர்ச்சி ஏற்படும்.

அதைவிட ஐரோப்பிய நாடுகளிலே அன்றி ஆசியாவின் உதைபந்தாட்டம் ஆடும் நாடுகளில் ஒருமுறை உண்டு. அதாவது சிறந்த ஆட்டக்காரன் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவரை தன்னுடைய கழகத்திற்கு ஒருவர் கொண்டுவர முடியும். இந்த வகையில் அவர் இரண்டு விதமாக போட்டிகளில் கலந்து கொள்வார். தேசிய ரீதியாக, தன்னுடைய நாட்டுக்காக, தன்னுடைய கிராமத்துக்காக, தன்னுடைய மாவட்டத்துக்காக ஆடும் ஆட்டம் மற்றும்படி தனக்கு அதிக ஊதியம் செலுத்தக் கூடிய இடங்களை நாடி அவர் செல்லலாம்.

உதாரணமாக வடக்கு கிழக்கில் நாங்கள் சற்று வளர்ச்சி அடைந்த கொழும்பு அல்லது வேறு இடங்களில் உள்ள வீரர்களை கலந்துகொள்ள வைப்பதன் ஊடாக இன்னும் உதைபந்தாட்டம் எமது பகுதியிலும் வளர்ச்சி பெறும்.

அப்படியான நடைமுறையை நாங்களும் கடைபிடிக்கும்போது இயல்பாகவே அணியின் தரம் முன் மாதிரியாக அமையும். இப்படியாக நவீனத்துவப் படுத்துவதற்கான வாய்ப்புக் களை கொண்டிராதுவிட்டால் உதைபந்தாட்ட வளர்ச்சி என்பது கடினமான ஒன்றாகவே இருக்கும்.

*தமிழர் தாயக உதைபந்தாட்ட வளர்ச்சிக்கான நடைமுறைத் திட்டங்கள் பற்றி...*

உதைபந்தாட்டத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு தமிழீழ விளையாட்டுத் துறை தமிழர் தாயகத்தில் வடக்கு கிழக்கு உதைபந்தாட்ட அபிவிருத்திச்சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் அதிக சுற்றுப் போட்டிகள், மத்தியஸ்தர் பயிற்சி முகாம்கள், உதைபந்தாட்ட முகாமைத்துவ கருத்தரங்குகள், பயிற்றுனர் பயிற்சிகள், வெளி நாட்டு சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றுதல், மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளை வினைத்திறனுடன் செயலாற்ற வைத்தல் என்பன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை பொறுத்தவரை அவற்றை ஒழுங்கமைப்பதிலும் நடத்துவதிலும் மாற்றங்கள் தேவைப்படுகின் றன. உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் குழப்பங்கள் இன்றி நடத்தப்படுவது முற் கூட்டியே உறுதிசெய்யப்பட வேண்டும். அது மட்டுமல்ல போட்டிகள் கட்டண அறவீட்டுடன் நடத்தப்பட்டு பங்கு பற்றும் அணிகளுக்கு பண ரீதியான ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் உதைபந்தாட்டத்தை பொருளாதார பாதுகாப்புடைய ஆட்டமாக மாற்றமுடியும். இன்றைய உலகமயமாதல் நடைமுறையின் கீழ் பொருளாதாரப் பாதுகாப்பான ஆட்டமாக உதைபந்தாட்டத்தில் முதன்மை நிலை பெற்ற நாடுகளின் நிலை




மைக்கு எமது தாயகத்தின் உதைபந் தாட்டத்தையும் எடுத்துச் செல்லமுடியும்.

எம்மை பொறுத்தவரையில் சிறிலங் காவின் தரத்தை சட்டென்று எட்டக்கூடிய ஒரு ஆட்டமாக உதைபந்தாட்டமே விளங்கு கிறது. ஒவ்வொரு மாவட்ட உதைபந்தாட்ட லீக்குக்கும் சொந்தமான மைதானம், லீக் அலுவலகம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு உலக உதைபந்தாட்டச் சம்மேளனம், ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனம் என்பன பீபா அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.மணிலால் பனாந்டோ, சிறிலங்கா உதைபந்தாட்டச் சங்கம் என்பவற்றின் ஊடாக உதவ முன் வந்துள்ளதால் எமது உதைபந்தாட்ட மேம் பாடு பற்றிய கனவு மிக விரைவில் மெய்ப்படும் என எதிர்பார்க்கிறோம்.




## அத்தியாயம்- 16

### பகுதி -68

"இதத் திறந்து நான் பாவிக்கலாமா?"

"நீங்க விரும்பினா பாவிக்கலாம்"

புத்தக றாக்கைக்குச் சென்ற அவன் அதிலிருந்த புத்தகங்களைக் கவனமாக ஆராய்ந்தான். ஒரு புத்தகத்தை எடுத்து அதன் தலைப்பை வாசித்தான்.

"உங்கள் குழந்தை... வெளியே உள்ள உலகத்தை... சந்திக்கிறது"

யன்னலை நோக்கி சென்ற அவன் வெளியே பார்த்தான்.

"ஹெலோ! உலகம்" என்றவன் வெளியே இருக்கிற உலகத்துக்கு இது ஒரு அழகான நாள். வெளியிலயும் நல்ல வாசமா இருக்குது. "ஆ... இந்தா என்ர கூட்டாளி ட்றக் வாறார்" என்றான்.

நீண்ட நேரம்




அமைதியிலேயே ஆழ்ந்துபோயிருந்தான்.

"ஹெலோ ட்றக். ஹெலோ உலகம் ஹெலோ மனிதா" என்று மென்மையாகச் சொல்லிவிட்டு மகிழ்ச்சியோடு புன்னகை செய்தான்.

மீண்டும் மேசைக்கு வந்த அவன், அதிலிருந்த லிற்றில் ஒக்ஸ்போட் அகராதியைத் தூக்கிக்கொண்டான். "வார்த்தைகள் நிறைஞ்சு போயிருக்கிற குட்டிப் புத்தகம்" என்றான். என்ர அன்பான அகராதியே இரண்டு சீட்டுகள நான் உனக்குள்ள வைக்கப்போறன். வார்த்தைகள் நிறைஞ்சு போயிருக்கிற சின்ன நீலப் புத்தகம். பெயர் சீட்டுகள் இரண்டை புத்தகத்தில் ஒட்டிவிட்டான். பிறகு நிமிர்ந்து கதிரையில் சாய்ந்து கொண்டு என்னைப் பார்த்தான். அவனுடைய முகத்தில் பெரியதொரு புன்னகை மலர்ந்திருந்தது.

"கெதியில வீட்ட போற நேரம் வந்திரும். நான் போகயுக்குள்ள எனக்குள்ள சந்தோசம் நிறைஞ்சிருக்கும். பிறகு அடுத்த வியாழக் கிழமை திரும்பி வருவன். ஒண்டமட்டும் ஞாபகம் வைச்சுக்கொள்ளுங்கோ நான் மட்டும்தான் வேறயாரும் இஞ்ச இருக்கக்கூடாது. நானும் நீங்களும் மட்டும்தான்"

"நான் நினைவில வைச்சுக்கொள்ளுறன். இந்த நேரம் உங்களுக்கு மட்டும் உரியதாக இருக்கவேணுமெண்டு நீங்க நினைச்சா அதில எனக்கு ஒரு பிரச்சினையுமில்ல" என்று நான் சொன்னேன்.

"நான் எங்களுக்கெண்டுதான் சொன்னனான்" கிசு கிசுப்பாகச் சொன்னான். "ஆனா இப்போதைக்கு வேற யாரும் வரக்கூடாது"

"அப்ப அது அப்படியே ஆகட்டும் இப்போதைக்கு வேற யாரும் வரமாட்டினம்"

அவன் மனதில் விதையொன்று ஊன்றப்பட்டு விட்டதோ என்று நான் எண்ணிக் கொண்டேன். தான் ஒரு நண்பன கூட்டி வர விரும்புறதா அவன் கேட்கக் கூடுமோ என்றும் நினைத்தேன். அல்லது இங்கில்லாவிட்டாலும் பாடசாலையிலாவது ஒரு சிநேகிதனை கண்டு கொள்வானோ என்றும் நினைத்தேன்.

அவனது தாய் வந்துவிட்டதைக் குறிக்கும் ஒலியெழுப்பி ஒரு முறை ஒலித்து ஓய்ந்தது.

"போயிற்று வாறன். அடுத்த வியாழக் கிழமை திரும்ப வருவன். வந்து மகிழ்ச்சியால என்னை நிரப்பிக்கொள்ளுவன்"

வெளியே சென்ற அவன் அவனது தாயாரின் முன்னால் மீண்டும் என்னைப் பார்த்து "போயிற்று வாறன்" என்று சொன்னான். பிறகு தன்னால் முடிந்தளவு வேகமாக மண்டபத்தின் அக்கரைக்கு ஓடியவன் அதே வேகத்தில திரும்பி ஓடிவந்து தாயை கட்டிப் பிடித்துக்கொண்டு "என்ர செல்ல அம்மா" என்று உரத்துக் கூறினான்.

டிப்ஸினுடைய இந்த திடீர் உணர்வு வெளிப்பாடு எங்கள் இரண்டு பேரையுமே திகைப்புக்குள்ளாக்கி விட்டது. அவனுடைய தாய்க்கு ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் கண்ணில் நீர் நிறைந்து கொண்டது. மௌனமாகவே தலையை அசைத்து என்னிடம் விடை பெற்றுக்கொண்டவள் டிப்ஸின் கையை இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டே அங்கிருந்து போய்விட்டாள்.

## அத்தியாயம்- 17

அடுத்த நாள் டிப்ஸின் தாயார் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கீடு செய்யும்படி கேட்டுக்கொண்டார். அன்றே அவரைச் சந்திப்பதற்கு மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டேன். தன் ஆவலை பெரிதும் கட்டுப்படுத்திக் கொண்டவளாக அவள் உள்ளே வந்தாள். முதல் நாள் டிப்ஸ் தானாகவே வெளிப்படுத்தியிருந்த அந்த பாச உணர்வு அவள் தன்னைச் சுற்றிப் போட்டுக்கொண்டிருந்த இறுக்கமான பாதுகாப்புக் கவசங்களை உடைத்து அவளை வெளியே கொண்டுவந்திருந்தது.

" நாங்கள் எவ்வளவு நன்றியுணர்வோடு இருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். டிப்ஸ் எவ்வளவோ மாறிவிட்டான்.



முந்தி இருந்த அதே பிள்ளையா டிப்ஸ் இப்ப இல்லை. நேற்றைக்கு நாங்க இஞ்ச இருந்து போகயுக்குள்ள செய்த மாதிரி சுயாதீனமான உணர்வுகள அவன் வெளிப்படுத்தினத நான் இதுக்கு முதல் ஒரு நாளும் காணயில்ல. நான் ஆழமாக நெகிழ்ந்து போனேன்" என்று என்னிடம் அவள் சொன்னாள்.

"அப்படி நடந்திருக்கும் என்று எனக்குத் தெரியும்" என்றேன் நான்.

"அவன் முந்தியதை விட சிறப்பான நிலைமைக்கு வந்துவிட்டான்" என்று சொன்னவளில் முகத்தில் ஒரு மகிழ்ச்சியான ஒளி தெரிந்தது. உதட்டில் மெலிதான புன்னகை மலர்ந்திருந்தது.

"இப்ப நல்ல அமைதியாயும் மகிழ்ச்சியாயும் இருக்கிறான். முந்திய மாதிரி பொறுமையிழந்த வெறியாட்டங்களில அவன் இறங்கிறயில்ல. இப்ப விரல் சூப்பிறதுமில்ல. நேரா எங்களப் பார்க்கிறான். அவனட்ட ஏதாவது கேட்டா அநேகமான நேரங்களில மறுமொழி சொல்லுறான். குடும்பத்தில என்ன நடக்கிறது என்பதில இப்ப ஆர்வம் காட்டுறான். அவனட தங்கச்சி வீட்ட வாற நேரத்தில சில நேரம் அவளோட விளையாடுறான். எப்போதும் எண்டில்ல. சில நேரங்களில அவளோட விளையாடுறான். என்னில கொஞ்சம் பாசம் காட்டத் தொடங்கியிருக்கிறான். சில நேரங்களில எனக்குக் கிட்ட வந்து தானாகவே ஏதாவது கருத்தைச் சொல்லுறான். அண்டைக்கு ஒருநாள் நான் குசினியில பலகாரம் செய்துகொண்டு இருக்கயுக்குள்ள அவன் குசினியுக்குள்ள வந்து, 'நீங்கள் பலகாரம் செய்யுறீங்களா? நீங்கள் செய்யுற பலகாரங்கள் நல்ல ருசியா இருக்குது. எங்களுக்கு நீங்கள் பலகாரம் செய்து தாங்க' என்றான்...ஓம்... 'எங்களுக்கு' எண்டுதான் சொன்னவன். தானும் குடும்பத்தில ஒருவன் எண்டு அவன் உணரத்தொடங்கியிருக்கிறான் எண்டு நான் நினைக்கிறன். நான் என்ன நினைக்கிறனெண்டா... ஓம்... அவனும் எங்களில ஒருவன் எண்டு நானும் உணரத் தொடங்கியிருக்கிறன் எண்டு நான் நினைக்கிறன்.

"எங்களுக்கிடையில என்ன பிசகிப் போனதெண்டு எனக்குத் தெரியாது. ஆரம்பத்தில இருந்தே தோற்றுப்போன ஒரு உணர்வுதான் இருந்தது. முழுமையாகவே தோற்கடிக்கப் பட்டமாதிரியும் அச்சுறுத்தப்படுகிற மாதிரியும் நான் உணர்ந்தன். என்னைப் பொறுத்தவரை எல்லாவற்றையுமே டிப்ஸ் நாசமாக்கி விட்டிருந்தான். என்ர திருமண பந்தத்துக்கே அவன் அச்சுறுத்தலாக இருந்தான். என்ர தொழில முடிவுக்கு கொண்டு வந்தான்.

இப்பிடி எங்களுக்கிடையில பிரச்சினை ஏற்படுகிற அளவுக்கு என்ன செய்து போட்டன் எண்டு என்னையே நான் கேட்டுக் கொள்ளுறனான். இதெல்லாம் ஏன் நடக்குது? இதுகள சரி செய்ய நான் என்ன செய்யலாம்? எண்டு கேட்டுக்கொள்ளுவன் ஏன்?...ஏன்?... ஏன்?... எண்ட கேள்வி எப்பவும் எனக்குள்ள எழுந்துகொண்டேயிருக்கும். ஏன் இப்பிடி ஒருத்தரோட ஒருத்தர் சண்டை போடுறம்? டிப்ஸைக் கிட்டத்தட்ட நாசமாக்கி விடுகிற அளவுக்கு ஏன் அப்பிடிச் செய்தம்? முதல்முதல் உங்களோட கதைக்கையுக்குள்ள அவன் மூளை வளர்ச்சியில்லாத பிள்ளையெண்டு நான் வலியுறுத்தினது எனக்கு நினைவில இருக்குது.

ஆனா அவன் உண்மையில மூளை வளர்ச்சி குறைந்தவனில்ல எண்டது எனக்குத் தெரியும். அவனுக்கு இரண்டு வயதாகினதில இருந்து அவனுக்குக் கற்பித்துக்கொண்டு வாறன். அவன சோதிச்சுப்பாக்கிறனான். வழமையான பிள்ளைகள போல அவன நடக்கச் செய்ய கட்டாயப்படுத்தி முயற்சிக்கிறனான். ஆனா எங்களுக்கிடையில உண்மையான தொடர்பு எதுவும் இல்லாமத்தான் இவ்வளவும் நடந்தது. ஏதாவது பொருட்களுக் கூடாகத்தான் தொடர்பு நிகழ்ந்தது. இந்த விளையாட்டறையில டிப்ஸ் என்ன செய்யிறவன் எண்டு எனக்குத் தெரியாது. அவன் அறிந்திருக்கிற... அவன் செய்யக்கூடிய விசயங்கள காட்டுற அறிகுறிகள நீங்கள் கண்டனீங்களோ எண்டும் தெரியாது.

அவனால வாசிக்கவும் எழுதவும் ஏலும். ஓம். கையில எடுக்கிற எதையும் அவனால வாசிக்க ஏலும். கருத்து வரக்கூடிய முறையில எழுதவும் எழுத்துக் கூட்டவும் முடியும். அவனுக்கு ஆர்வமூட்டுற விசயங்களப்பற்றி குறிப்பு எழுதி வைத்திருக்கிறான். அவனட்ட ஒரு ஒட்டுப்புத்தகம் இருக்குது. எல்லா வகையான பட்டைகளையும் இலைகளையும் அதில ஒட்டி வைச்சிருக்கிறான். பூக்களை அழுத்தி உலரவைச்சு வைச்சிருக்கிறான். அவன்ர அறை நிறைய புத்தகங்கள் இருக்குது. அவன் ஏதாவது கற்றுக்கொள்ள உதவக்கூடிய பொருட்கள்... படங்கள்... கல்வி சார்ந்த விளையாட்டுகள்... விளையாட்டுச் சாமான்கள்... விஞ்ஞான விள[illegible]கங்கள் எல்லாமே நிறைஞ்சு கிடக்குது. இசைத்தட்டு ஒலிக்க விடுற கருவியும் இருக்குது. தெரிஞ்செடுத்த இசைத்தட்டுக்களும் ஏராளமா இருக்குது. அவனுக்கு இசையெண்டா நல்ல விருப்பம். கர்நாடக சங்கீதத்தில... கூட விருப்பம். அந்த இசைத்தட்டுகளில இருக்கிறதுகளட எந்த ஒரு பாகத்தையும் அடையாளம் காண அவனுக்கு ஏலும். எனக்கு அது நல்லாத் தெரியும். ஏனெண்டா... அதுகளில ஒரு பகுதியை ஒலிக்க விட்டுட்டு அது என்னெண்டு கேட்டா அவன் சரியாகச் சொல்லுறவன்.

(தொடரும்)

---

# உலகை ஆட்டிப் படைக்கும் புதிய புதிர் விளையாட்டுக்கள்

புதிர் இரண்டிற்கான விடையினை சரி பார்த்துக் கொள்ளுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 2 | 7 | 5 | 1 | 3 | 9 | 6 |
| 3 | 1 | 7 | 9 | 4 | 6 | 2 | 5 | 8 |
| 9 | 6 | 5 | 3 | 2 | 8 | 7 | 1 | 4 |
| 6 | 9 | 8 | 5 | 1 | 2 | 4 | 7 | 3 |
| 5 | 7 | 1 | 8 | 3 | 4 | 6 | 2 | 9 |
| 2 | 3 | 4 | 6 | 9 | 7 | 1 | 8 | 5 |
| 1 | 4 | 9 | 2 | 6 | 5 | 8 | 3 | 7 |
| 8 | 5 | 6 | 1 | 7 | 3 | 9 | 4 | 2 |
| 7 | 2 | 3 | 4 | 8 | 9 | 5 | 6 | 1 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

## சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமானமனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும் தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

### புதிர் -03

அதனுடைய சித்திர வதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப்புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத் திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன் படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான் தீர்வு மட்டும் உள்ளது.

(இதற்கான விடை அடுத்தவாரம்)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | | | |
| | | 6 | 5 | | | | 4 | |
| 4 | 5 | | | 8 | | | 3 | 2 |
| | 9 | 5 | | | 3 | 4 | 6 | |
| | | | | | 5 | | | 8 |
| | 6 | 8 | | | 9 | 2 | 5 | |
| 8 | 7 | | | 2 | | | 1 | 9 |
| | | 1 | 9 | | | | 2 | |
| | | | | 1 | | | | |

பாவலன் பதில்கள் என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*பாவலரே!*

*சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழ் தெரிந்த மக்கள் சிலர் தாம் தமிழ்மொழி மறந்து விட்டதாகக் கூறி தமிழ்ப் பிரதேசத்திலும் சிங்கள மொழியை பேசுகின்றார்களே இதற்கு என்ன காரணமாக இருக்கும். உம்மால் கூறமுடியுமா?*

*சலூசா,*
*புளியங்குளம்.*

தம் மொழியை மறந்தவர் தன்னை தானே மறந்தவரே...! இவர்கள் தற்கொலை செய்து கொண்ட நபர்களுக்குச் சமமானவர்கள்.

*பாவலரே!*

*சிலர் சொல்கின்றார்கள் தாம் பத்திரிகைகளுக்கு ஆக்கங்கள் கொடுக்காமலே தமது பெயரில் ஆக்கங்கள் வருகின்றன என. அப்படியாயின் அவர்களின் பெயர்களில் ஆக்கங்கள் எழுதி அனுப்புபவர்கள் யாராக இருக்கமுடியும். நீர் கண்டுபிடித்துக் கூறும்.?*

*சலூசா,*
*வவுனியா.*

அவர்களை விரும்பும் நபர்கள் ஆகவும் அவர்கள் சுயமுன்னேற்றத்தை விரும்பாத நபர்களாகவும் இருப்பர்.

*பாவலா?*

*நீர் நல்லா ஜோக் விடுவீராமே! எங்கே எடுத்து விடும் கடிஜோக் ஒன்று?*

*தமிழ்மகள்,*
*கடற்புலிமகளிர்.*

எனக்கு ஏற்கனவே ஒரு ஜோக்காக நாய்கடித்து 21 ஊசி போட்டு முடித்துள்ள வேளையில் உம்மைக் கடிக்கச்சொல்லுகிறீரே கடிக்கவா.

*பாவலரே!*

*நீர் சமாதானத்தை விரும்புகிறீரா இல்லை போரை விரும்புகிறீரா?*

*ரஞ்சினி,*
*மாத்தளன்.*

நான் சுதந்திரமாக வாழ விரும்புகின்றேன்.

*பாவலா!*

*நல்ல நட்பு என நாம் நம்புபவர்களெல்லாம், சுயநலவாதிகளாகவும், துரோகிகளாகவும் மாறி தூய நட்பினையே கேவலப்படுத்துகின்றார்களே எதனால்?*

*அ.மதன்,*
*கிளிநொச்சி.*

கூடாத கூட்டம் கூடினால் நல்ல நட்பு எப்படிக் கிடைக்கும்.

*பாவலா!*

*பாதுகாப்பு வலயத்தில் ஏன் மக்களை குடியமர இராணுவம் அனுமதிக்கவில்லை?*

*மு.கடலவன்,*
*புளியங்குளம்.*

தங்களால் தங்களை மட்டுமல்ல, பொதுமக்களையும் கூட பாதுகாக்க முடியாது என அவர்கள் கருதுவதால்.

*பாவலா!*

*புதிய சனாதிபதி வந்தால் அரசியலில் மாற்றம் ஏற்படுமா?*

*ரஜீற்,*
*புளியங்குளம்.*

புதிய மொந்தையானாலும் அதனுள் இருக்கப்போவது பழைய கள்ளுத்தானே...!

*பாவலா!*

*ஏ-9 வீதியால் எப்பவாவது சென்று வந்தீரா? வாகனம் அதிகரித்தால் என்ன செய்வீர்?*

*ரஜீற்,*
*வவுனியா.*

மிதிவெடி கவனம் என்ற அறிவிப்புப் பலகை வரை ஓடிச் சென்று விழிபிதுங்க நிற்கிபேன்.

*பாவலா!*

*பிரதமராக பதவியேற்போர் முதல் முதலாக ஏன் இந்தியா செல்கிறார்கள்?*

*கலைமகள்*
*புளியங்குளம்.*

அயலகத்தின் ஆசியைப் பெறமட்டுமல்ல அதன் கட்டளைகளை சிரமேற் கொண்டு பணிபுரியவும் தான்.

*பாவலா!*

*சண்டை தொடங்கினால் வெளிநாடு என்ன செய்யும்?*

*ரஜீற்,*
*வருவாய்பகுதி*
*புளியங்குளம்.*

ஆயுதம் விற்கும், ஆலோசனை வழங்கும், பயிற்சிவழங்கும்... இடைக்கிடை சமாதானம் பற்றியும் உச்சரிக்கும்.

*பாவலா!*

*தன்மானத்துடன் வாழும் தமிழ் மக்களை பயங்கரவாதி என கூறும் நாடுகள் பற்றி என்ன கூறுகிறீர்?*

*மதி,*
*பூநகரி.*

சொல்லுவார் சொன்னால் கேட்பார்க்கு மதியென்ன.



# தெருப்பேச்சு

*" உந்தக்கலியாணம் நடந்தே தீரும். நீ இருந்துபாரன்"*

*"என்னண்டு நடக்கிற. அவங்கள் கேக்கிற சீதனத்தை இவையால குடுக்கேலுமே"*

*"அதுதான் மாமன்காறன் சொல்லியிருக்கிறனே என்ன செலவெண்டாலும் நான் தாறனெண்டு"*

*"என்னண்டு இவர் குடுக்கிற. முதல் தன்ர மோனுக்கு கேட்டு செய்விச்சிருக்கலாம் அதைவிட்டிட்டு இப்ப சிலவுதாறன் வேற இடத்தில பாரெண்டா... உதுக்க ஏதோ விசயமிருக்கு..."*

*"என்ன விசயம் அதுகள். முட்டுப்பட்டதுகள் தன்ர மோனுக்கு சரிவாறதெண்டு நினைக்கிறார்"*

*"பேயன் போல கதையாத சொத்தே அவையடதான். இந்தாள் அமகடத்தா வச்சிருக்கு"*

*"நீ கண்டனியே அந்தாள் சுயமாச் சம்பாதிச்சதுதான்"*

*" இல்லையடா உனக்கு முதல் நடந்தது தெரியாது"*

*"என்ன தெரியாது"*

*"தேப்பன் காறன் இந்தப்பிள்ளையோட, சொத்தையும் பார்க்கச் சொல்லிக் குடுத்தது தான். அதுக்குப்பிறகுதான் இவன் பணக்காறன்"*

*"அப்ப கலியாணத்துக்கு காசு குடுப்பாரெண்டு சொல்லுறாய்"*

*"கட்டாயம் எப்பிடியும் வாறகிழமை குடுப்பார் இருந்துபார்"*

*" நான் முள்ளியவளைக்குப் போறன் ஒருக்கா அந்த எபிசொட்டை ரைக்கோட் பண்ணிவை வந்து பாக்கிறன்"*

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -141



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -141

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

பெயர் : ..................................................................

முகவரி : ..................................................................

..................................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -140



**இ.கோபிகா,**
**இல:62 ஸ்கந்தபுரம்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*சின்னஞ் சிறார் எமக்கு*
*சிறை போட நினைக்காதீர்*
*அடிமை வட்டத்தை அறுத்து*
*அகிலம் முழுவதும் கால் பதிப்போம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலை புலிகளுக்கு-தடை*
*உணக்கோ புட்டிப்பாலுக்கு-தடை*
*ஆதலால் உடைக்கின்றாய்-தடையை*
*காலத்தால் உடையும் ஐரோப்பா-தடை*

அ.ஆனந்த,
முள்ளியவளை.

*பாலமுது வாயாலே உன் கட்டுக்களை*
*நறுக்கிறாய்*
*கட்டுண்டு வாழ்தல் இழிநிலை*
*சுதந்திரமே உயர்நிலை புரியவைக்கிறாயா?*

எஸ்.ராஜி,
வட்டக்கச்சி.

*மடியினில் வாழும் மழலைக்கும்*
*கடிவாளமிடலை ஏற்கும் மனமில்லை.*
*இங்கு பிஞ்சுகள் கூட அஞ்சுவதில்லை*
*பெருதுயர் வெறும் தூளாகும் நாளை.*

எஸ்.ஆர்.எஸ்,
கிளி/செந்தூரன் களஞ்சியம்.

*அந்நாளில் என்போல் இருந்தோரே*
*இந்நாளில் எம்மண்ணைக் காக்கின்றார்.*
*இந்நாளிலிருந்தே எதிரியை எதிர்க்க*
*எந்நாளும் என்னாலான பணி தொடரும்.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.



















இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-28 | 14-10-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-239



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12957) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## இராணுவத்துடன் நடமாடும் ஆயுதக் குழுக்களின்

# கொலை வெறியாட்டம் தீவிரமடைந்துள்ளது;

# யு.நி. விதிகள் உடன் அமுலாக்கப்படவேண்டும்!

## இன்றேல் யுத்த நிறுத்தத்தைப் பேணுவது சாத்தியமற்றது - சு.ப. தமிழ்ச்செல்வன்



இராணுவத்தோடு சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுக்களின் கொலை வெறியாட்டம் இப்பொழுது தீவிரமடைந்துள்ளது. இதற்கு யுத்த நிறுத்த விதிமுறைகளை அமுலாக்குவதில் இரு தரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை உறுதி செய்யாதுவிட்டால் நிச்சயமாக இந்த யுத்த நிறுத்த சூழலைத் தொடர்ந்து பேணுவது சாத்தியமற்றதாகவே இருக்கும் என நேற்று தம்மைச் சந்தித்த நோர்வேயின் சிறப்புத் தூதுவரான முன்னாள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் டொன்புறூவ் ஹொவ்டேயிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் பின் ஊடகவியலாளருக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு,

இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் எவை?

நெருக்கடி நிலைமையை அடைந்து

(III ஆம் பக்கம் பார்க்க)

## டொன்புறூவ்ஹொவ்டே கருத்துக்கூற மறுப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்திய நோர்வே சிறப்புத் தூதுவர் டொன்புறூவ் ஹொவ்டே அவர்கள் இச்சந்திப்புப் பற்றி பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் பற்றி ஆராய்வதற்கும், உருக்குலைந்து செல்லும் யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் சீர்படுத்தி

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பற்ற சூழலில் இருப்பதாக மக்கள் உணருகின்றார்கள்

### சர்.ம.உ. செயற்பாட்டாளர் இயன்மார்ட்டின்



(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்காவில் மக்கள் பாதுகாப்பற்ற சூழலில் இருப்பதாக உணர்கிறார்கள் என்று சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர் இயன்மார்ட்டின் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை இயன்மார்ட்டின் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இச்சந்திப்பிற்குப் பின் ஊடகவியலாளர்களிடம்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் - இயன்மார்ட்டின் கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிக்கு வருகைதந்த சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் இயன் மார்ட்டின் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதுடன் விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களையும் பார்வையிட்டுள்ளார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த இவர் பிற்பகல் இரண்டு மணிக்கு

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க விவாதத்திற்கு மகிந்தவை அழைக்கிறார் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் மகிந்தராஜபக்ஷவை நேரடி விவாதம் ஒன்றிற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை விவகாரம் மற்றும் தமது ஆட்சிக் காலத்தில் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் கணினி இயந்திரக்கொள்வனவு மோசடி குறித்துமே பகிரங்க விவாதத்திற்கு வருமாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை விசாரணையை முன்னெடுத்துச் செல்ல நீதிபதி தீர்மானம்

தடைப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மிருசுவிலில் எட்டுப் பேர் படுகொலை விசாரணை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மூன்று பேரைக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதிகளை பிரதம நீதியரசர் நியமித்துள்ளார். இந்த நீதிபதிகளின் முன்னிலையில் ஜூரி சபை இல்லாத நிலையில் மிருசுவிலில் எட்டுப் பேர் படுகொலை விசாரணை எதிர்வரும் சனவரி 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

முன்னர் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதும் இதற்காக நியமிக்கப்பட்டிருந்த நீதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மாற்றலாகியதன் காரணமாக விசா

(IV ஆம் பக்கம் பார்க்க)

## எமது அரசியல் விருப்புக்கு மதிப்பளித்து தீர்வினைப் பெற்றுத்தர முனைப்புடன் செயற்படுக!

### ஐ. ஒன்றியத்திற்கு கிளி. பொது அமைப்புக்கள் மகஜர்

(அலுவலக செய்தியாளர்)

எமது இனத்தினுடைய ஆழமான அரசியல் விருப்பங்களுக்கு மதிப்பளித்து தேசிய இனங்களுக்கென சர்வதேச சமூகம் வழிகாட்டும் தீர்வினை எமக்குப் பெற்றுத்தர சிறிலங்கா அரசை தாங்கள் வழிப்படுத்த வேண்டும் எனவும், அரசியல் பாகுபாடற்ற வகையில் எம்மையும் எமது தலைமையான விடுதலைப்புலிகளையும் தங்கள் சமூகம் வரவேற்று எமது இனத்திற்குரிய அரசியல் தீர்வினை

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி லண்டன் பயணம்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக்காலை லண்டன் பயணமாகியுள்ளார். தனிப்பட்ட பயணமாக லண்டன் சென்றுள்ளஅவர் இம்மாதம் இறுதிவாரத்திலேயே நாடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கருணாரட்ணம் அடிகளாரை இயன்மார்ட்டின் சந்தித்து பேச்சு

### 26 சிறுவர்கள் விடுவிப்பு

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளரை நேற்று முன்னாள்சர்வதேச மன்னிப்புச்சபை தலைவரும் இன்றைய அடிப்படை மனித உரிமை அமைப்புக்களின் ஆலோசகருமான இயன்மார்ட்டின் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். நேற்றுக் காலை 10.00 மணிக்கு கிளி நொச்சியிலுள்ளவடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. நிசோரின் செயற்பாடுகள் பற்றியும், கடந்த காலத்தில் இவ்வமைப்பு ஆற்றிவந்தபணி

(IV ஆம் பக்கம் பார்க்க)

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு

பெண் ஆசிரியைகளின் சுமைகள் அவர்கள் வாண்மை விருத்திக்குத் தடையா

ஒரு பன்முகக் கலாசாரத்தில் வாழ்வதற்கான கல்வி

பால்சமத்துவமும் ஆசிரியர் அந்தஸ்தும்....

கச்சேரி, முல்லைத்தீவு.

## கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கான விடுதி நிர்மாணிப்பது தொடர்பாக கடந்த 01.10.2005 ஈழநாதம் தினசரியில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 21.10.2005 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை 28.10.2005ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது கச்சேரியில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ இடலாம்.

கேள்விகள் 28.10.2005 பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும்.

ஏனைய விதிகள் யாவும் 01.10.2005 பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவாறு அமையும்.

**(இமெல்டா சுகுமார்),**
**கேள்விச்சபைத் தலைவரும்,**
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி.13065)

## வணிக,கைத்தொழில், வேளாண் சம்மேளனம்

## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் வணிக கைத்தொழில், வேளாண்சம்மேளனங்களுக்கு கீழேகுறிப்பிட்ட பணிநிலைக்கு தகுதியானவர்களிட மிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-** செயலலுவர் (Executive Officer)

**தகைமை:-** க.பொ.த. (உ/த) வணிகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** தகைமை,அனுபவம் கருத்தில் எடுக்கப்பட்டு சம்பளம் நேரில்பேசித்தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு:-** அரச திணைக்களங்களில் பணியாற்றிய அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

***மேற்குறித்த பணிநிலைக்கு தகுதியானவர்கள் தமது தகைமைச்சான்றிதழ்களுடன் நேர்காணலுக்கு சமுகம் தரவும்.***

### நேர்காணல் விரிப்பு:-

**இடம்:-** வணிக ஒன்றியக் கேட்போர் கூடம், உதயநகர் மேற்கு,கிளிநொச்சி

**காலம்:-** 17.10.2005 (திங்கள்)

**நேரம்:-** காலை 10.00 மணி

(சி.13035)

## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ் காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியான வர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. பணிநிலை:- கணக்காளர் (ஒப்பந்த அடிப்படை)**

**பணி :-** கணக்கீட்டு முறைமைகளுக்கும்,கட்டுப்பாடுகளுக்கும் அமைவாகச் செயற்பாடுகளுக்கான கணக்கீட்டு ஆவணங்களைத் தன்னிச்சையாக உருவாக்கி முறையாகப் பேணுவதுடன், முகாமைக்குச் சரியான தகவல்களை வழங்கும் பதில் சொல்லும் பொறுப்புடைய (**Accountability**) பணியாகும்.

**தகைமைகள்:-** அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் வணிகமாணிப் (**B.Com**) பட்டதாரியாக இருத்தல்/ ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் நுட்பக்கல்லூரி ஒன்றின் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (**HNDA**) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ) பிரிவு 'அ' இல் கூறப்பட்ட தகைமைகளுக்கு சமமான வேறு கணக்கீட்டுத் தகைமைகள் இருத்தல் வேண்டும்.

அல்லது

இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றின் கணக்காளர் பணியில் பத்து (10) ஆண்டுகளுக்குக் குறையாத பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதியம்:-** ரூபா 15,000 மட்டும்

**ஒப்பந்த காலம்:-** 02 ஆண்டுகள்

**அகவை எல்லை:-** 30 ஆண்டுகளுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுய விளக்கங்களுடனும், கீழ்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினம் மேல்மாடி, யாழ்சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியக, மனிதவளப் பகுதிக்கு, 25.10.2005 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றார்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி.13034)


கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் கல்வி நிதிய வளர்ச்சிக்காக

# முத்தமிழ் அரங்கம்

நடன நாடக இசைநிகழ்ச்சி

மூன்றுமணி நேர முத்தமிழ்
சுவை காண முன்வாருங்கள்
நிதிய வளர்ச்சிக்காக உதவிடுங்கள்

காலம்:15-10-2005 (சனிக்கிழமை)
இடம்:பண்பாட்டு மண்டபம்,கிளிநொச்சி.
முதலாவது காட்சி பிற்பகல் 2.00 மணி.
கட்டணம்-ரூபா 100/=
இரண்டாவது காட்சி மாலை 7.00 மணி
கட்டணம் ரூபா 200/=, 500/=,1000/=
ரிக்கற் மண்டப வாசலில்....

மாணவர்களுக்கான காட்சி
15-10-2005 சனி காலை 9.00 மணி.
பண்பாட்டு மண்டபத்தில்
கட்டணம் ரூபா-50/=



விளம்பர அனுசரணை:
**குவி பல்பொறி வாணிபம்**
பிரதான வீதி,கிளிநொச்சி.

(சி.13057)

# கொழும்பிலுள்ள ம.உ. அலுவலகத்துள் அத்துமீறி நுழைந்த குழு தாக்குதல்

சிறிலங்கா மனித உரிமைகள் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கொழும்பு கின்சி வீதியில் ஐந்து மாடிக்கட்டடங்களுடன் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.மேல்மாடி வழியாக அலுவலகத்திறகுள் நுழைந்த நபர்கள் நான்கு மாடிகளிலும் உள்ள அலுவலகங்களுக்குள் நுழைந்து சேதப்படுத்தியுள்ளனர். அனைத்து ஆவணங்கள் மீதும் மண்ணெய் ஊற்றப் பட்டுள்ளது. அதனருகில் தீக்குச்சிகளும் இருந்துள்ளதை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.இச்சம்பவம் குறித்து சிறிலங்கா மனித உரிமைகள் ஆணையத் தலைவர் ராதிகா குமாரசுவாமி கூறியதாவது,

மனித உரிமை ஆணையத்தை தீ மூட்டி எரிக்கும் வகையிலே சிலர் இந்த செயலில் ஈடுபட்டுள்ளனர். தற்போது விசாரித்து வரும் வழக்கை இடை நிறுத்துவதற்காக இதுபோன்ற செயலில் அவர்கள் ஈடுபட்டிருக்கலாம். இந்த கட்டடத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருக்கின்ற போதும் அவர்கள் இதைக் கவனிக்காமல் இருந்துள்ளனர் என்றார் அவர்.இச்சம்பவம் தொடர்பாக கறுவாத்தோட்ட பொலிஸ்அதிகாரி அட்டர்கம கூறுகையில், பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ உத்தரவுக்கமைய முழுஅளவிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாச வேலைகளில் ஈடுபட்டோரின் கைரேகைகள் எடுக்கப் பட்டுள்ளன என்றார்.

இதனிடையே மனித உரிமைகள் ஆணையத் தலைவர் ராதிகா குமாரசுவாமி வெளியிட்ட அறிக்கையில், இடையூறுகள் எதுவந்த போதும் மனித உரிமைகள் ஆணையம்தனது பணியை தொடர்ந்து செயலாற்றும் என்று கூறியுள்ளார்.

# விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கு முன்னுரிமை என்கிறார் ரணில்

சிறிலங்கா சனாதிபதியாக தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான அமைதிப்பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவேன் என்று ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்க கூறியுள்ளார்.

இது குறித்து ரணில் மேலும் கூறியுள்ளதாவது: நான் சனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டால் விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கு முன்னுரிமை கொடுப்பேன். அதே நேரத்தில் சிறிலங்காசுதந்திரக்கட்சியுடனும் இது விடயமாக கருத்தொற்றுமையை ஏற்படுத்த பேச்சுக்கள் நடத்தப்படும் .

கடந்த 2003ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கள் முடக்கியிருக்கலாம் ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் எவ்வளவோ மாற்றங்கள் நடந்து விட்டன.அமைதி முயற்சிகளில் சந்திரிகா குமாரதுங்கவை இணைத்துக்கொண்டு செயற்படவே விரும்புகிறோம்.

சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாத காலத்தில் இராணுவத்தில் ஆறுபடையணிகள் எந்த நேரத்திலும் எந்தச்சூழலையும் எதிர்கொள்ளும் வகையில் முழுவலிமையுடன் உருவாக்கப்படும் . சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை உள்ளூர் கண்காணிப்பாளர்களும் சர்வதேச கண்காணிப்பாளர்களும் அவதானிப்பதை வரவேற்கின்றேன்.

நீதியானதும் வன்முறையற்றதுமான தேர்தல் நடாத்துவது தொடர்பாக சனாதிபதிசந்திரிகா உறுதிப்படுத்தவேண்டும் என்றார் அவர்.

# கொலை வெறியாட்டம்...

வரும் யுத்தநிறுத்த சூழலை மாற்றி அமைத்து ஒரு உறுதிப்பாடான நிலைக்குக் கொண்டுவருவது பற்றிய நோர்வேயின் நிலைப்பாடு பற்றிப் பேசினோம். இதனடிப்படையில் யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றிய நடைமுறைகளை பலமாக்கும் நோக்கில் நோர்வேயின் விசேட பிரதிநிதியாக ஹொவ்டே அனுப்பப்பட்டிருக்கின்றார்அவருடன் இங்கிருக்கின்ற களநிலவரங்களை நாங்கள் விரிவாக எடுத்துக் கூறியிருக் கின்றோம். தொடர் கொலைகள், தாக்குதல்கள், வன்முறைகள் பற்றியும் அவரிடம் விலாவாரியாகக் கூறியிருக்கிறோம்.

கடந்த காலங்களில் இந்தக் கொலைகளும் வன்முறைகளும் தீவிரப்படுத்தபட்டிருக்கின்றன. எங்களுடைய போராளிகளை பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து எங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வரவழைத்திருக்கிறோம். இதன் பின்னர் இந்த ஆயுதக் குழுக்களின் வெறியாட்டம் அதிகரிக்கப் பட்டுள்ளது.

ஆகவே இவற்றை முடிவுக்குக் கொண்டுவந்து இந்த யுத்தநிறுத்த சூழலை பலப்படுத்திக் கொள்வதன் அவசியத் தன்மைகளை முக்கியப்படுத்திக் கூறியிருக்கிறோம்.

**அரசு புலிகள் நேரடிப் பேச்சுப்பற்றி பேசப் பட்டதா?**

இரண்டு தரப்புக்களும் இது பற்றிப் பேசி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும் என்றும் அதற்கான சூழல் உருவாக்கப்படுவதே சிறந்தது எனவும் நோர்வேத் தரப்பால் முன்வைக்கப்பட்டது. இதற்கு நாமும் எங்களது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினோம். அதாவது நோர்வே வெளியுறவு அமைச்சரின் வேண்டுகோளின் அடிப்படையில் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் தயார் என எங்கள் தேசியத் தலைவர் அறிவித்திருந்தார்.

நோர்வேத்தரப்பின் முயற்சிக்கும், அனுசரணைக்கும் நாங்கள் மதிப்பளித்து எந்த நேரத்திலும் எந்த வேளையிலும் நடுநிலைமையான இடத்தில் சந்தித்துப் பேச்சு நடாத்த தயாராய் இருக்கிறோம் என்ற அறிவிப்பு தேசியத் தலைவரால் விடுக்கப்பட்டது. ஆகவே எமது நிலைப்பாடுகளில் எந்த மாற்றமும் இல்லை. தளம்பலின்றி மிகவும் உறுதியாக நாங்கள் இருக்கிறோம். இன்றைய சந்திப்பின் போது இதனை வலியுறுத்தும் படி தேசியத்தலைவர் கூறியிருந்தார். அதன்படி யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றிய பேச்சுக்கள் விரைவில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறோம்.

**பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றி அரச தரப்பில் இருந்து ஆலோசனைகள், குறிப்புக்கள் ஏதாவது அனுப்பப்பட்டதா?**

அரசதரப்பிலிருந்து எந்தவிதமான ஆலோசனைகளும் வரவில்லை. நோர்வேத் தரப்பின் வேண்டுகோளாகவும், நிலைப்பாடாகவும்தான் இந்தக் கருத்துக்கள் முன்வைக் கப்பட்டன.

இரண்டு தரப்பும் பேச்சு மேசைக்கு வரவேண்டும் என்பதும் இருதரப்பும் நேரடியாகச் சந்தித்துப்பேசி யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றிய நடைமுறைகளைப் பலப்படுத்த வேண்டும் என்பதும் அவர்களது நிலைப்பாடு. அதன்படி நோர்வேத் தரப்புக்கு எங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

**சனாதிபதித் தேர்தலுக்கு முன்னராக இவ்வாறான பேச்சு நடப்பதற்கான நிலைப்பாடு உள்ளதா?**

இதில் நாங்கள் எந்தவிதமான ஊகங்களையும் எதிர்வுகூறல்களையும் கூறமுடியாது. ஏனெனில், அனைத்து நடவடிக்கைகளிலும் சமதரப்பென்ற இருதரப்பில் நாங்கள் ஒரு தரப்பு. நாங்கள் நினைப்பதெல்லாம் நடந்துவிடுவதில்லை. அதற்கு அரசதரப்பின் இணக்கப்பாடும் ஒத்துழைப்பும் தேவை. ஆகவே அரச தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைக்கும்வரை நாம் இது பற்றி எதுவும் கூறமுடியாது.

இரண்டு தரப்பையும் பேச்சு மேசைக்கு கொண்டுவர வேண்டும். அதன் மூலம் சமாதான முயற்சிகளை பலப்படுத்த வேண்டும் என்பதிலும் நோர்வேத் தரப்பினர் மிகவும் ஆர்வமாகவும், உறுதியாகவும் உழைக்கின்றார்கள். ஆகவே அவர்களிடம் தான் இதனைக் கேட்க வேண்டும்.

**போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். ஆனால் அது இன்னும் நடை முறைப்படுத்தப்படவில்லை. இதற்காக அரசாங்கத்திற்கு நோர்வேத் தரப்போ அல்லது கண் காணிப்புக்குழுவோ எந்த அழுத்தத்தையும் கொடுத்ததாகத் தெரியவில்லை. இது பற்றி பேசப்பட்டதா?**

இது பற்றித்தான் இன்றைய பேச்சுக்களின்போது விரிவாக எடுத்து விளக்கினோம். யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை விதிகளில் இதுவும் ஒன்று. ஆகவே இந்த யுத்தநிறுத்த உடன்பாட்டு அமுலாக்கத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்களை தாயகப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும். இது உடன்படிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் அண்மைக்காலத்தில் இந்த ஆயுதக்குழுக்கள் மீண்டும் ஆயுதமயப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு ஆயுதமயப்படுத்தப்பட்டவர்கள் எமது தாயகப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வன்முறைகளில் இறங்கியுள்ளனர். இதன் மூலம் புத்திஜீவிகள், எமது ஆதரவாளர்கள், பொதுமக்கள், போராளிகள் என அனைவர் மீதும் தாக்குதல் தொடுக்கின்ற சூழலுக்குள் அவர்கள் தீவிரமாக இறங்கி யிருக்கின்றனர்.

இலங்கை அரசாங்கம், ஆயுதக்குழுக்கள் எவையும் தம்மிடம் இல்லை என்று மறுத்த நிலையிலும், அவர்களின் பாதுகாப்பில் இயங்குவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கண்காணிப்புக் குழு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் போய் ஆயுதக்குழுக்களை கண்டு உறுதிப்படுத்தி அதனைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறது. இலங்கை அரசாங்கமும் அதைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறது.

இந்த நிலையை நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம். அண்மையில் இராணுவத் தளபதி, தம்மிடம் ஆயுதக்குழுக்கள் எதுவும் இல்லை. அவற்றை நாம் கலைத்து விட்டோம் என்றெல்லாம் அறிக்கைவிட்ட மறுநாளே மட்டக்களப்புப் பிரதேசத்தில் எமது போராளிகள் மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. அதுவும் இராணுவக் காப்பரண்களுக்கு அண்மித்த பகுதிகளில் இருந்து அது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தாக்கியவர்களை எங்கள் போராளிகள் கலைத்துச் சென்றவேளை அவர்கள் இராணுவக் காப்பரண்களுக்குள் தான் போயிருக்கிறார்கள்.

அந்தச் சம்பவத்தை ஆதாரபூர்வமாக இன்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதன் பின்னரும் எங்கள் போராளிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் இராணுவக் காப்பரணுக்குள் இருந்துவந்து தான் தாக்கிவிட்டு அந்தப் பகுதியை நோக்கி தப்பிச்சென்று சென்றுவிட்டார்கள். இந்த விடயங்கள் அனைத்தையும் ஆதாரபூர்வமாக எடுத்து விளக்கியிருக்கிறோம். எங்களது போராளிகள் வெளியேறிய பின்னர் அங்கே இராணுவத்தோடு ஆயுதக்குழுக்கள் நடமாடுகின்ற செய்திகள் எங்களுக்கு வந்துகொண்டிருக்கின்றன. அவர்களின் கொலை வெறியாட்டம் இப்போது தீவிரமடைந்துள்ளது. இதனை ஆதாரபூர்வமான தகவல்களுடன் சுட்டிக்காட்டியுள்ளோம்.

எனவே உடனடியாக இதற்குத் தீர்வுகண்டு இருதரப்பும் ஏற்றுக்கொண்ட யுத்தநிறுத்த விதிமுறைகளை அமுலாக்குவதில் இருதரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை உறுதி செய்துகொள்ளாவிட்டால் நிச்சயமாக இந்த யுத்தநிறுத்த சூழல் தொடர்ந்து பேணப்படுவது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

ஆகவே ஒரு தரப்பென்ற வகையில் நாம் அதற்கு முழு அளவு அர்ப்பணிப்புடனும் ஈடுபாட்டுடனும் இருக்கிறோம். இலங்கைப்படைகளையும் இதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் வகையில் இலங்கை அரசு தீர்க்கமான முடிவுகளை எடுத்து யுத்தநிறுத்த சூழலை பலப்படுத்துவதற்கும் அமுலாக்குவதற்கும் ஏற்ற வகையில் செயற்பட வேண்டும் எனவும் இன்று கண்காணிப்புக்குழுவிடம் வேண்டியிருக்கிறோம். அவர்களும் எமது நிலைப்பாட்டை தெளிவாக புரிந்து கொண்ட நிலையில் தான் இன்றைய கருத்துப் பரிமாற்றம் அமைந்துள்ளது.

**இந்த நிலைமைகளை எப்படி மாற்றலாம் என்பது பற்றி உங்களது யோசனைகள் எதையாவது தெரிவித் திருக்கிறீர்களா?**

எங்களது யோசனைகளை அவர்களிடம் தெரிவித்திருக்கிறோம். உடனடியாகவே இருதரப்பும் ஒரு நடுநிலையான இடத்தில் இருந்து பேசி யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றிய நடைமுறைச் சாத்தியமான முடிவுகளை எடுக்க வேண்டும். குறிப்பாக யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருதரப்பும் ஏற்றுக்கொண்ட நடைமுறைகளை விரைவாக அமுல்படுத்துகின்ற செயற்பாட்டை தீவிரப்படுத்த வேண்டும்.

இந்த ஆலோசனையைத்தான் நோர்வேத் தரப்புக்குக் கூறியிருக்கிறோம். நாங்கள் யுத்தநிறுத்த சூழலைப் பலப்படுத்துவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறோம். எங்கள் மக்களின்பிரச்சினைகளுக்கும்,அரசியல் அபிலாசைகளுக்குமான தீர்வைக் கொண்டுவரும் முயற்சிகளுக்கும் நாம் எப்பொழுதுமே தயாராகவே இருக்கிறோம். இதனை நாம் அவர்களுக்கு தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

அண்மைக்காலமாக சர்வதேச சமூகத்தின் மத்தியில் அரச தரப்பு தீவிரமான எதிர்ப்பரப்புரைகளை மேற்கொண்டுவருகிறது. விடுதலைப்புலிகள் தொடர்பாகவும், எங்கள் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் பற்றியும் மிகத் தவறான கருத்துக்களைப் பரப்புவதில் சிறிலங்கா அரச தலைமைகள் மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றன இதனையும் நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். எங்களது தலைமைப்பீடத்தின் தெளிவான, உறுதியான நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு தெளிவாக்குங்கள். விடுதலைப்புலிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள். சிறிலங்கா அரச தலைமைதான் இதனைத் தட்டிக்கழித்துக் கொண்டு உதாசீனம் செய்து உலகளவில் எமக்கெதிரான பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டிருக்கிறார்கள். இதுதான் இன்றைய நிலை.

**ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை குறித்துப் பேசப்பட்டதா?**

ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதிக்கவில்லை. விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஐரோப்பிய பயணத்தை வரவேற்பதில்லை என்பதைத்தான் அறிவித்திருக்கிறார்கள். அது துரதிர்ஷ்டவசமான ஒரு தலைப்பட்ச வெளிப்பாடு. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மத்தியிலும் உண்மை நிலையை எடுத்துச் சொல்வதற்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும். இருதரப்பின் உண்மைத் தன்மைகளை அவர்கள் அறிந்து நியாயமான, நடுநிலைமையான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டும் என்பது பற்றிக் கூறினோம். இதற்கு நோர்வேத் தரப்பு முயலவேண்டும்.

சர்வதேச சமூகம் எங்கள் மக்களது உணர்வுகளை, அபிலாசைகளை உணர்ந்துகொண்டு முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்கள் எதிர்பார்ப்பு. அதை இன்றும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

**தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்ற சூழ்நிலையில் நீங்கள் அரசாங்கத்தில் யாருடன் வன்முறைகளை நிறுத்துவது, போர்நிறுத்தத்தைச் சீராகக் கடைப்பிடிப்பது பற்றி கதைக்க முடியும்?**

நான் நினைக்கின்றேன் இன்றுவரை சிறிலங்கா நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் பூரண அதிகாரத்தின் உள்ளும், கட்டுப்பாட்டின் கீழும் தான் இலங்கை அரசாங்கமும், அரச படைகளும் இயங்கிவருகின்றன.

ஆகவே அவர்தான் களநிலைமைகளைச் சீராக்கவேண்டும். தேர்தல் வருவதாக இருந்தாலும் தேர்தல் வந்து ஆட்சித் தலைமைகள் மாறினாலும் தேர்வு செய்யப்படுகின்ற ஆட்சித் தலைமை பொறுப்பேற்கும் வரையும் இன்றிருக்கும் அரச தலைமைதான் அனைத்திற்கும் பொறுப்பு.

அவர்களிடம்தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பூரண அதிகாரம் உள்ளது. ஆகவே அவர்கள் இதற்கு ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பது தான் பொருத்தமானது.

இன்று காலை விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேயின் விசேட தூதுவர் டொன்புறூவ்ஹொவ்டே, அடங்கிய குழுவினரை விடுதலைப் புலிகளின் சமாதானசெயலகத்தில் வைத்து தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினர். மேற்படி சந்திப்பு காலை 10.00மணிமுதல் 12.00மணி வரை இடம் பெற்றது.

**எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஏதேனும் பேசப்பட்டதா?**

இன்றைய சந்திப்பின்போது தேர்தல் பற்றி எதுவும் பேசவில்லை.

**சனாதிபதித்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தமது பிரச்சார நவடிக்கைகளை விடுதலைப்புலிகளின கட்டுப்பாட்டுப்பிரதேசங்களுக்குள் மேற்கொள்ளலாமா?**

எம்மைப்பொறுத்தவரையில் எங்கள் மக்கள் எதை விரும்புகிறார்கள் அவர்களின் தீர்மானங்கள் எது என்ற அடிப்படையில் அனைத்துக்குமே எங்கள் மக்களின் தீர்மானங்கள்தான் பதில் கூறும். தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் இதற்கு எந்தத் தீர்மானங்களையும் நிலைப் பாடுகளையும் எடுத்து அறிவிக்கவிரும்பவில்லை. எங்களது ஒட்டுமொத்த மக்களே இதுபற்றி தீர்க்கமான முடிவை எடுப்பார்கள் அவர்களின் விருப்பின் அடிப்படையில் எதுவும் நடைபெறலாம். அதனடிப்படையில் சிறிலங்காவினுடைய தேர்தல் தொடர்பாக தமிழ்மக்கள் என்ன கருதுகிறார்கள் அவர்களின் ஈடுபாடு எவ்வாறு இருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு அவர்கள் செயற்படலாம். இதற்கு நாம் எந்தவித தடையும் போட விரும்பவில்லை.

**அவர்கள் அந்தமக்களைச் சந்திப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடிகளைக் கடக்கவேண்டியுள்ளது?.**

நிச்சயமாகஇன்னொருவரது பாதுகாப்புக்குள்ளும், கட்டுப் பாட்டுக்குள்ளும் இருக்கின்ற தேசத்துக்குள் இன்னொரு தேசத்திலிருந்து வருபவர்கள் நுழைவதானால் அதற்கு ஒரு சில நடைமுறைகள் உள்ளன.

அந்த நடைமுறைகளைப் பேணி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.ஏனெனில் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாகவே இரண்டு கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. எல்லைக்கோடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. எனவே இன்னொருவரின் எல்லைக்குள் வருகின்றபொழுது அந்த நிர்வாகத்தை நடத்துகின்ற தலைமையிடம் அனுமதிபெறவேண்டியுள்ளது. அதற்காக ஒழுங்கமைப்பு சட்டபூர்வமாக இடம்பெறவேண்டும். இதுதான் நடைமுறை. யுத்த நிறுத்த உடன்பாட்டிலும் இதுதான் சொல்லப்பட்டுள்ளது.ஆகவே இத்தகைய முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ளுகின்றபோதுதான் இது பற்றி நாம் எங்களது நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தலாம். (லோ,தீ)

# நாட்டுப்பற்றாளர் ந.சிவகடாட்சம் அவர்களின் இறுதி வணக்க நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் முதல்வர் நாட்டுப்பற்றாளர் ந.சிவகடாட்சம் அவர்களின் இறுதி வணக்க நிகழ்வுகளில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு தமது இறுதி வணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.





இறுதிச் சடங்குகள் அவருடைய இல்லத்தில் இடம் பெற்று பின்னர் நல்லடக்கம் கோப்பாய் இந்து மயானத்தில் இடம் பெற்றது. தமிழீழ தேசியக் கொடி போர்த்தப்பட்ட அவரது புகழுடல் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு இறுதி வணக்கத்திற்காக கொண்டு வரப்பட்டது. அங்கு பாடசாலை உப அதிபர் திருமதி புஷ்பமலை தலைமையில் இறுதி வணக்கக் கூட்டம் இடம்பெற்றது. நினைவுச் சுடரினை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ம.க.ஈழவேந்தன், மு.சிவநேசன், செ.கஜேந்திரன், யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் க.செல்வரத்தினம், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.விக்கினேஸ்வரன், தமிழர் ஆசிரியர் சங்க இணைச் செயலாளர் க.பஞ்சலிங்கம் உட்பட்டோர் ஏற்றிவைத்தனர்.

# சார்ள்ஸ் விஜேவர்தன கொலை வழக்கை தொடர்ந்து விசாரிப்பதா?

## -சட்டமா அதிபரிடம் நீதிபதி கேள்வி

யாழ்.பொலிஸ் அதிகாரியாக இருந்த சார்ள்ஸ் விஜேவர்தனவின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான வீரபாண்டியன் கோபியை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இக்கொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் புதன் கிழமை கொழும்பு மாவட்ட நீதிபதி குசல சறோஜினி வீரவர்த்தன முன்னிலையில் நடைபெற்றது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக சந்தேக நபரான கோபியை நீதிமன்றத்துக்கு அழைத்து வரவில்லை என்று பொலிசார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்ற நீதவான் அங்கு விசாரணைகளை நடத்தினார்.

இந்தக் கொலை வழக்கில் கோபியை அடையாளம் காண்பதற்காக இரு முறை அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டபோதும் அடையாளம் காணப்படாத காரணத்தினால் வழக்கைத் தொடர்ந்து விசாரிப்பதா என்பதை சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நீதிபதி குசலசறோஜினி வீரவர்தனத்தவை உத்தரவிட்டார்.

இது தொடர்பான அனைத்து விசாரணை அறிக்கைகளையும் சட்டமா அதிபருக்கு வழங்க வேண்டுமென்றும் இரகசியப் பிரிவுப் பொலிசாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

### கருணாரட்ணம்...

பற்றியும் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்தார் இயன் மார்ட்டின் மேலும் இன்றைய நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக அவர் முன்னிலையிலும், யுனிசெப் பிரதிநிதி முன்னிலையிலும்.போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னிலையிலும், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தாமாகவே இணைந்து கொண்ட 18 வயதுக்குட்பட்ட 26 பேர் நிசோரில் விடுவிக்கப்பட்டனர். .இச் செயலை இயன்மார்ட்டின் புகழ்ந்து பாராட்டியதுடன் தொடர்ந்து இப்படியாகச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து நோர்வே வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட பணிப்பாளர் சொல்பிறிட் லியன், நோர்வே தூதுவராலயத்தின் இரண்டாவது செயலாளர் ரொம் நப்ஸ்கோக் ஆகியோர் வருகை தந்து நிர்வாகசபை அங்கத்தவர்களுடன் கலந்துரையாடினார்கள். மேற்படி சந்திப்புக்களும், கலந்துரையாடல்களும் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததென அமைப்பின் பணிப்பாளர் அருட் திரு. கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்தார். (-லோ-தீ-)

### மிருசுவில்....

ரணை கடந்த ஒரு வருடமாக தடைப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிருசுவிலில் எட்டுப் பொதுமக்களைக் கொலை செய்து மலக்குழியில் வீசிய சம்பவம் தொடர்பில் ஐந்து படையினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் குறித்த படையினர் தற்சமயம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### டொன்....

சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்நகர்த்திச் செல்வதற்காகவும் நோர்வேத் தரப்பால் இவர் சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் நெருக்கடிகள் பற்றிப் பேச்சு நடத்திய ஹொவ்டே நேற்றைய பேச்சுக்கள் பற்றியும் அதன் போக்குகள் தொடர்பாகவும் செய்தியாளர்களிடம் எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்க மறுத்துவிட்டார். (லோ,தீ)

## நவ. 7,8 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு நவம்பர் மாதம் ஏழாம்திகதியும், எட்டாம் திகதியும் நடைபெறவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் இம்மாதம் 10ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டது. தபால் மூலம் வாக்களிப்போருக்கு அவர்கள் தொழில்புரியும் திணைக்களங்கள் கூட்டுஸ்தாபனங்களின் முகாமையாளருக்கு இம்மாதம் 27ஆம் திகதி வாக்காளர் அட்டை அனுப்பிவைப்ப தற்கு தேர்தல் திணைக்களம் தீர் மானம் எடுத்துள்ளது.

### பாதுகாப்பற்ற....

இயன்மார்ட்டின் கூறியதாவது;

மனித உரிமைகள் தொடர்பாக சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் 2003ஆம் ஆண்டு ஆலோசனைகளை அளித்திருந்தேன் தற்போது மக்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளதாக உணருகின்றனர். போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு மனித உரிமை செயற்பாடுகள் முக்கியமானது. மனித உரிமை செயற்பாடுகள், போர்நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் முன்னேற்றும். நான் இங்கு ஒரு கண்காணிப்பாளராக வரவில்லை. ஒரு ஆலோசகராகவே வந்துள்ளேன். எனது ஆலோசனைகள் அந்தரங்கமானவை.

சில முக்கியமான விடயங்கள் குழந்தைகள் பாதுகாப்பு, இடம்பெயர்ந்தோர் திரும்புதல் போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன.

சிறிலங்காவின் சமாதான செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடன் ஆலோசனை நடத்தவுள்ளேன். சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கும் திட்டம் ஏதும் இல்லை என்றார் அவர்.

சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும், மனித உரிமைகளைப் பேணுவதே போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவதற்கு முக்கியம் என்பதையும் இருபகுதியினரும் இணைந்து மனித உரிமைகளை பேண வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டேன்.

*** விடுதலைப்புலிகளால் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் கடைப்பிடிக்கப்படுவதில் நீங்கள் திருப்தியடைந்துள்ளீர்களா?**

இவ்விடயத்தை நாம் கண்காணித்து வருகின்றோம். எதிர்காலத்திலும் மனித உரிமைகள் விடயம் மக்களின் பாதுகாப்பு போன்ற விடயங்கள் இருபகுதியினராலும் முன்னுரிமையோடு கடைப்பிடிக்க வேண்டும்.

*** அவற்றுக்கான உங்களது ஆலோசனை என்ன?**

அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து இம்மனிதவுரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். (லோ,தீ)

### பகிரங்க....

இவ் அழைப்பை விடுத்தார்.

இதேவேளை தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விரைவாக விவாதிக்குமாறு கேட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை விவகாரம் குறித்து நீதிமன்றத்திலுள்ள வழக்குகளை விரைவாக விசாரித்து நிறைவு செய்யுமாறு ஆணைக்குழுவினருக்குக் கூறுமாறு மகிந்தராஜபக்ஷவைக் கேட்டுள்ளார்.

அவ்வாறு இல்லாவிட்டால் நீதிமன்றத்திற்குச்சென்று சிக்கலடைய வேண்டிய அவசியம் இல்லை எனவும், அவ்வாறு செய்தால் அவருடன் பகிரங்க விவாதம் ஒன்றிற்குச் செல்லத்தயார் எனவும், இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் விவாதம் நடாத்த தாம் தயார் எனவும் அவர் மேலும் கூறினார்.

### எமது....

பெற்றுத்தர தாங்கள் முனைப்புடன் செயற்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் மற்றும் செய லாளர்களைக் கேட்டு, கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியமும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவர் சங்கமும் மகஜர்களை அனுப்பிவைத்துள்ளது.

இதில் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்பிவைத்த மகஜர்களின் விபரம் வருமாறு,

இலங்கைத்தீவில் வாழும் தமிழ் பேசும் தேசிய இனமானது கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள பேரினவாத அரசின் கீழ் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எமது அனைத்து அரசியல், சமூக, பொருளாதார, குடியியல் உரிமைகளும் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எமது இனத்தின் மீட்சிக்கான தலைமைத்துவமாக தமிழீழ விடுதலைப்புலிகளை நாம் பரிபூரணமாக ஏற்றுக்கொண்டுள்ளோம். அத்தகைய நிலைப்பாட்டில் எமது தலைமையை தங்கள் சமூக அரசுகள் வரவேற்க விரும்பவில்லை எனும் செய்தி எமது இனத்தை மிகுந்த கவலையடையச் செய்துள்ளது என்பதுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் நடுநிலைமை தொடர்பாக எம்மை ஆழ்ந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

எமது இனப்பிணக்கு வரலாற்றில் உயர் நாகரீக வழிமுறையான பேச்சுவார்த்தை செயல் முறையூடாக எமக்கான அரசியல் தீர்வினை பெற்றுக் கொள்ள பல தடவைகள் முயற்சித்தோம். அவ்வேளைகளில் எல்லாம் நாம் ஏமாற்றப்பட்டோம்.

சிறிலங்கா அரசின் இத்தகைய இன ஒடுக்கல் நடவடிக்கைகளால் விரக்தியுற்ற நிலையில் புறமார்க்கம் எதுவுமின்றி எமது இனம் ஆயுதம் ஏந்திப்போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம். இத்தகைய போராட்டம் மூலம் பெற்றுக்கொண்ட தற்காப்பு பலத்தை அடிப்படையாகக் கொண்டும் சர்வதேச சமூகத்தின் பெருவிருப்பிற்கும் கருத்து நிலைப்பாட்டிற்கும் மதிப்பளித்து சமாதான முயற்சிகளில் 2002ஆம் ஆண்டில் இருந்து ஈடுபட்டுள்ளோம்.

இத்தகைய சமாதான செயற்பாடுகளின் நம்பகத் தன்மைக்கும் நேர்மைத் தனத்திற்கும் எமது இனம் நம்பியது. நோர்வே அனுசரணையாளர்கள் உள்ளிட்ட ஐரோப்பிய சமூகத்தினரையே என்பதை தவிர சிறிலங்கா அரசை அல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

சமகாலத்தில் எமது இனத்தின் விடுதலைப்போராட்டம் விடுதலைப் புலிகளை தலைமையாக ஏற்றுக் கொண்ட தமிழ் பேசும் மக்களின் போராட்டமே என்பதை மக்கள் எழுச்சி நிகழ்வுகள் பரவலாக இடம்பெற்று வருவதன் மூலம் வெளிக்காட்டப்படுகின்றது.

சிறிலங்காவில் இன ஒடுக்கல் அரசும், சனாதிபதியும் உள்நாட்டில் ஒரு ஒடுக்குமுறை கொள்கையை கடைப்பிடிக்கும் அதேவேளை, சர்வதேச சமூகத்திடம் தங்களை மிக உயர்ந்த சனநாயக மனித உரிமை வாதிகளாக காட்டிக்கொள்ள முயன்று வருகின்றனர். இந்நிலையில்தான் சிறிலங்கா இனவாத அரசின் சார்பு நிலை அறிக்கைகளையும், பொய்மைக் கருத்துருவாக்கங்களையும் நம்பி எமது இனத்தின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை வரவேற்க தங்கள் அமைப்பு விரும்பவில்லை எனும் செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைகின்றோம். இத்தகைய தங்களின் முடிவு அரசின் இன ஒடுக்கல் செயல்முறைக்கு ஊக்கம் அளிப்பதாக அமையும். அத்துடன் தங்களின் நடுநிலைமை மனித குல விழுமியங்கள் பற்றி உயர்ந்த கரிசனை மீதும் கேள்வியை ஏற்படுத்து கின்றது.

எமது இனத்தினுடைய ஆழமான அரசியல் விருப்பங்களுக்கு மதிப்பளித்து தேசிய இனங்களுக்கென சர்வதேச சமூகம் வழிகாட்டும் தீர்வினை எமக்குப் பெற்றுத்தர சிறிலங்கா அரசை தாங்கள் வழிப்படுத்த வேண்டும் எனவும் அரசியல் பாகுபாடற்ற வகையில் எம்மையும் எமது தலைமையான தமிழீழ விடு தலைப் புலிகளையும் தங்கள் சமூகம் வரவேற்று எமது இனத்திற்குரிய அரசியல் தீர்வினை பெற்றுத்தர தாங்களை முனைப்புடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்துவதற்காக கிளிநொச்சி வருகை தந்த நோர்வே விசேட தூதுவர், சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் இயன் மாட்டின் ஆகியோரிடம் கிளி. மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியமும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவர் சங்கமும் மகஜர்களைக் கையளித்துள்ளது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த அவர்களிடம் இரு அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த மகஜர்களைக் கையளித்தனர். (லோ, தீ)

### தமிழ்ச்செல்வன்....

கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ நீதி நிர்வாகத்துறை செயற்பாடுகளைப் பார்வையிடுவதற்காக கிளிநொச்சியில் அமைந்துள்ள சட்டக் கல்லூரிக்குப் பயணத்தை மேற்கொண்டார். அங்கு சென்று நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து நீதித்துறையின் செயற்பாடுகள் பற்றிக் கேட்டறிந்தார். அத்துடன் நீதியாளர்கள், சட்டவாளர்களைச் சந்தித்து மனித உரிமைகள் பேணப்படுவதன் அவசியம் பற்றி விளக்கிக்கூறினார்.

தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்துக்கு பிற்பகல் சென்று தமிழீழ காவல்துறையின் செயற்பாடுகளில் மனித உரிமைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் பற்றிக் கேட்டறிந்து கொண்டார். காவல்துறையினர் மனித உரிமைகளுக்கு எந்த வகையில் மதிப்பளிக்கின்றார்கள் என தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் இயன்மார்ட்டின் அவர்களுக்கு எடுத்து விளக்கினார். இச்சந்திப்பு பிற்பகல் 4.20 மணிக்கு நிறைவடைந்தது. (லோ,கு)


## பிற்போடப்பட்டுள்ளது

பாடசாலைகளில் 15ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள யாழ்.மறைமாவட்ட திருமறைத் தேர்வு மறுஅறிவித்தல் வரை பிறபோடப்பட்டுள்ளது.

அருட்திரு.அ.பெ.பெனற்,
கிளி.முல்லை மறைக்கோட்ட முதல்வர்,
கிளிநொச்சி.

(சி.13066)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.